இலங்கை HDFC வங்கி



# உங்களது எதிர்காலம்

HDFC BANK

*The Housing Bank...*

இலங்கை HDFC வங்கி
ஆண்டறிக்கை 2012

# இரண்டாவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கையின் பின்னணி

ர்னுகுஊ வங்கியின் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட ஆண்டறிக்கை 2011 ஆம் நிதியாண்டுக்காக வெளியிடப்பட்டது. பங்குதாரர்களின் சாதகமான அதிகளவான வரவேற்பினை கருத்திற் கொள்கையில் ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கை தயாரிக்கும் முயற்சியினைத் தொடர்ந்து செயற்படுத்துவதற்கு மிகவும் ஊக்கமளிக்கப்பட்டிருந்தது. நிதியியல் இலாபத்தில் மட்டுமல்லாது நீண்டகால ரீதியில் சாதகமான சமூக, சூழல் சார்ந்த மற்றும் பரந்த பொருளாதார இலாபங்களை நாம் வழங்குவதில் உறுதிசெய்கின்ற தங்களது ஆர்வத்தினை நல்கிய எமது பங்குதாரர்கள் மீதே ர்னுகுஊ வங்கி தங்கியிருக்கின்றது. ர்னுகுஊ வங்கியானது 2012 இல் சவால்மிக்க நிதியாண்டு ஒன்றினை கடந்து சென்றது. நிலையான உபாயங்கள் அமுல்படுத்தப்பட்டு வருகின்றன என்பதனூடாக நோக்குவதற்கு எமது தொழிற்பாட்டின் சாதகமான மற்றும் பாதகமான அம்சங்கள் இரண்டுடன் கூடிய அதிக தகவல்மிக்கதாக இருந்து வருகின்ற கடினமான சூழலொன்று இருப்பதை நாம் நம்புகின்றோம். நீண்டகால ரீதியில் அனைத்து பங்குதாரர்களினதும் நலன்களை நிறைவேற்றுவதை நோக்காகக் கொண்டிருப்பது எமது பணி மற்றும் நோக்கினை நோக்கி நாம் வளர்ந்து செல்வதற்கு வழியமைத்தது.

## அறிக்கை காலமும் சட்டகமும்

இவ்வாண்டறிக்கை 2012 ஜனவரி 01 தொடக்கம் 2012 டிசம்பர் 31 வரையான காலத்திற்கான வங்கியின் தொழிற்பாடு பற்றிய ஒருங்கிணைக்கப்பட்ட கண்ணோட்டமொன்றினை வழங்குவதற்கு முயல்கின்றது. மிகவும் அண்மைக்கால அறிக்கையானது 2011இன் நிதியியல் செயலாற்றுகையினை உள்ளடக்கி 2012 மே இல் வெளியிடப்பட்டது. இவ்வறிக்கையினை தொகுப்பதில் ர்னுகுஊ வங்கி ஏற்புடையவாறு பின்வரும் நியமங்கள், சிறந்த நடைமுறைகள் மற்றும் வழிகாட்டல் கோவை ஆகியவற்றுடன் இணங்கியொழுகுகின்றது.

| |
|---|
| இலங்கை கணக்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள் |
| நிதியியல் சட்டமும் இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட விதிகளும் ஒழுங்கு விதிகளும் |
| கொழும்பு பங்கு பரிமாற்றம் (CSE) |
| இலங்கை பிணையங்கள் பரிமாற்று ஆணைக்குழு மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர்கள் நிறுவனமும் இணைந்து வெளியிட்ட சிறந்த கூட்டு ஆளுகை மீதான நடைமுறைக் கோவை |
| 2007 இன் 7 ஆம் இலக்க கம்பனிகள் சட்டம் |
| உலக அறிக்கையிடல் முயற்சி நிறுவனம் (Global Reporting Initiative) இனால் வெளியிடப்பட்ட நிலைபெறத்தக்க அறிக்கையிடல் ஜி 3.2 வழிகாட்டல் மற்றும் சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடல் சபை (IIRC) இனால் வெளியிடப்பட்ட ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையிடலுக்கான சட்டகம். |

## பங்குதாரர் பின்னூட்டல்

இவ்வறிக்கையுடன் இணைக்கப்பட்டுள்ள முதலீட்டாளர்/பங்குதாரர் பின்னூட்டல் வங்கியினால் நடாத்தப்பட்ட தொடர்ச்சியான பங்குதாரர் ஈடுபாட்டு செயன்முறைப்படுத்தலுக்கு மேலதிகமான பின்னூட்டல் நுட்பமொன்றாக கருத்திற் கொள்ளப்பட்டுள்ளது.

## பதிப்பாசிரியர் தகவல்

டி.விதான பத்திரன, பிரதம நிதி அலுவலர், HDFC வங்கி, மின்னஞ்சல் cfo@hdfc.lk, தொ.பே. 4717864, 0773017630,
தொலைநகல் :- 2423364

பல நாடுகளிலுள்ளது போன்று வளர்ந்து வரும் நாடொன்றிலும் மக்களுக்கான வீடமைப்பு எதிர்காலமானது முக்கிய சிந்தனை மற்றும் முன்னேற்ற விடயமாக தோற்றம் பெற்றுள்ளது: எமது தேவைகளும் வேறுபட்டவையல்ல. இதற்காக வேண்டி HDFC வங்கியானது புகலிட இலங்கையொன்றினைத் தோற்றுவிக்கும் பொருட்டு சமூகத்தின் சகல அந்தஸ்த்தினருக்குமாக வீடமைப்பு நிதித் தெரிவுகளை வழங்குவதில் முக்கிய நடவடிக்கையொன்றினை எடுத்துள்ளது. சாதாரண குடும்ப வீடு முதல் நகர குடியிருப்பு வரை தரம் மற்றும் நம்பிகை அடிப்படையில் வீடமைப்புடன் தொடர்புபட்ட நிதிவழங்கும் எமது நோக்கினை எய்துவதற்கு எம்மை தூண்டுகின்ற மற்றும் பிரதம முகாமையாளர் குவிக்கின்ற எதிர்காலத்தை நாம் காணுகின்றோம்.

HDFC BANK

*The Housing Bank...*

# உள்ளடக்கம்

அறிக்கை வழியலகுகள் 3
நிதியியல் சிறப்புக் கூறுகள் 4
தொழிற்பாட்டு சிறப்புக் கூறுகள் 5
தவிசாளர் அறிக்கை 6
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலரின் மீளாய்வு 10
எமது நோக்கும் செயற்பணியும 15
கூட்டுத் தகவல்கள் 16
பணிப்பாளர்கள் சபை 17
பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களின் விபரங்கள் 18
கூட்டு முகாமைத்துவம் 20
தேசிய பொருளாதாரப் பொறுப்புடைமை 22
பணிப்பாளரகள் சபை அறிக்கை 30
சபை உப குழுக்களின் அறிக்கை 34
கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை 41
வருமானக் கூற்று 44
அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று 45
நிதியியல் நிலைக் கூற்று 46
காசுப்பாய்ச்சல் கூற்று 47
ஒப்புரவு மாற்றக் கூற்று 48
கணக்கீட்டு கொள்கைகள் 49
நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் 53
மூலதன போதுமான தன்மை 64
பங்குத் தகவல்கள் 66
பெறுமதி சேர்க்கப்பட்ட கூற்று 69
பத்து வருட புள்ளிவிபர சாரம்சம் 70

# அறிக்கை வழியலகுகள்

### முக்கியத்துவம்
இவ்வறிக்கையினை தயாரிக்கும்போது அனைத்து முக்கிய தகவல்களும் பகுப்பாய்வு செய்யப்பட்டு வெளிப்படுத்தப்பட்டுள்ளன. முக்கியத்துவமானது நிதியியல் செயலாற்றுகை, ஐந்தொகைப் பெறுமானங்கள் மற்றும் பங்குதாரர் நலன்கள் மீதான தாக்க மட்டம் ஆகியவை தொடர்பில் வரையறை செய்யப்பட்டுள்ளது. இவ்வாறு அறிக்கையானது எமது பங்குதாரர்களின் மதிப்பீடு மற்றும் தீர்மானங்களில் கணிசமான செல்வாக்கினை செலுத்துகின்ற பொருளாதார, சுற்றாடல் மற்றும் சமூக செயலாற்றுகையினை விவரிக்கின்றது.

### பங்குதாரர்கள் உள்ளடக்கம்
வங்கியானது ஈடுபாடு மற்றும் அறிக்கையிடுவதில் முக்கியத்துவத்தினை உறுதி செய்வதற்கு உபாய மற்றும் முக்கிய பங்குதாரர்கள் குழுவினை வரையறுப்பதற்கு வங்கி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளது என்பதனை அடையாளப்படுத்துகின்றது. எனவே 2010 இல் முக்கிய பங்குதாரர்களாக அடையாளப்படுத்தப்பபட்ட பங்குதாரரர்கள், அரசாங்கம், வாடிக்கையாளர்கள், வழங்குனர்கள், ஊழியர்கள், சுற்றாடல் மற்றும் சமூகம் என்பன தொடர்ந்தும் ஈடுபடுத்தப்பட்டிருந்தன.

### நிலைத்திருக்கும் தன்மை
இவ்வறிக்கை HDFC வங்கியின் பயணத்தின் பங்காளியொருவராக பரந்தளவில் ஊழியர்கக்கு சமூகத்துக்கு, வாடிக்கையாளர்களுக்கு பெறுமதிமிக்க பங்காளர்களுக்கு பங்குதாரர்களுக்கு தேசத்திற்கு என்ற அடிப்படையில் பங்குதாரர்கள் நிதியியல், பொருளாதார, சமூக மற்றும் சுற்றாடல் நோக்கிலிருந்து நிறுவனத்தின் செயலாற்றுகையின் ஒருங்கிணைக்கப்பட்ட கண்ணோட்டமொன்றினை வழங்குவதற்கு எத்தனிக்கின்றது.





### எமது முக்கோண அடிப்படை வழி அணுகுமுறை



# நிதியியல் சிறப்புக் கூறுகள்

| | 2012 ரூபா மில். | 2011 ரூபா மில். | மாற்றம் % |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான பெறுபேறுகள்** | | | |
| வருமானம் | 2,691 | 2,386 | 13 |
| வரி விதிப்புக்கு முன்னர் இலாபம் | 123 | 402 | (69) |
| வரி விதிப்பு ஏற்பாடுகள் | 120 | 186 | (35) |
| வரி விதிப்புக்கு பின்னர் இலாபம் | 2 | 216 | (99) |
| அரசாங்கத்துக்கான வருவாய் | 123 | 189 | (35) |
| பங்கு தாரர்கள் நிதி | 2,391 | 2,337 | 2 |
| வாடிக்கையாளர்களிடமிருந்து வைப்புகள் | 12,923 | 12,336 | 5 |
| வாடிக்கையாளர்களுக்கான மொத்த கடன்களும் முற்பணங்களும் | 16,290 | 15,210 | 7 |
| மொத்த சொத்துகள் | 20,801 | 19,927 | 4 |
| **நிதியியல் விகிதாசாரம்** | | | |
| சராசரி பங்கு தாரர்கள் நிதி மீதான வருவாய் (%) | 0.10 | 10.32 | (99) |
| சராசரி சொத்துக்கள் மீதான வருவாய் (%) | 0.01 | 1.22 | (99) |
| மொத்த சொத்துக்களுக்கான பங்கு தார ஒப்புரவு (%) | 11.50 | 11.73 | (2) |
| **நியதிச் சட்ட விகிதாசாரம்** | | | |
| திரவச் சொத்துக்கள் (%) | 22.65 | 21.15 | 7 |
| மூலதன போதிய தன்மை | | | |
| நிரை 1 (%) – தேவைப்பட்ட ஆககக்குறைந்தது 5% | 20.79% | 21.34% | (3) |
| நிரை 2 (%) – தேவைப்பட்ட ஆககக்குறைந்தது 10% | 21.46% | 21.95% | (2) |
| **ஏனைய தகவல்கள்** | | | |
| கிளைகள் | 32 | 31 | 3 |
| ஊழியர்கள் (ஊழியர் எண்ணிக்கை) | 488 | 505 | 6 |
| கடன் அந்தஸ்து – பிட்ச் அந்தஸ்து | BBB நிலையானது | BBB + நிலையானது | |




வருமானம்




இலாப வளர்ச்சி




மொத்த சொத்துக்கள்




ROE & ROA




கடன்கள், முற்பணங்கள் மற்றும் வைப்புகள்

# தொழிற்பாட்டு சிறப்புக் கூறுகள்

2011 இல் ரூபா 4,700 மில்லியன் பெறுமதிமிக்க 14,244 வசதிகளுடன் ஒப்பிடுகையில், ரூபா 3,599 மில்லியன் பெறுமதியான 12,400 வீடமைப்பு கடன்களை நாம் வழங்கியுள்ளோம்

5% வைப்பு அதிகரிப்புடன் எமது வைப்பு வாடிக்கையாளர் அடிப்படை 261,000 இலிருந்து 330,000 இற்கு அதிகரித்தது.

வாடிக்கையாளர் பெறுவழி நிலையங்களை நாம் நாடு பூராகவும் 31 கிளைகளிலிருந்து 32 கிளைகளாகவும், 310 தன்னியக்க இயந்திரங்கலிலிருந்து (ATM) 360 இயந்திரங்களாகவும் நடமாடும் வங்கிச் சேவைகளை 100 வங்கியாளர்கலிலிருந்து 120 வங்கியாளர்களாகவும் அதிகரித்துள்ளோம்.

நடமாடும் வங்கிச் சேவையூடாக 33,000 மக்களுக்கு மேல் நிதியியல் ரீதியாக உள்ளெடுக்கப்பட்டிருந்தனர்.

காபன் நடுநிலை நிறுவனமொன்றாக தோற்றம் பெறுவதற்கான வருடாந்த இலக்கினை எய்தியுள்ளோம்.

சமூக நிலைப்படுத்தலுக்காக ரூபா 1.8 மில்லியன் தொகைக்கு மேல் நாம் முதலீடு செய்துள்ளோம்

***முன்னோக்கியுள்ள இலக்குகள் - மத்திய தர காலம்***

| | 2011 - உண்மையானது | 2012 - உண்மையானது | 2013 - திட்டமிடப்பட்டது | 2013 - இலக்கு |
|---|---|---|---|---|
| ஒப்புரவு மீதான வருவாய் | 10.32% | 0.10% | 4.12% | 18.5% |
| சொத்துக்கள் மீதான வருவாய் | 1.22% | 0.01% | 0.41% | 2% |
| வருமான விகிதத்துக்கான செலவு | 82.74% | 95.39% | 93.91% | 43% |
| வாடிக்கையாளர் வைப்புகள் (ரூபா மில்.) | 12,336 | 12,923 | 17,980 | 17,500 |
| மொத்த சொத்துக்கள் ரூபா மில். | 19,927 | 20,801 | 25,336 | 30,000 |
| பங்கு தாரர் நிதி (ரூபா மில்.) | 2,337 | 2,391 | 2,508 | 2,700 |
| கிளைகளின் எண்ணிக்ககை | 31 | 32 | 32 | 50 |
| ஊழியர்கள் | 505 | 488 | 500 | 500 |
| தன்னியக்க இயந்திர (ATM) பெறுவழி | 310 | 360 | 400 | 500 |

**ரூபா 3,599 மில்லியன்** வீடமைப்பு கடன்களுக்காக

**12,400** வீட்டு உடைமைகளுக்காக

## தவிசாளர் அறிக்கை

# நாம் திட்டமிடும் புதிய சந்தைகளில் HDFC வங்கியின் வியாபார நாமம் மீதான பொதுமக்கள் நம்பிக்கை துரித பெறுபேறுகளை ஈட்டித்தருமென நான் நம்புகின்றேன்.

இலங்கை தற்போது 2016 ஆம் ஆண்டளவில் தலா வருமானத்தினை அ.டொ.4000 ஆக இரட்டிப்புச் செய்வதற்கு முன்னேறிச் செல்வதுடன் அரசாங்கமானது மத்திய வருமானப் பொறியிலிருந்து தவிர்ந்து கொள்வதற்கான வளர்ச்சியின் 2 ஆம் நிலையொன்றினை திட்டமிடுகின்றது. இந்நீண்டகால நோக்கின் பகுதியொன்றாக நாடு அநேகமாக அனைத்து பொருளாதார கூறுகள் முழுவதும் எதிர்பாராத அளவிலான அபிவிருத்தி நடவடிக்கைகளை முன்னெடுத்து வருகின்றது. 2012 ஆம் ஆண்டு இவ் அபிவிருத்தி கருத்திட்டங்கள் பலவற்றின் பெறுபேறுகளை கண்டது. 2012 இன் போது மேற்கொள்ளப்பட்ட பாரிய உட்கட்டமைப்பு அபிவிருத்தி, துறைமுகங்கள், விமான நிலையங்கள், வீதிகள், புகையிரதப் பாதைகள், நீர்ப்பாசனம், சக்தி, நீர் வழங்கள், வீடமைப்பு அத்துடன் நகர அபிவிருத்தி, நிர்மாணம் மற்றும் மீள்புதுப்பித்தலை உள்ளடக்கியிருந்தது. இவ்வாண்டின்போது மேல் கொத்மலை நீர்மின் கருத்திட்டம் செயற்பட ஆரம்பித்ததுடன் மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் 2013 மார்ச் இல் தொழிற்படுவதற்காக நிறைவு செய்யப்பட்டது. கொழும்பு தெற்கு துறைமுகக் கருத்திட்டம், கொழும்பு வெளிச்சுற்று அதிவேகப் பாதை, மாகம் றுகுணுபுர மகிந்த ராஜபக்ஷ துறைமுக கருத்திட்டம் கட்டம்-2, தெற்கு அதிவேகப் பாதை கட்டம்-2, கொழும்பு கட்டுநாயக்க அதிவேகப் பாதை மற்றும் யாழ்ப்பாணம் வரையிலான் புகையிரதப் பாதை விரிவாக்கம் என்பன இவ்வாண்டின்போதான மிக முக்கிய மைல் கற்களாகும். இதற்கு மேலதிகமாக 3 பிரதான உட்கட்டமைப்பு கருத்திட்டங்கள், பல எண்ணிக்கையான சிறியளவிலான திட்டங்கள் கிராமிய வாழ்க்கைத் தரத்தை உயர்த்துவதற்காக நாடு பூராகவும் அமுல்படுத்தப்பட்டன. அரசாங்க நகர அபிவிருத்தி திட்டத்தின் கீழ் கொழும்பு நகர நடைபாதை நிர்மாணம், வீதி, பூங்காக்கள், உணவு விடுதிகள் , வர்த்தக மையங்கள், பொழுது போக்கு வசதிகள், புனர்நிர்மாணத்துடன் கூடிய முழு அளவிலான அபிவிருத்தியினுள் காலடி வைத்ததுடன் திடக்கழிவு முகாமைத்துவத்துக்கான திட்டமும் முன்னெடுக்கப்பட்டது. இவ்வாண்டின்போது குறிப்பாக ஆதன அபிவிருத்தி துறையில் கணிசமான தனியார் துறை முதலீடு இடம்பெற்றது. இப்பல்துறை அபிவிருத்தி முயற்சிகள் பிரயாணம் மற்றும் போக்குவரத்து, வர்த்தக தொழில்முயற்சிகள் மற்றும் சுற்றுலாத் துறைக்கு உதவியளிப்பதனூடாக கிட்டிய எதிர்காலத்தின் ஒட்டுமொத்த பொருளாதார வளர்ச்சிக்கான பங்களிப்பினை செய்ய ஆரம்பிக்கும் அதேவேளை கிராமிய மற்றும் நகர சனத்தொகை ஆகிய இரண்டினதும் ஒட்டு மொத்த வாழ்க்கைத் தரத்தினையும் உயர்த்தும்.

வீடமைப்பானது புதிய வீடுகள் நிர்மாணம், தற்போதுள்ள வீட்டு வசதிகளை புனர்நிர்மாணம் செய்தல், குறைந்த தரத்திலான வீடுகளிலிருந்து இடம் மாற்றுதல், வீடுகளைக் கட்டுவதற்காக குறைந்த மற்றும் நடுத்தர வருமானம் பெறும் குடும்பங்களுக்கு உதவியளித்தல், மீள் குடியேற்ற வசதியளித்தல் அத்துடன் ஆதன உரிமைகளை உறுதிப்படுத்தல் ஊடாக வீடமைப்பு தேவைகளை நிறைவு செய்வதை நோக்கிய அரசாங்கம் பின்பற்றுகின்ற பல் பரிமாண அணுகு முறையொன்றுடன் முன்னுரிமையளிக்கப்பட்டு காணப்பட்டது. HDFC வங்கியான நாம் இவ்வாண்டின்போது 12,400 புதிய வீடுகளுக்கான கடன் வசதிகளை வழங்குவதனூடாக 2016 அளவில் 600,3000 வீடுகள் இலக்காவுள்ள 'அனைவருக்கும் வீட்டு உரிமைத்துவம்' தேசிய வீடமைப்பு நோக்கிற்கு எமது முழு அளவிலான ஆதரவினையும் வழங்கியுள்ளோம்.

2012 இல் 6.4% பொருளாதார வளர்ச்சிக்கு அனைத்து முக்கிய துறைகளும் சாதகமாக பங்களித்துள்ள அதேவேளை கைத்தொழிற்றுறை நிர்மாணத்துறையினால் உந்தப்பட்டு வளர்ச்சியின் முக்கிய பங்காளியாக காணப்பட்டது. நிர்மாண உப துறை மிகமுக்கிய பங்களிப்பொன்றை மேற்கொண்டு பாரிய அரசாங்க முதலீட்டு நிகழ்ச்சித்திட்டம் மற்றும் பல தனியார் துறை ஆதனக் கருத்திட்டங்களை பிரதிபலித்தது.

எவ்வாறாயினும் இவ்வாண்டின்போது உயர்ந்து சென்ற வட்டி வீதம் எமது நிதிச் செலவு மற்றும் தொழிற்படுத்தல் செலவு மீது துரித அதிகரிப்பொன்றினை இடம்பெறச் செய்தது. குறைந்தளவாக கடன் வீதங்களை உயர்துவதனூடாக HDFC வங்கி செயற்பட்ட அதேவேளை வரையறுக்கப்பட்ட வருமானத்துடனான நடுத்தர மற்றும் குறைந்த வருமானம் கொண்டவர்களால் பிரதானமாக எமது வாடிக்கையாளர் அடிப்படை ஆக்கப்பட்டுள்ளதால் துரித வீத அதிகரிப்புக்கு ஈடு செய்வதற்கு எமது கடன் விகிதங்களை சடுதியாக அதிகரிப்பதற்கு நிதியியல் மற்றும் சமூகவாரியாக முடியாதிருந்தது. இதன் விளைவாக வங்கியானது ஏனைய வருமான மூலங்களிலிருந்து வருமானம் ஈட்டுவதற்கான மட்டுப்படுத்தப்பட்ட வழிகளுடன் துரித வட்டி வீத அதிகரிப்பின் முழு தாக்கத்தினையும் HDFC வங்கி உணர வேண்டி ஏற்பட்டது.



**பின்னடைவுகளுக்கு மத்தியில் புதிய வளர்ச்சி வாய்ப்புகளை தோற்றுவிப்பதற்கு நாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதால் உமது வங்கிக்கான எதிர்காலம் மிகவும் நம்பிக்கை மிக்கதாக அமையும் என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.**

### நம்பிக்கை தரும் எதிர்காலம்

பின்னடைவுகளுக்கு மத்தியில் புதிய வளர்ச்சி வாய்ப்புகளை தோற்றுவிப்பதற்கு நாம் ஏற்கனவே நடவடிக்கை எடுத்திருப்பதால் உமது வங்கிக்கான எதிர்காலம் மிகவும் நம்பிக்கை மிக்கதாக அமையும் என்பதனை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். 2011 இல் வங்கியின் தொழிற்பாட்டு நோக்கெல்லையுடன் தொடர்புபட்ட HDFC வங்கி சட்டத்தினை திருத்துவதற்கான எமது முயற்சிகள் சாதகமான பெறுபேறுகளை காண்பித்ததுடன் அதன் விளைவாக HDFC வங்கி முயற்சி செய்யப்படாத பல துறைகளுக்கு தனது வியாபார நடவடிக்கைகளை விரிவடையச் செய்ய முடியுமானதாகவுள்ளது. இந்நிலைமை வங்கியின் வளர்ச்சிக்கான பல புதிய வாய்ப்புகளை உருவாக்கியுள்ளதுடன் HDFC வங்கி வியாபார நாமத்தின் பொதுமக்கள் நம்பிக்கையானது புதிய நிதியாண்டில் நாம் காலடி வைக்க திட்டமிட்டுள்ள புதிய சந்தையில் புதிய பெறுபேறுகளை தோற்றுவிக்கும் என நான் நம்புகின்றேன். மனதிலுள்ள இவ்வெதிர்கால வளர்ச்சியுடன் உள்ளக கொள்ளளவு கட்டியெழுப்பல் செயல்முறைப்படுத்தல் ஒன்றினை நாம் ஏற்கனவே ஆரம்பித்துள்ளோம்.

### புதிய வருமான வழிகள்.

இலங்கை சமூகத்தின் பரந்துபட்ட தேவைகளுடன் எமது வளர்ச்சி உபாயங்களை இணைப்பதனூடாக வங்கிக்கான புதிய வருமான வழிகளை தோற்றுவிப்பதற்கு எமது தொழிற்பாடுகளை நாம் விரிவாக்கியுள்ளோம். நாட்டின் வயது முதிர்ந்து வரும் சனத்தொகைக்கான பாதுகாப்பான எதிர்காலமொன்றினை உறுதி செய்வதற்கு செயல்திறன்மிக்க ஓய்வூதிய திட்டமொன்றுக்கான மிகவும் வேண்டப்பட்டு வரும் தேவைகளை நிறைவு செய்யும் அதே வேளை வங்கிக்கான குறைந்த செலவு நீண்டகால நிதி மூலமான 'ர்னுகுஊ வங்கி குழு வீடமைப்பு நிதியம்' அறிமுகப்படுத்தப்பட்டது. இத்தனித்துவமிக்க சேமிப்புத் திட்டம் எதிர்காலத்தில் நிலையாக இருக்கின்ற நாட்டின் வீடமைப்பு தேவை வளர்ச்சியிலிருந்து பொது மக்கள் பங்களிப்பதற்கும் நேரடியாக பயனடையச் செய்கின்றது. இச்சேவை ஏதேனும் அளவிலான வைப்புக்காக உயர்ந்த சந்தை தொழிற்படுத்தல் வீதத்தினை எப்போதும் வழங்குகின்றமையினால் கணக்கு வைத்திருப்போருக்கான உயர்ந்த எதிர்கால நிதியியல் வருவாயினை உறுதி செய்கின்றது. வைப்பிலிட்டவர் 55 வயதை அடையும்போது இக்கணக்கு முதிர்வடைவதுடன் இக்காலத்தின்போது சேமிப்புக் கணக்கானது கணிசமான ஓய்வு நிதியமொன்றினுள் வளர்ச்சி பெற்றிருக்கும். இச்சேவைக்கான கேள்விகள் அதிகளவு ஊக்கமளிக்கத்தக்கதாக இருப்பதுடன் இலங்கையின் வயதடைந்து வரும் சனத்தொகை மத்தியில் எதிர்வரும் ஆண்டுகளில் பிரபல்யம் பெறும் என்பதையும் நான் உணர்கின்றேன்.

குறைந்த வருமானமுடைய மக்களின் வீடமைப்பு தேவைகளை நிறைவு செய்வதற்கு நாம் பல்துறை புதுமை வழிகளையும் தொடர்ந்து வருகின்றோம். 2012 இன் மக்கள் தொகை தரவுகள் இலங்கை தேசிய வீடமைப்பு இடைவெளியினை வெற்றிகரமாக முகாமை செய்துவரும் அதேவேளை சனத்தொகை வளர்ச்சி மற்றும் வடக்கு கிழக்கு பிரதேசங்களின் மீள் குடியேற்றத் தேவைகளின் மூலம் பிரதானமாக குறைந்த மற்றும் குறைந்த நடுத்தர வருமானமுடைய மக்களினுள் கணிசமான இடைவெளி நிலவுகின்றது என்பதனை சுட்டிக்காட்டுகின்றது. அதேவேளை நகர வீடமைப்புக்கான கேள்வியானது நாடு துரிதமாக நகரமயமாக்கப்படுவதனால் மிக அதிகமாக வளர்ந்து வருகின்றது. எவ்வாறாயினும் நடுத்தர மற்றும் உயர் பொருளாதார மக்கள் பிரிவினர் முறையான நிதியியல் முறைமை மூலம் சேவையளிக்கப்பட்டு வரும் அதேவேளை நாட்டின் சாத்தியமான வீடமைப்பு சந்தையின் சுமார் 30% அளவுமிக்க இலங்கையின் குறைந்த வருமான மற்றும் முறைசாரா துறை சார்ந்தோர் இதுவரையில் குறைவாகவே சேவையைப் பெறுகின்றனர். நாம் மரபு ரீதியான தங்கச் சொத்துக்களின் தூண்டு கோளாகவுள்ள தனித்துவமிக்க நிலைத்திருக்கத்தக்க தீர்வொன்றுடன் இச்சமூகத் தேவைக்கு பதிலளிக்கின்றோம்.

இலங்கை வரலாற்று ரீதியாக மொத்த உள்நாட்டு உற்பத்திக்கு குறைந்த சேமிப்பினை அனுபவித்து வந்த போதும் சேமிப்பில் குறைந்த வருமானம் கொண்ட மக்களும் முதலிடுகின்றனர் என நாம் நம்புகின்றோம். எவ்வாறாயினும் அத்தகைய சேமிப்புக்கள் மரபு ரீதியாக தங்க வடிவில் இருந்து வருகின்றன. இதன் விளைவாக அத்தகைய மக்கள் தொகையினர் உயர் கடன் இடர் வடிவங்களின் காரணத்தினால் கடனுக்கான முறைமை வாய்ந்த நிதியியல் முறைமைகளை பெற முடியாமல் உள்ளனர். எனவே வீடமைப்பு கடன்களில் அவர்களின் ஒப்புரவு பங்குகளாக தங்களது தங்க சேமிப்புகளை மாற்றுவதற்கு குறைந்த வருமானமுடைய குழுக்களை இயலச் செய்கின்ற வெற்றிகரமான தீர்வொன்றினை நாம் அறிமுகப்படுத்தியுள்ளோம். இக்கடன் திட்டம் குறைந்த இடர் கொண்டதுடன் வங்கிக்கான வருவாய் மூலம் ஒன்றாக வளர்வதுடன் வங்கியில் சமூக மற்றும் பொருளாதார நிலைத்திருத்தல் நிகழ்ச்சி நிரலொன்றை நோக்கிய பலவீனமுடைய குழுக்களுக்கு ஆதரவளிப்பதனூடாக நேரடியாக பங்களிப்புச் செய்கின்றது. மரபு ரீதியாக அத்தகைய குழுவினர் ஒழுங்கு விதிகள் இன்மையாலும் அத்துடன் அதிகூடிய வட்டி வீதத்தின் காரணத்தினால் நியாயமற்ற பாதுகாப்பற்ற முறைசாரா நிதியளித்தல் சேவைகளைத் தவிர வேறெந்த தெரிவுகளும் அவர்களுக்கு இருந்திருக்கவில்லை. எனவே HDFC வங்கியின் தங்கக் கடன்கள் மூலம் தங்களின் வீடமைப்பு கனவினை நனவாக்கி கொள்வதற்கு இம்மக்களுக்கு இப்போது வாய்ப்புக்களை ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

## கொள்ளளவினைக் கட்டியெழுப்புதல்

வெளிவாரி எதிர்வு கூற முடியாமையின் வடிவில் நீண்டகால ஸ்த்திரத்தினை உறுதி செய்தல் வங்கியின் அடிப்படை நிலைத்திருத்தல் கரிசனையாக இருந்து வருகின்றது. எனவே ஸ்த்திரமிக்க எதிர்கால வளர்ச்சியினை நோக்கி பங்களிப்புச் செய்யும் நிரந்தர தீர்வுகளை உருவாக்குவதற்கு உள்ளக கொள்ளளவினை கட்டியெழுப்புவதற்காக நாம் முன்னெடுத்துச் செல்லும் முயற்சிகளை தொடர்கின்றோம். இது பதவியினர் திறன்களை விருத்தி செய்தல், உள்ளக செயன்முறைப்படுத்தலை மீளமைத்தல் மற்றும் எமது தொழினுட்பத்தை மேம்படுத்தல் ஆகியவற்றினை உள்ளடக்குகின்றது.

நடமாடும் மற்றும் "Palm top" வங்கிச்சேவை முறையியல் தூண்டுதலூடாகவும் எமது தன்னியக்க இயந்திர (ATM) செயற் பரப்பினை விரிவாக்குகின்ற உபாய இணைப்புகள் ஊடாகவும் எமது சந்தை அடைவினை விரிவுபடுத்தியுள்ளோம். இத்தீர்வுகள் குறைந்த செலவில் செயல் திறன்மிக்க சந்தை விரிவாக்கத்திற்கு எமக்கு உதவியது. 2012 ஜனவரியின் போது வடக்கில் மீள்கட்டுமான புனருத்தான தேவைகளுக்கு சேவையளிப்பதற்காக யாழ்ப்பாணத்தில் முதலாவது HDFC வங்கியினை ஆரம்பித்தோம். இம்முயற்சி அரசாங்க அபிவிருத்தி திட்டங்களுக்கு ஆதரவளிக்கும் அதேவேளை முரன்பாட்டிலிருந்து மீண்டு வரும் பிரதேசங்களில் வளர்ந்து வரும் வீடமைப்பு தேவைகளுக்கு எமது சேவையினை வழங்குவதற்கும் இடமளிக்கிறது.

மத்திய வங்கியின் பணிப்புரைகளுக்கமைய 2011 இல் எமது மூலதன அடிப்படையினை ரூபா 2 பில்லியனாக அதிகரித்துள்ளோம். அத்துடன் 2013 இல் 2.5 பில்லியனாக உயர்த்துவதற்கு தயார்படுத்துகின்றோம்.

## எதிர்கால நோக்கு

பல வருடங்களாக HDFC வங்கி நாட்டின் வீடமைப்பு நிதி நிறுவனங்களின் முன்னனி மற்றும் நம்பிக்கை பெற்ற நிறுவனமாக தனது நாமத்தைக் கட்டியெழுப்பியுள்ளது. இன்று இயைபுடைய அதிகமான ஒழுங்குபடுத்தல் பணிப்பாணைகளுடன் எதிர்காலத்தில் நாம் முகங்கொடுக்கத்தக்க சவால்களை எதிர்கொள்வதற்கு முன்னர் ஒருபோதுமில்லாதவாறு வலுவான நிலையிலுள்ளோம். எனவே எமது பங்கு தாரர்களுக்காக ஸ்திரமான வளர்ச்சிக்காகவும் நிண்டகாலப் பெறுமதியினை தோற்றுவிப்பதற்காகவும் மரபு ரீதியற்ற மற்றும் செயல்திறன்மிக்க உபாயங்களை விருத்தியாக்குவதற்கு உள்ளூர் வீடமைப்பு சந்தையிலுள்ள எமது நிபுணத்துவத்தினை தொடர்ந்தும் தூண்டச் செய்வோம்.

HDFC வங்கிச் சட்டத்திற்கு திருத்தங்கள் மூலம் அதிகாரமளிக்கப்பட்டு, தற்போது நாம் சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அத்துடன் நுண் நிதித்துறையினுள் கூட்டு முயற்சி செய்வதற்கும் தயார்படுத்துகின்றோம். நுண்பாக கைத்தொழில் துறைக்கு சேவையளிப்பதற்கு வீடமைப்பு அபிவிருத்தியுடன் பொருளாதார செயற்பாடுகளுக்கு வசதியளிக்கின்ற தனித்துவமான நிதியளித்தல் மாதிரி ஒன்றினையும் நாம் அறிமுகப்படுத்துவோம். எமது புதுமை படைக்கும் வீடமைப்பு நிதி நிலைமை நுண்பாக தொழில் முயற்சியாளர்களின் வீடமைப்பு தேவைகள் மற்றும் வியாபாரத் தேவைகள் இரண்டினையும் நிறைவு செய்கின்ற வியாபார செயற்பாடுகளுக்கு வசதியளிக்கும் வீடமைப்பினை வசதிப்படுத்தும். சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி அத்துடன் நுண்பாக வியாபாரங்களுக்கு ஆதரவளிப்பதற்கு அனைத்தும் அடங்கிய பொதியொன்றினை நாம் வழங்குவதற்கு இடமளிக்கும் குத்தகைச் சந்தையினுள் நுழைவதற்கு எமது புதிய நியதிச்சட்ட பணிப்பாணையினை பயன்படுத்துவதற்கும் நாம் எண்ணியுள்ளோம்.

புதிய நிதியாண்டில் வைப்புகள் மற்றும் முற்பணங்களை திரட்டுவதற்கு நடமாடும் வங்கிச்சேவை, "பாம்டொப்" (Palm top) வங்கிச்சேவை மற்றும் புதிய வாடிக்கையாளர் சேவை நிலையங்கள் இணைப்பொன்றினூடாக எமது புவியியல் சந்தை அடைவினை விரிவாக்குவதற்கும் தொடர்ந்து செயற்படுவோம். வடக்கு கிழக்கிலுள்ள எமது தொழிற்பாடுகள் மீள் குடியேற்றம் மற்றும் சமாதான மீட்சியுடன் துரிதமாக விரிவடையுமென நான் நம்புகின்றேன். குறிப்பாக நிலைத்திருக்கத்தக்க நகர வீடமைப்பு துறையில், நாடு முழுவதும் வளர்ந்து வரும் வீடமைப்பு தேவைகளை நிறைவு செய்வதற்கு நெகிழ்வு மிக்க தீர்வுகளை நாம் தொடர்ந்தும் விருத்தியாக்குவோம்.

## பாராட்டுக்கள்

அதிமேதகு சனாதிபதி மற்றும் நிதியமைச்சர் மகிந்த ராஜபக்ஷ அவர்களுக்கு நாட்டில் நிலையான சமாதானம் மற்றும் அபிவிருத்தி யுகமொன்றினை தோற்றுவிப்பதற்கான அவரது நோக்கிற்காக எனது உண்மையான பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன். திறைசேரிச் செயலாளர் கலாநிதி.பீ.பி.ஜயசுந்தர மற்றும் இலங்கை மத்திய வங்கி ஆளுனர் திரு. அஜித் நிவாட் கப்ரால் ஆகியோருக்கு அவர்களது ஒழுங்கு படுத்தல் மேற்பார்வை மற்றும் வழிகாட்டலுக்காக நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன். சவால்மிக்க ஆண்டொன்றின்போது தங்கள் பங்களிப்பு மற்றும் தவறாத ஆதரவினை வழங்கிய HDFC வங்கி பணிப்பாளர்

சபைக்கு நான் நன்றியைத் தெரிவித்துக் கொள்கின்றேன். 2012 இல் அவரது பெறுமதிமிக்க சேவைக்காக பதில் பொது முகாமையாளர் திரு.எஸ்.திஸாநாயக்க 2013.01.01 இல் எம்முடன் இணைந்த HDFC வங்கியின் புதிய பொது முகாமையாளர் திரு. நிமால் மாமதுவ ஆகியோருக்கும் எனது நன்றி உரித்தாகும்.

அவர்களது அர்ப்பணிப்புள்ள சேவை மற்றும் கடமைப் பொறுப்புக்களுக்காக நான் எப்போதும் எனது கூட்டு உறுப்பினர்களுக்கு நன்றியுடையவராக, கூட்டு, நிறைவேற்று மற்றும் ஏனைய அனைத்து பதவியினருக்கும் நான் எப்போதும் நன்றி மிக்கவராவேன். வங்கி மற்றும் HDFC வங்கி ஊழியர்களின் நல்வாழ்வினை உறுதி செய்வதில் அதன் உதவியினை வழங்கிய HDFC வங்கியின் வர்த்தக சங்கத்தினையும் வரவேற்கின்றேன். வங்கியின் சக்திக்கு பாரியளவிலான ஒன்றாக இருந்து வருகின்ற வங்கியில் எப்போதும் நம்பிக்கை கொண்டுள்ள அனைத்து வாடிக்கையாளர்கள் மற்றும் அவர்களது நம்பிக்கைகாக எனது நன்றியினை தெரிவிக்கின்றேன்.

வங்கிக்கு தொடர்ச்சியான அவரக்ளது ஆதரவினை வழங்கிய HDFC வங்கியின் பங்குதாரர்களுக்கு எனது விசே பாராட்டுக்களை தெரிவிப்பதுடன் சாத்தியமிக்க புதுயுகம் ஒன்றுக்கான வலுவான அடிப்படைகள் மற்றும் சட்டப் பணிப்பாணை ஒன்றுடன் உமது வங்கி இப்போது நிலைநிறுத்தப்பட்டுள்ளது என எமது பங்குதாரர்களுக்கு உத்தரவாதமளிப்பதற்கும் நான் இச்சந்தர்ப்பத்தினை பயன்படுத்துகின்றேன். எனவே உமது பொறுமையும், கரிசணையும் நெருங்கிய எதிர்காலத்தில் சிறந்த பங்கிலாபங்களை காண்பதுடன் நீண்ட காலத்தில் பங்கிலாபங்களை நீர் தொடர்ந்தும் அறுவடை செய்வீர்.

நன்றி,



**திருமதி. சிரோமி விக்கிரமசிங்க**
*தவிசாளர்*
இலங்கை HDFC வங்கி

## பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வு

# எதிர்கால வளர்ச்சியில் வழிகளை ஏற்படுத்தும் அதே வேளை பன்முகப்படுத்தலானது தொழிற்பாட்டு இடர்களை குறைப்பதற்கு நிரந்தரமான நிலைத்திருக்கத்தக்க தீர்வொன்றாகும் என நாம் நம்புகின்றோம். எனவே எமது வியாபார தெழிற்பாடுகளை மீள் சமப்படுத்தல் மூலம் எமது வியாபார மாதிரியினை மாற்றும் செயன்முறையில் ஈடுபடுகின்றோம்.

2012ஆம் ஆண்டுக்கான தற்போதைய HDFC வங்கியின் செயலாற்றுகைக்காக நான் கௌரவமளிக்கப்பட்டுள்ளேன்.
மீளாய்வு ஆண்டு வெளிவாரி உலக நிபந்தனைகள் மற்றும் உள்ளூர் காரணிகளின் இணைவொன்றின் காரணமாக முழு நாட்டுக்கும் சவால் மிக்கதாக இருந்தது. ஐரோப்பிய இறையாண்மைக் கடன் நெருக்கடிகள், அமெரிக்க நிதிக் கொள்கை நெருக்கடி, ஈரான் தடைகள் மற்றும் புவிசார் அரசியல் ஸ்த்திரமின்மையினை ஒன்று சேர்த்த அல்லது தூண்டிய தொடர்ச்சியான உயர் பெற்றோலிய விலைகள் மூலம் உலகப் பொருளாதாரம் நலிவடைந்தது. உள்ளூர் நிலைமை, உயர் இறக்குமதிகள் மற்றும் விஞ்சிய கடன் கேள்வி ஆண்டின் கடைசிக் காலாண்டில் வரட்சி நிலைமைகள் மற்றும் மோசமான மழைவீழ்ச்சி மற்றும் வெள்ளப் பெருக்குகளுடன் இணைந்து நாட்டின் நீர்மின்சார உற்பத்தி, விவசாய வெளியீடுகள் மற்றும் உணவு வினியோகம் உள்நாட்டு பொருளாதாரத்தினை செயலிழக்கச் செய்தல் என்பதில் பாதிப்பினை ஏற்படுத்தியது. இந்நிலைமையினை முகங்கொடுத்து இலங்கை மத்திய வங்கி 2012இன் ஆரம்பத்தில் நிதிக் கொள்கை, பரிமாற்று வீதக் கொள்கை மற்றும் நிதி நிர்வாக கொள்கைத் துறைகளில் பல கடினமிக்க கொள்கைத் தீர்மானங்களை அமுல்படுத்தியது. அதிகளவான கடன் மற்றும் இறக்குமதி வளர்ச்சியினை கட்டுப்படுத்துவதற்கு வங்கிக் கடன் கொடுத்தல் மீது கடன் மட்டமொன்று விதிக்கப்பட்டு கொள்கை விகிதங்கள் மேல்நோக்கி மீளாய்வு செய்யப்பட்டன. இது குறைந்த திரவத் தன்மை மற்றும் உயர் சந்தை வட்டி வீதம் என்பவற்றை தோற்றுவித்தது.

எவ்வாறாயினும் பொருளாதாரம் மீதான மோசமான தாக்கங்களுக்கு மத்தியில் நாடு 6.4% மொத்த உள்நாட்டு உற்பத்தி வளர்ச்சியுடன் வலுவான பொருளாதார வளர்ச்சியினை நாடு அனுபவித்தது. பொருளாதார அடிப்படைகள் நிதி நிர்வாக ஒன்றுதிரட்டலுக்கு பாரதூரமான கடமைப் பொறுப்பொன்றினை அரசாங்கம் மேற்கொண்டதுடன் சேர்த்து மேலும் வலுவூட்டப்பட்டன. இவ்வருடம் முன்னேற்றத்தினையும் வீதி அபிவிருத்தி, மின்சார கருத்திட்டங்கள், துறைமுகங்கள் மற்றும் விமான நிலையங்கள் அத்துடன் கம நெகும, மெகா நெகும, வடக்கின் வசந்தம் மற்றும் கிழக்கின் உதயம் போன்ற கிராமிய உட்கட்டமைப்பு கருத்திட்டங்களுடன் பாரியளவிலான உட்கட்டமைப்பு கருத்திட்ட அபிவிருத்திகளையும் அனுபவித்தது. நாட்டினை துரிதமாக விருத்தி செய்கின்ற ஹோட்டல், அடுக்கு மாடி மனைகள், புதிய வியாபார கடைத் தொகுதிகளினுள் வெளிநாட்டு நேரடி முதலீடுகள் இடம்பெற்றன. சுற்றுலாத் துறை வரலாற்றில் முதற் தடவையாக ஒரு மில்லியன் வருகை தருனர்களையும் தாண்டிய எதிர்பாராத வளர்ச்சியொன்றினை காட்டியதுடன் வெளிநாட்டு முதலீட்டாளர்களின் நம்பிக்கை வளர்வதற்கும் சான்றாக அமைந்துள்ளது.

ஒட்டுமொத்தமாக நாட்டின் வங்கித்துறை வலுவான பொருளாதார வளர்ச்சியின் ஸ்த்திரத்தன்மையினை நோக்கி பங்களிப்புச் செய்வதன் ஊடாக பொருளாதார தேவைகளை நிறைவு செய்கின்றன. இலங்கை மிலேனியம் அபிவிருத்தி இலக்குகளை அடைவதை நோக்கி நெருங்கிச் செல்வதுடன் அரசாங்கமானது 2016ஆம் ஆண்டளவில் அமெரிக்க டொலர் 100 பில்லியன் பொருளாதாரம் மற்றும் அமெரிக்க டொலர் 4000ஐ தலா வருமானத்தை நோக்கிய நிலையான முன்னேற்றத்துக்கான அடிப்படை பணிகளை தயார்படுத்துகின்றது. சமூக முன்னேற்றம் மற்றும் வலுவூட்டலின் முக்கிய அடிப்படைக் கூறான வீடமைப்பு நிதியளித்தலில் விசேடத்துவம் பெற்றவராக எமது கொள்ளளவினுள் இத்தேசிய இலக்கினை நோக்கி HDFC வங்கி பங்களிப்புச் செய்கின்றது.







## எமது செயலாற்றுகை

பரந்த பேரின பொருளாதார நிபந்தனைகளினால் வங்கி முகங்கொடுத்த எதிர்பாராத தடைகளுக்கு மத்தியில் மீளாய்வுக்குட்பட்ட ஆண்டின்போது உமது வங்கி மூலமான நம்பத் தகுந்த முன்னேற்றத்தை அறிவிப்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன். ஒட்டு மொத்தமாக எமது அடிப்படை தொழிலிலிருந்து இவ்வருடம் வருமானத்தில் 13.4% வளர்ச்சியினை உமது வங்கி நிலைப்படுத்தியது. எவ்வாறாயினும் உயர்ந்து செல்லும் வட்டி வீதங்களின் காரணமாக எமது வட்டிச் செலவுகள் 33 % இனால் அதிகரித்தது. இது எதிர்மறையான தேறிய வட்டி வருமான நிலையொன்றுக்கு இட்டுச் சென்றுள்ளது. இலங்கை வங்கி ஊழியர் சங்கத்தின் HDFC வங்கி கிளையுடனான புதிய கூட்டு ஒப்பந்தத்தின் கீழ் ஊழியர் சம்பளங்கள் 33% இனால் மேல்நோக்கி மீளாய்வு செய்யப்பட்டதனால் தொழிற்படுத்தல் செலவில் அதிகரிப்பொன்றினையும் வங்கி அனுபவித்தது.

உயர்ந்து செல்லும் வட்டி வீதங்கள் வீடமைப்பு சந்தையினை வீழ்ச்சியொன்றினை தோற்றுவித்தமையினால் அதிகரித்து வரும் எமது வருவாய்கள் மூலம் உயர் செலவுக்கு நாம் ஈடு கொடுக்க முடியாதிருந்தது. இதன் விளைவாக எமது வருவாய் இலக்குகள் அடையப் பெற முடியாமல் இருந்ததுடன் 2011ஆம் நிதி ஆண்டுடன் ஒப்பிடுகையில் இலாபத்தில் வீழ்ச்சியொன்றினை நாம் அனுபவித்துள்ளோம். இருந்த போதிலும் வளர்ச்சி மீதான எமது வலுவான நோக்கில் வங்கி வைப்புகள் மற்றும் முற்பணங்களின் வளர்ச்சியினை நிலைநிறுத்தக் கூடியதாக இருந்தது.

## வைப்புகள்

வங்கியின் ஒட்டுமொத்த வைப்புத் தளம் இவ்வருடம் 5 % வளர்ச்சி பெற்றதுடன் குறைந்த செலவு, நீண்ட தவணை நிதியளித்தல் என்பவற்றுக்கு வலுவூட்டுவதற்கு சேமிப்பு வைப்புகள் தளத்தினை விரிவாக்குவதன் மீது புதிய சேவைகள் மற்றும் தொழிற்பாடுகளை விருத்தி செய்வதற்கு HDFC வங்கி தொடர்ந்தும் செயலாற்றியது. தற்போது வங்கியின் கால வைப்புகள் வைப்பு தளத்தின் 87 % ஆக காணப்படும் அதே வேளை சேமிப்பு வைப்புகள் 13 % ஆகவுள்ளன. இருந்த போதிலும் சேமிப்பு சேவைகளை ஊக்குவிப்பதற்கான எமது முயற்சிகள் ஊடாக அடுத்து வரும் 3 ஆண்டுகளினுள் ஒட்டுமொத்த வைப்பு நிதி கூறுகளின் 20 % இற்கு எமது சேமிப்பு தளத்தினை அதிகரிப்பதற்கு நாம் எண்ணுகின்றோம்.

## முற்பணங்கள்

சந்தையில் காணப்பட்ட கடன் கட்டுப்பாடுகளுக்கு மத்தியில் மொத்த முற்பணங்கள் முன்னைய நிதி ஆண்டடன் ஒப்பிடுகையில் 8% இனால் வளர்ச்சியடைந்தது. இவ்வாண்டின்போது கடன் மட்டம் மற்றும் சந்தை வீழ்ச்சிக்கு பதிலளிப்பதற்கான உபாயம் ஒன்றாக தங்கக் கடன் மற்றும் ஊக்குவிக்கப்பட்ட ஊழியர் சேமலாப நிதி அடிப்படையிலான வீடமைப்பு கடன்கள் என்ற வடிவில் எமது புதிய சேவைகளை அறிமுகப்படுத்தியுள்ளோம்.

எமது தங்கக் கடன்களுக்காக ஊக்குவிக்கின்ற சந்தை கேள்விகளை நாம் பெற்றுள்ளோம் என்று அறிவிப்பதில் நாம் மகிழ்ச்சி அடைவதுடன் இச்சேவை மிகவும் பிரபல்யடைடைந்து வருவதனால் இப்பிரிவு வலுவான வளர்ச்சி பெறும் எனவும் நாம் நம்புகின்றோம். வீடு மற்றும் வீடமைப்பு நோக்கங்களுக்காக காணிக் கொள்வனவுக்கான ஊ.சே.நி. அடிப்படையாகக் கொண்ட கடன்களை அதிகரித்துள்ளோம்.

## கடன் தரம்

அதிகளவு கடுமையான கடன் மதிப்பீட்டு செயன்முறைப்படுத்தல்கள், கடன் சேகரிப்பு மீதான வலுவான அழுத்தங்களுடன் ஒன்றிணைந்த அமுலாக்கலின் காரணமாக 2011 இல் காணப்பட்ட 22.21% இற்கு எதிராக தேசிய கடன் கொடுத்தல் விகிதாசாரம் 20.52% ஆன அதிகரிப்பொன்றினைக் காண்பித்தது. எவ்வாறாயினும் இது இலங்கை மத்திய வங்கியினால் உத்தரவாதமளிக்கப்பட்ட ஊ.சே. நி. மீதியின் அடிப்படையில் தேசிய கடன் கொடுத்தல் வீதத்தை உள்ளடக்குகின்றது என்பதை குறிப்பிடுதல் முக்கியமானதாகும். இவ்விகிதாசாரம் 2011இல் காணப்பட்ட 11.37% இற்கு எதிராக 2012.12.31 அன்று 7.8% இல் இருந்த ஊ.சே.நி. வகை கடன்களை உள்ளடக்கவில்லை.

## தொழில்நுட்பம்

எமது தொழில்நுட்பத்தை மேம்படுத்துதல் தகவல் தொழில்நுட்பம் மற்றும் ஏனைய தொழில்நுட்பங்களை ஆக்கத்திறனுடன் பயன்படுத்துவதற்கான வசதியளிக்கக்கூடிய வினைத்திறன் மற்றும் உற்பத்தித் திறன்களின் பெறுகையின் மீது சாதகமாக பயன்படுத்டதுவதற்கு இவ்வாண்டின்போது முன்னுரிமையளிக்கப்பட்டதாக இருந்து வந்தது. இவ்வாண்டின்போது குறைந்த செலவில் நாட்டின் கிராமப் புறங'களுக்கு சென்றடைவதற்காக எமது "பாம்டொப்" (Palm top) வங்கிச் சேவையினை நாம் விரிவு படுத்தினோம். வங்கிக்கான வாடிக்கையாளர் அடைவழியினை அதிகரிப்பதற்காக, குறிப்பாக கிராமப் புறங்களில் பரந்து காணப்படும் சம்பத் வங்கி தன்னியக்க இயந்திர (ATM) வலைப்பின்னலை HDFC வங்கி வாடிக்கையாளர்கள் பயன்படுத்துவதற்கு சம்பத் வங்கியுடன் உடன்படிக்கை ஒன்றை ஆரம்பித்துள்ளது. இதன் விளைவாக நாடு பூராகவுமுள்ள எமது 32 கிளை வலைப் பின்னல், வாடிக்கையாளர் சேவைக்காக உள்ளங்கை தொழில்நுட்பத்தை பயன்படுத்துகின்ற 120 நடமாடும் வங்கியாளர்களுக்கு மேலதிகமாக HDFC வங்கி வாடிக்கையாளர்கள் நாடு முழுவதும் 360 தன்னியக்க இயந்திரங்களை (ATM) பயன்படுத்துவதற்கு வழியேற்பட்டுள்ளது.

## கட்டண அடிப்படையிலான வருமானம்

எமது வருமான வழிகளை பன்முகப் படுத்தும் எமது முயற்சிகளில் 2011 இலிருந்து வெஸ்டன் யூனியனூடாக பணம் அனுப்புவதன் மூலம் சந்தையில் எமது சேவைகளை விஸ்தரிப்பதற்கு நாம் கவனம் செலுத்தி வருகின்றோம். 2012 இல் நாம் இச்சேவைகளை அனைத்து HDFC வங்கி கிளைகளுக்கும் விஸ்தரித்தோம். கட்டண அடிப்படை வருமானமாகவும் மற்றும் வாடிக்கையாளர் சௌகரியமிக்க மூலம் ஒன்றாக உபயோகச் சேவைக் கட்டணக் கொடுப்பனவுகளுக்கும் நாம் வசதி ஏற்படுத்தியுள்ளோம். அத்துடன் இவ்வாண்டின்போது எமது நடமாடும் வங்கி அணியூடாக உபயோகக் கட்டண கொடுப்பனவுகளுக்கான தனித்துவமிக்க வீட்டுக்கு வீடு சேவையினையும் வழங்கியுள்ளோம்.

## எமது மக்கள்

ஏதேனும் வேறு சேவை நிறுவனங்களை போன்று எமது ஊழியர் குழுவிற்கு எமது பெறுமதி மிக்க சொத்துக்களாவதுடன் எமது நாம் தொடர்ச்சியான பயிற்சி மற்றும் அபிவிருத்தி வாய்ப்புகளை வழங்கி வருகின்றோம். 2013 இல் விசேடத்துவ வங்கியாக நாம் மாற்றம் பெற்றதன் காரணமாக வங்கி ஒழுங்குபடுத்தல்கள், இடர் முகாமைத்துவம் மற்றும் வாடிக்கையாளர் சேவை போன்ற துறைகளில் வங்கியின் புதிய பணிப்பாணையை கையாள்வதற்கு எமது மறு பயிற்சி வழங்குவதற்குமான தேவையொன்று தோற்றம் பெற்றுள்ளது. எனவே நாம் திறன் இடைவெளி மதிப்பீடு ஒன்றினை நடாத்தி வங்கியின் போட்டித் தன்மையை மேம்படுத்துவதற்கு தேவையான பயிற்சிகளை இனங்கண்டுள்ளதுடன் இலங்கை மத்திய வங்கி, இலங்கை வங்கித்துறை நிறுவனம் மற்றும் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனம் போன்ற விசேடத்துவ நிறுவனங்களில் எமது ஊழியர் குழுவிற்கு கிரமமான பயிற்சிக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர். எமது ஊழியர்கள் தேவையின் பொருட்டு வெளிநாட்டு பயிற்சிக்காகவும் அனுப்பப்பட்டுள்ளனர்.

எதிர்கால சவால்களை முகங்கொடுப்பதில் திறனடிப்படையிலான செயற்பாடுகள் போட்டிமிகு அனுகூலமானதாக இருக்கும் என நாம் நம்புவதால் எமது ஊழியர்கள் தொழில் சார் தகைமைகளை பெற்றுக் கொள்வதற்கும் நாம் ஊக்குவிக்கின்றோம்.

## மூலதன போதிய தன்மை

HDFC வங்கி அதன் மூலதனத்தின் போதிய அளவு விகிதாசார தேவைப்பாடுகளை 2012 இல் நிரல்-1, 20.8% மூலதனத்தின் போதிய அளவு விகிதாசாரம் மற்றும் 21.5% மொத்த மூலதன போதிய அளவு விகிதாசார அளவில் பெற்றிருந்தது. இது ஒழுங்குபடுத்தல் தேவைப்பாடான முறையே 5% மற்றும் 10% இற்கு எதிரானதாக காணப்பட்டது.

வங்கி 20% ஒழுங்குபடுத்தல் தேவைப்பட்டிற்கு எதிராக 25.2மூ திருப்திகரமான திரவத் தன்மை விகிதாசாரத்தினையும் பேணுகின்றது.

2013 இன் இறுதியளவில் ரூபா 2.5 பில்லியன் குறைந்த மூலதன தேவையினை எய்துவதற்கு வங்கிக்கான அவசியமிக்க உபாயங்கள் விருத்தியாக்கப்பட்டு வருகின்றன.

## IFRS அமுலாக்கம்

HDFC வங்கி IFRS நியமங்களுக்கேற்ப காலாண்டு கூற்றுக்களை வெளியிட்ட முதலாவது வங்கியாவதுடன் 2012 இற்கான வங்கியின் இறுதிக் கணக்குகள் IFRS நியமங்களுக்கிணங்க தயாரிக்கப்பட்டுள்ளன.

## விருதுகள்/அடையாளப்படுத்தல்

தொடர்பாடலில் HDFC வங்கியின் வெளிப்படைத்தன்மை அடையாளப்படுத்தப்பட்டுள்ளது என்பதினை குறிப்பிடுவதில் மகிழ்ச்சி அடைகின்றேன். சிறியளவிலான வகைக்காக HDFC வங்கி ACCA நிலைத்திருத்தல் தன்மை அறிக்கையிடல் விருதினை தொடர்ச்சியாக மூன்றாவது ஆண்டுக்காக வெற்றி பெற்றது. 2011 வருடாந்த அறிக்கை சர்வதேச ஒருங்கிணைக்கப்பட்ட அ றிக்கையிடல் நியமங்களுக்கமைவாக HDFC வங்கியின் முதலாவது ஒருங்கிணைக்கப்பட்ட அறிக்கையாக இருந்ததுடன் இது உள்நாட்டு வங்கி தொழிற்துறையில் முதலாவதாகவும் இருந்தது.

HDFC வங்கி இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வருடாந்த அறிக்கைப் போட்டியில் நிதியியல் நிறுவனங்கள் துறையில் வெண்கல விருதினையும் வென்றது. இதற்கு மேலதிகமாக இலங்கை தேசிய வர்த்தக சம்மேளத்தினால் ஒழுங்கமைக்கப்பட்ட வியாபார விசேட திறமை விருதுகளில் வெற்றியாளர் பட்டியலில் இடம்பிடித்தது.

எமது அனைத்து பங்குதாரர்களுக்கும் மிகுந்த வெளிப்படைத் தன்மை வகை கூறல் என்பவற்றை உறுதி செய்வதற்காக சர்வதேச ரீதியாக ஏற்றுக் கொள்ளப்பட்ட நிலைத்திருத்தல் வழிகாட்டலுக்கிணங்க எமது கூட்டுத் தொடர்பாடல் கொள்கையினை நாம் தொடர்ந்தும் பேணுவோம்.




**வட்டி வருமானம்**




**தேறிய வட்டி வருமானம்**

## எதிர்கால முன்னேற்றம்

எதிர்கால வளர்ச்சியில் வழிகளை ஏற்படுத்தும் அதே வேளை பன்முகப்படுத்தலானது தொழிற்பாட்டு இடர்களை குறைப்பதற்கு நிரந்தரமான நிலைத்திருக்கத்தக்க தீர்வொன்றாகும் என நாம் நம்புகின்றோம். எனவே எமது வியாபார தெழிற்பாடுகளை மீள் சமப்படுத்தல் மூலம் எமது வியாபார மாதிரியினை மாற்றும் செயன்முறையில் உள்ளோம்.

நீண்டகால வீடமைப்பு நிதியளித்தல் எமது அடிப்படை தொழிற்பாடாக நிலைத்திருக்கும் அதே வேளை தொழிற்பாட்டு இடர் பரம்பலுக்கும் உதவுகின்ற மிகுந்த தொழிற்பாட்டு நெகிழ்வினை பிரதம முகாமையாளர் குவிக்கும் புதிய உற்பத்திகள் மற்றும் சேவைகள் ஊடாக வங்கியின் குறுகியகால சொத்துக்களை நாம் விரிவாக்குகின்றோம்.

2011 இல் HDFC வங்கி சட்டம் திருத்தப்பட்டதுடன் HDFC வங்கி அதன் வியாபார தொழிற்பாடுகளை பன்முகப்படுத்தக்கூடியதாகவுள்ளது. எமது புதிய விரிந்த தொழிற்பாட்டு பணிப்பாணையின் கீழ் நாம் நாட்டின் குத்தகை, நுண்பாக நிதியியல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி மற்றும் விவசாய சந்தையினுள் காலடி வைப்பதற்கும் திட்டமிடுகின்றோம். இந்நோக்கத்திற்காக இலங்கை மத்திய வங்கியுடன் நிதியளித்தல் திட்டமொன்றினையும் ஏற்கனவே ஆரம்பித்துள்ளதுடன் விசேடத்துவ முகவரகங்களுடன் அத்தகைய அதிகளவான நிதியளித்தல் ஒப்பந்தங்களை கலந்துரையாடுவதற்கும் நாம் எண்ணுகின்றோம். இலங்கை மத்திய வங்கியின் மீள் நிதியளித்தல் திட்டத்தினூடாக HDFC வங்கி நுண்பாக நிதியியல், சிறிய மற்றும் நடுத்தர தொழில் முயற்சி மற்றும் விவசாய நிதியளித்தலில் காலடி வைப்பதற்கும் சந்தர்ப்பத்தை பெற்றுள்ளது.

புதிய நிதியாண்டில் எமது வெற்றிமிக்க தங்கக் கடன் திட்டத்தை ஊக்குவிப்பதை தொடர்வோம். எமது சேமிப்புத்தள விரிவுபடுத்தல் தற்போது இடம்பெறும் குறைந்த செலவு நிதியளித்தல் வழியினை திரட்டுவதற்கான நோக்கத்திற்காக வங்கியில் முன்னுரிமையளிக்கப்பட்ட விடயமாக இருக்கும். எதிரகால வளரச்சி வாய்ப்புக்களை கையாள்வதற்கும் வளர்ந்துவரும் போட்டிமிகு சந்தையில் வெற்றிகரமாக போட்டியிடுவதற்கும் எமது முறைமைகள், செயல்முறைப்படுத்தல் மற்றும் திறன் அடிப்படையினை மேம்படுத்துவதன் மூலம் 2013 இல் திரட்டிய எமது தொழிற்பாடுகளை நாம் தொடர்ந்தும் செயற்படுத்துவோம். இச்செயன்முறைப்படுத்தலின் பிரிவொன்றாக பிராந்திய முகாமையாளர்களுக்கு சுயாதீன முடிவுகளை மேற்கொள்வதற்கு தீர்மானங்களை வழங்குவதன் மூலம் வங்கியின் பிராந்திய முகாமைத்துவ கட்டமைப்பினை நாம் ஏற்கனவே வலுப்படுத்தியுள்ளோம்.

## பாராட்டுக்கள்

இலங்கை மத்திய வங்கி ஆளுனர் திரு.அஜித் நிவாட் கப்ரால் மற்றும் இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளர் மற்றும் ஊழியருக்கு இவ்வாண்டின்போது அவர்கள் வழங்கிய தொழில்சார வழிகாட்டல்களுக்காக எனது நன்றியினை தெரிவித்துக் கொள்கின்றேன். நிதியமைச்சின் அலுவலர்கள், கணக்காய்வாளர் நாயகம் மற்றும் ஊழியர் அத்துடன் வீடமைப்பு அமைச்சு, தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அலுவலர்களுக்கு அவர்களின் உதவிக்காக நன்றி தெரிவித்துக் கொள்கின்றேன்.

தவிசாளர் திருமதி.சிரோமி விக்கிரமசிங்க மற்றும் பணிப்பாளர்கள் சபை ஆகியோர் வங்கியினை சிறப்பாக தொழிற்படுத்துவதற்கு என்மீது வைத்திருந்த நம்பிக்கை மற்றும் அவர்களின் பெறுமதி மிக்க ஆலோசனைகளுக்காக எனது உளங்கனிந்த நன்றியினை தெரிவிக்கின்றேன்.

பதில் பொது முகாமையாளர் பிரதம நிறைவேற்று அலுவலர் திரு.எஸ்.திஸாநாயக்கவுக்கு அவரது கடின உழைப்பு மற்றும் பங்களிப்பு மூலம் 2012 இன்போது அவர் வழங்கிய சேவைகளை பாராட்டுகின்றேன்.

கூட்டு முகாமைத்துவம் மற்றும் அனைத்து மட்டங்களிலான பதவி அங்கத்தவர்களுக்கும் அவர்களின்றி இந்நிலையினை நாம் எய்தியிருக்க முடியாது என்பதற்காக அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும். இறுதியாக எனது பாராட்டுக்கள் மீளாய்வு ஆண்டின்போது அவர்களின் உதவிக்காக HDFC வங்கி பங்குதாரர்கள் மற்றும் ஏனைய அனைத்து பங்குதாரர்களுக்கும் எனது பாராட்டு உரித்தாகும்.



**நிமால். ஜே.பி. மாமதுவ**
பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர்
இலங்கை HDFC வங்கி





# எமது நோக்கும் செயற்பணியும்

## எமது நோக்கு
இலங்கை மக்களின் வாழ்க்கை முறையை மேம்படச் செய்வதற்கான பிரதான நிதித்துறை நிறுவனமாகச் சேவையாற்றுதல்

## எமது செயற்பணி
வீடமைப்பு மற்றும் கட்டட நிர்மாணத்துறையின் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கென புதுமையான தீர்வுகளை வழங்குவதன் மூலம் தொழிற்றுறையில் உன்னதமாகச் சிறந்து விளங்குவதுடன் நிதித்துறைச் சேவைப்பிரிவில் சக்திவாய்ந்த நிறுவனமாகவும் செயற்பட்டு, உயர்தர, நீண்டகால, பங்காளித்துவப் பெறுமானத்தை உருவாக்கி, ஊக்கம்பெற்ற குழுவினர் மூலம் இலங்கையின் பொருளாதார அபிவிருத்திக்குப் பங்களிப்பை வழங்குதல்

## எமது குறிக்கோள்கள்

**வாடிக்கையாளர்:**
உபசரணையுடன் கூடிய சேவையை வாடிக்கையாளருக்கு வழங்கி அவர்கள் எதிர்நோக்கும் தீர்வுகளை முன்கூட்டியே அறிந்து அவர்களது எதிர்பார்ப்புக்களுக்கு மேலதிகமாக அவர்களைத் திருப்திப்படுத்தல்.

**பங்குதாரர்கள்:**
பங்குதாரர்கள் நிதியத்தின் மீதான இலாபங்களை உச்சப்படுத்துதல்.

**நிறுவனம்:**
நிதியியல் ஸ்திரத்தன்மை மற்றும் வளர்ச்சியினை பேணும் அதேவேளை நிறுவனம் மற்றும் வியாபார உயர்தர ஒழுக்கவியலில் எம்மை அர்ப்பணித்தல்.

**ஊழியர்கள்:**
எமது ஊழியர்களை ஊக்குவித்தல், விருத்தியாக்குதல், அடையாளப்படுத்தல் மற்றும் வெகுமதியளித்தல்.

**சமூகம்:**
அனைவருக்கும் புகலிடம் வழங்குவதனூடாக தேசிய இலக்குக்கு பங்களிப்புச் செய்வதற்கு வலுவாக அர்ப்பணம் செய்தல்.

**தொழில்:**
எமது சகல நடவடிக்கைகளிலும் வாடிக்கையாளர்களுக்கான சிறந்த சேவையினை வழங்குவதும் அனைத்தும் அடங்கிய சேவை வகைகள் மூலம் வாடிக்கையாளர்களுக்கு சேவையாற்றுவதில் சர்வதேச தரத்தின் அடிப்படையில் தொழில் அளவுகோலினை தாபித்தல்

**ஒழுக்கம்:**
தலைமை வகித்துச் செல்லும் கூட்டுப் பிரஜை ஒருவரின் பெறுமதிக்கேற்ற உயர் ஒழுக்க நியமங்களை பேணுதல்.

## விழுமியங்கள்:
எமது வெற்றிக்கான அடிப்படை அம்சங்கள்

**வெளிப்படைத் தன்மை:**
நேர்மையாக செயற்படுதலும் நடவடிக்கைகளை யதார்த்தமாக பொறுப்புக் கூறலுக்குட்படுத்தலும்.

**நியாயத் தன்மை:**
பங்குதாரர்களின் கருத்திற்கே முதலிடம்

**திறந்த வகையில் பணிபுரிதல்**
பரஸ்பரம் மதிப்பளித்து உண்மையான அக்கறையினை காண்பித்தல்

# கூட்டுத் தகவல்கள்

**பெயரும் விலாசமும்:**
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி (HDFC)

**பதிவு செய்யப்பட்ட தலைமை அலுவலகம்:**
விலாசம்: த.பெ.எண். 2085,
சேர் சிற்றம்பலம் ஏ. கார்டினர் மாவத்தை,
கொழும்பு-2
தொலைபேசி: 2256800, 2446241, 2446239, 2447354
தொலை நகல்: 2446392, 2356829, 2356827
இணையத்தளம்: www.hdfc.lk
மின்னஞ்சல்: hdfc@sltnet.lk

**சட்ட வடிவம்:**
1997இன் 7ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன, 2003 இன் 15ம் இலக்க மற்றும் 2011இன் 45ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்ட சட்டத்தின் ஏற்பாடுகளின் கீழ் அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கியொன்று.

**பங்குச் சந்தை பெயர்ப்பட்டியல்:**
வங்கியின் சாதாரண பங்குகள் கொழும்பு பங்குச் சந்தையில் பட்டியலிடப்பட்டுள்ளது.

**பணிப்பாளர்கள் சபை:**
திருமதி.எஸ். என். விக்ரமசிங்க (தவிசாளர்)
திரு.டப்.ஜே.எல்.யூ. விஜேவீர (பணிப்பாளர்)
திருமதி.சி.விஜயவர்த்தன (பணிப்பாளர்)
திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன (பணிப்பாளர்)
திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர (பணிப்பாளர்)
திரு.எல்.ஈ.சுசந்த சில்வா (பணிப்பாளர்)
திரு.ஜீ.எல்.எஸ்.சேனாதீர (பணிப்பாளர்)

**கம்பனிச் செயலாளர்:**
திருமதி.தர்சனி டி.சில்வா
சட்டத்தரணி,பிரசித்த நொத்தாரிசு,
கம்பனிச் செயலாளர்,
சத்தியப்பிரமாண ஆணையாளர்
தொலைபேசி: 2423362
மின்னஞ்சல்: secretary@hdfc.lk

**பதிவாளர்கள்:**
எஸ் எஸ் பி கோப்ரேட் சேர்விசஸ் பிரைவேட் லிமிட்டட்
விலாசம்:- 101, இன்னர் கபுளவர் ரோட், கொழும்பு-3
தொ.பே - 2573894
தொலை நகல்: 2573609
மின்னஞ்சல்: sspsec@sltnet.lk

**கட்டட சங்கமொன்றாக கூட்டிணைக்கப்பட்ட ஆண்டு:**
1984

**அனுமதியளிக்கப்பட்ட விசேட வங்கி:**
2003

**கணக்காய்வாளர்கள்:**
கணக்காய்வாளர் நாயகம் - கணக்காய்வாளர் நாயகம் திணைக்களம், பத்தரமுல்லை.

**கடன் தகுதி:**
பிட்ச் ரேட்டிங் லங்கா லிமிட்டட் இனால் வங்கிக்கு BBB+ குறித்தொதுக்கப்பட்டுள்ளது.

**வங்கியாளர்கள்:**
**இலங்கை வங்கி:**
கூட்டுறவு வங்கிக் கிளை, எச்சியுலன் சதுக்கம், கொழும்பு-1

**சம்பத் வங்கி, இல:**
110, சேர் ஜேம்ஸ் பீரிஸ் மாவத்தை, கொழும்பு-2

**மக்கள் வங்கி:**
இல: 75, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு-2

**கொமர்ஷல் வங்கி:**
கொமர்ஷல் ஹவுஸ், யூனியன் பிளேஸ், கொழும்பு-2.

**கூட்டு முகாமைத்துவம்:**
திரு.நிமால் ஜே.பி. மாமதுவ - பிரதம நிறைவேற்று அலுவலர்/பொது முகாமையாளர்
திரு.எஸ்.திசாநாயக்க - பிரதம தொழிற்பாடுகள் அலுவலர்
திரு.டி.வி.பத்திரன- பிரதம நிதியியல் அலுவலர்
திரு.டப்.ஏ.எம்.பண்டார - பிரதம தகவல் அலுவலர்
திரு.ஏ.ஜே.அத்துக்கோரள - பிரதம உள்ளக கணக்காய்வாளர்
திரு.எல்.எதிரிசிங்க - பிரதம முகாமையாளர் (மனித வளமும் நிர்வாகமும்)
திருமதி.டப்.டப்.டி.எஸ்.சீ.பெரேரா - பிரதம முகாமையாளர் (சட்டம்)
திருமதி.எச்.எஸ்.குணதிலக - பிரதம முகாமையாளர் (வியாபார அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும்)
திரு.சீ.ஆர்.பி.பாலசூரிய - பிரதம முகாமையாளர் (திறைசேரி)
திரு.டி.எம்.டி.எம்.கே.திசாநாயக்க - பிரதம முகாமையாளர் (கடன்)

**முதலீட்டாளார் தகவல்:**
திரு.டி.விதானபத்திரண
பிரதம நிதி அலுவலர்
தொ.பே: 2356800, 2446241, 2446239
நேரடி 471764 தொலை நகல்: 2356829
மின்னஞ்சல்: cfo@hdfc.lk

# பணிப்பாளர்கள் சபை




1. திரு.ஏ.ஜே.அலோசியஸ்
(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

2. திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன
(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

3. திரு.ஜீ.எல்.எஸ்.சேனாதீர
(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

4. திருமதிஎஸ்.என்.விக்ரமசிங்க தவிசாளர்
(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

5. திரு.எல்.ஈ.சுசந்த சில்வா
(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

6. திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர
(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

7. திருமதி.சி.விஜயவர்த்தன
(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

8. திரு.டப்.ஜே.எல்.யூ. விஜேவீர
(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

# பணிப்பாளர்கள் சபை அங்கத்தவர்களின் விபரங்கள்

### திருமதி.எஸ்.என்.விக்ரமசிங்க

(தவிசாளர்,நிறைவேற்றல்லாத சுயாதீனபணிப்பாளர்)

திருமதி ஷிரோமி விக்கிரமசிங்க HDFC வங்கியின் தலைவராக 2010 மே மாதத்தில் நியமிக்கப்பட்டார்.

ஹட்டன் நஷனல் வங்கியின் பிரதிப் பொது முகாமையாளர், லங்காபுத்ர அபிவிருத்தி வங்கியின் பொ.மு./பி.நி.அ, இலங்கை கொமர்ஷல் வங்கியின் பணிப்பாளர், இலங்கை வங்கிகள் சங்கத்தின் (உத்தரவாதம்) பணிப்பாளர் உட்பட பலதரப்பட்ட நிதி நிறுவனங்களில் சிரேஷ்ட முகாமைத்துவ பதவிகளை இவர் வகித்துள்ளார்.

இலங்கை கடன் முறிகள் நாணய பரிவர்த்தனை ஆணைக்குழுவின் (SEC) அங்கத்தவராகவும், இலங்கை வங்கியின் இணை நிறுவனமான சீ பாங் அசற் முகாமைத்துவ நிறுவனத்தின் தலைவராகவும் பணியாற்றியுள்ளார்.

இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியும், சத்தியப்பிரமான ஆணையாளருமான இவர், பிரிட்டனின் பட்டய முகாமைத்துவ நிலையத்தின் ஆதரவு அங்கத்தவராகவும் உள்ளார்.

### திரு.டப்.ஜே.எல்.யூ. விஜயவீர

(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

திரு உபாலி விஜேவீர HDFC வங்கியின் பணிப்பாளராக 2006 ஜூன் மாதத்தில் நியமனம் பெற்றுள்ளார். அதே வேளை, தொழில் மற்றும் தொழில் உறவுகள் அமைச்சின் செயலாளராகவும் இவர் கடமையாற்றி வருகின்றார். தொழில் பாதுகாப்பு மற்றும் சுகாதார நிலையம், ஸ்ரமவாசனா நிதியம், தேசிய தொழில் கல்வி நிலையம் என்பவற்றின் பணிப்பாளராகவும் இவர் சேவையாற்றுகின்றார். 1984 ஆம் ஆண்டில் இலங்கை நிர்வாக சேவைக்கு இவர் நியமிக்கப்பட்டிருந்தார். 1985ஆம் ஆண்டில் தொழில் திணைக்களத்தோடு இணைந்து கொண்ட இவர் உதவி ஆணையாளர், சிரேஷ்ட உதவி ஆணையாளர், பிரதி ஆணையாளர், ஆணையாளர், தொழில் ஆணையாளர் நாயகம் போன்ற பல முக்கிய பதவிகளை வகித்துள்ளார். 1997ஆம் ஆண்டின் குவைத் நாட்டின் இலங்கை தூதரகத்துக்கு இலங்கையின் ராஜதந்திர பிரதிநிதியாக நியமிக்கப்பட்டதையடுத்து, சவுதி அரேபியாவிலும் 1999ஆம் ஆண்டில் இதே பதவியில் நியமிக்கப்பட்டிருந்தார். தொழில் தரங்களுக்கான ஆணையாளராகவும், 2000ஆம் ஆண்டில் நியமிக்கப்பட்ட இவர், தேசிய சிறுவர் பாதுகாப்பு அதிகார சபையின் பணிப்பாளரும் ஆவார். களனி பல்கலைக்கழகத்தின் வர்த்தகமானி (விசேட)பட்டம், இலங்கை நிருவாக அபிவிருத்தி நிறுவனத்தில் பொது நிர்வாகத்தில் பட்டப்பின் படிப்பு பட்டம் என்பவற்றை இவர் பெற்றுள்ளார்.

### திருமதி.சி.விஜயவர்த்தன

(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

திருமதி சாந்தி விஜயவர்த்தன றுகுணு பல்கழைக்கழகத்தின் கலைமானி (கௌரவ) பட்டத்தினையும், நெதர்லாந்தின் சமூகக் கல்வி நிலையத்தின் அபிவிருத்திக் கல்வியின முதுமானிபட்டத்தையும் பெற்றுள்ளார். HDFC வங்கியின் பணிப்பாளராக 2010 ஜுன் மாதத்தில் நியமிக்கப்பட்ட இவர், நிதி திட்டமிடல் அமைச்சின் நிதித்துறை கொள்கை திணைக்கள பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை திட்டமிடல் சேவையில் உதவிப் பணிப்பாளராக 1994ஆம் ஆண்டில் இணைந்து கொண்ட இவர் தேசிய திட்டமிடல் திணைக்களத்தில் 10 வருட காலமும், தேசிய வரவு செலவு திட்ட திணைக்களத்தில் 6 வருட காலமும் பணியாற்றியுள்ளார். நிதித்துறைக் கொள்கைகள் திணைக்களத்தில் அவரது கடமைகளுக்கு மேலதிகமாக தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபை, தொடர்மாடிக் கட்டட அதிகார சபை மற்றும் வாட்டர்ஸ் எட்ஜ் நிறுவனம் என்பவற்றின் பணிப்பாளர் சபைகளிலும், திறைசேரியின் பிரதிநிதியாகவும் கடமையாற்றுகின்றார். அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியின் பணிப்பாளராகவும் இவர் பணியாற்றியவர்.

### திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன

(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

திரு. ராஜா குணரத்ன HDFC வங்கியின் பணிப்பாளராக 2010 ஜுன் மாதத்தில் நியமிக்கப்பட்டிருந்தார். வங்கியின் முக்கிய பங்குதாரரான தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையைப் பிரதிநிதித்துவம் செய்யும் வங்கியின் தேர்ந்தெடுக்கப்பட்ட பணிப்பாளராகவும் கடமையாற்றுகின்றார். இலங்கை திறந்த பல்கலைக்கழகமானுடவியல் சமூக விஞ்ஞான பீடம், சட்டக்கல்வித் திணைக்களத்தின் சட்டத்துறையில் சிரேஷ்ட விரிவுரையாளராக கடமையாற்றி வரும் இவர் தற்சமயம் தேசிய வீடமைப்பு ஆணையாளராகவும் பதவி வகித்து வருகிறார்.

சட்டமானி (சிறப்பு), கொழும்பு பல்கலைக்கழகம் என்ற கல்விசார் தகைமையையும், (அவுஸ்திரேலியா மொனாஸ்) சட்ட முதுமானி பட்டத்தையும், சட்ட மருத்துவத் துறையில் டிப்ளோமாவையும் பெற்ற இவர் இலங்கை உயர் நீதிமன்ற சட்டத்தரணியாகவும் கடமையாற்ற தகைமை பெற்றுள்ளார். தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் பணிப்பாளர் சபையிலும் இவர் அங்கத்தவராவார்.

### திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர

(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

திரு.ஜயந்த சமரவீர 2010 ஜுன் மாதத்தில் HDFC வங்கியின் பணிப்பாளராக நியமிக்கப்பட்டார். தற்சமயம் தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் தலைவராகவும் தேயிலை, இறப்பர், தெங்குத் தோட்டங்களின் கட்டுப்பாட்டுச் சபை, நகர குடியிருப்பு அதிகார சபை, நகர அபிவிருத்தி அதிகார சபை என்பவற்றின் பணிப்பாளர் சபை அங்கத்தவராகவும் கடமையாற்றி வருகின்றார்.

பாராளுமன்றத்தில் 2004-2010 வரை அங்கத்தவராகவும் இவர் கடமையாற்றியிருந்தார். 1999ஆம் ஆண்டில் மேல் மாகாண சபை அங்கத்தவராகவும் இவர் தேர்ந்தெடுக்கப்பட்டார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் ஊடகத் துறை டிப்ளோமாவை இவர் பெற்றுள்ளார்.

### திரு.ஏ.ஜே.அலோசியஸ்

(நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்)

திரு. அர்ஜுன் அலோசியஸ் வங்கியின் பணிப்பாளர் ஒருவராக 2011 மே மாதத்தில் நியமிக்கப்பட்டார். தற்போது அவர் டப். எம். மென்டிஸ் அனட் கம்பனியின் பிரதித்தவிசாளரும் பேர்பெச்சுவல் பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தின் பணிப்பாளரும் பேர்பெச்சுவல் அசெட் முகாமைத்துவ நிறுவனத்தின் பிரதம நிறைவேற்று அலுவலராகவும் பணியாற்றுகின்றார். இவர் பிரீ லங்கா குரூப் இன்வெஸ்ட்மென்ட் கிளைக்கு தலைமை தாங்குகின்றார்.

திரு. அர்ஜுன் அலோசியஸ் அவுஸ்திரேலிய பொண்ட் பல்கலைக்கழகத்தின் நிதியியல் விஞ்ஞானமானி பட்டம் பெற்றவர். அவர் தனது தொழிலை பிரீ லங்கா குரூப் நிறுவனத்தின் ஆலோசகராக ஆரம்பித்தார்.

### திரு.எல்.ஈ.சுசந்த சில்வா

(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்)

திரு.எல்.ஈ.சுசந்த சில்வா HDFC வங்கியின் சபைக்கு 2012 மே மாதம் நியமிக்கப்பட்டார்.

திரு. சில்வா இலங்கை பட்டயக்கணக்காளர் நிறுவனத்தின் அங்கத்தவர், சான்றுப்படுத்தப்பட்ட முகாமைத்துவ கணக்காளர்கள் நிறுவனத்தின் அங்கத்தவர் மற்றும் சான்றுப்படுத்தப்பட்ட தொழில்சார் முகாமையாளர்கள் நிறுவனத்தின் அங்கத்தவர் மற்றும் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகமானி விசேட பட்டம் 2 ஆம் வகுப்பு மேற் தரம் தகைமைகளை பெற்றுள்ளார். தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் முகாமைத்துவப் பணிப்பாளராவதுடன் உள்நாட்டு சர்வதேச வியாபார முகாமைத்துவத்தில் பரந்த அனுபவத்தினையும் அறிவினையும் பெற்றுள்ளார்.

### திரு.ஜீ.எல்.எஸ்.சேனாதீர

(நிறைவேற்றல்லாத சுயாதீனப் பணிப்பாளர்)

திரு.சுனில் சேனாதீர HDFC வங்கியின் சபைக்கு 2013 ஜனவரியில் நியமிக்கப்பட்டார். அவர் தற்போது நிர்மானத்துறை பொறியியல் சேவைகள், வீடமைப்பு மற்றும் பொது வசதிகள் அமைச்சின் மேலதிக செயலாளராக (வீடமைப்பும் அபிவிருத்தியும்) கடமையாற்றுகின்றார். இவர் இலங்கை நிர்வாக சேவை தரம் 1 அலுவலராவார். அவர் தனது தொழிலை ஜா எல நகர சபையின் செயலாளராக 1985 இல் ஆரம்பித்தார். அவர் நாரம்மல பிரதேச செயலகத்தில் உதவிப் பிரதேச செயலாளர், ராஜாங்கன பிரதேச செயலகத்தில் பிரதேச செயலாளராக சேவையாற்றியுள்ளார். சப்ரகமுவ மாகாண சபையின் கூட்டுறவு ஆணையாளர், காணிக் குடியிருப்பு திணைக்களத்தின் பிரதி ஆணையாளர், இலங்கை சீமெந்து கூட்டுத்தாபனத்தின் பொது முகாமையாளர், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் பிரதி கட்டுப்பாட்டாளர், குடிவரவு குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் (பயணம்) ஆகிய பதவிகளை வகித்துள்ளார். அவர் ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து கலைமானி பட்டம் (2ம் வகுப்பு கீழ் நிலை) மற்றும் களனிப் பல்கலைக்கழகத்திலிருந்து கலை முது மானி (சமூக விஞ்ஞானம்) பட்டங்களைப் பெற்றுள்ளார்.

# கூட்டு முகாமைத்துவம்
















**1. திரு.நிமால் மாமதுவ**

பிரதம நிறைவேற்று அலுவலர்/பொது முகாமையாளர்

இவர் வர்த்தக மற்றும் அபிவிருத்தி வங்கித்துறையில் 38 வருடங்களுடன் கூடிய சிரேஷ்ட தொழில்சார் வங்கியாளர் ஆவார். இவர் தனது தொழிலை ஹற்றன் நஷனல் வங்கியில் ஆரம்பித்ததோடு ஹற்றன் நஷனல் வங்கியில் 29 வருட சேவையின் போது கடன், அபிவிருத்தி வங்கித்துறை மற்றும் தொழிற்படுத்தல் துறைகளில் பல சிரேஷ்ட பதவிகளை வகித்துள்ளார். அவர் 2003 இல் ஹற்றன் நஷனல் வங்கியை விட்டு விலகி உதவிப் பொது முகாமையாளர் (கடன்) பதவியில் சனச அபிவிருத்தி வங்கியில் இணைந்ததுடன் 2005 இல் பிரதிப் பொது முகாமையாளராக பதவியுயர்த்தப்பட்டு சனச அபிவிருத்தி வங்கியில் பிரதம நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளராக பதவியேற்றார். இதில் 2012 ஒக்டோபர் வரை பதவி வகித்தார். இக்காலத்தின்போது 6 வருட காலத்தினுள் 25 இலிருந்து 85 ஆக வங்கி வலைப்பின்னலை அதிகரிப்பதனூடாக சனச அபிவிருத்தி வங்கியினை சாதாரண தொழில் முயற்சியிலிருந்து வளமிக்க அபிவிருத்தி வங்கியாக மாற்றுவதில் வெற்றியடைந்தார். அவர் அதிகளவான வெளிநாட்டு பயணங்களை மேற்கொண்டு கனடா, நெதர்லாந்து, வியட்னாம், சீனா ஆகிய நாடுகளில் நுண்பாக நிதித்துறையுடன் தொடர்புபட்ட பல்வேறு சர்வதேச அமைப்புக்களில் சனச அபிவிருத்தி வங்கியினை பிரதிநிதித்துவப் படுத்தினார். இவர் HDFC வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலர் / பொது முகாமையாளராக 2013 ஜனவரியில் பதவியேற்றார். இவர் இலங்கை கடன் முகாமைத்துவ நிறுவனத்தின் இணை அங்கத்தவராவதுடன் இலங்கை வங்கியாளர் நிறுவனத்தலிருந்து வங்கி முகாமைத்துவத்தில் டிப்ளோமா பெற்றுள்ளதுடன் ஐக்கிய இராச்சியம் பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவருமாவார்.

**2. திரு.எஸ்.திஸாநாயக்க**

பிரதம தொழிற்பாட்டு அலுவலர்

திரு.எஸ்.திஸாநாயக்க இலங்கை பட்டயக்கணக்காளர் நிலையத்தின் இணை அங்கத்தவராவார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான மாணி (விசேட வர்த்தக நிர்வாகம்) பட்டத்தை இவர் பெற்றுள்ளார். அரசதுறை நிறுவனங்களின் நிதிப்பிரிவுகள் உட்பட தனியார் மற்றும் அரசதுறை நிறுவனங்களில் 24 வருடங்கள் கடமையாற்றிய அனுபவம் இவருக்கு உண்டு. HDFC வங்கியில் உதவிப் பொது முகாமையாளர் (நிதி) என்ற பதவியில் 1995 டிசம்பரில் இணைந்து கொண்ட இவர் 10 வருட காலமாக பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) என்ற புதிய பதவியை வகிக்கும் வரை நிதிப்பிரிவிற்கு தலைமை தாங்கியுள்ளார். நிதித்துறையின் தலைவர் என்ற பதவிக்கு மேலதிகமாக பிரதம நடவடிக்கை அதிகாரியாகவும் பணியாற்றியுள்ளார். கடன் வசதிப் பிரிவு, கடன் வசூலிப்புப் பிரிவு, நிர்வாகம், தொழினுட்பம், கட்டட பராமரிப்பு, மதிப்பிடுதல் பிரிவுகள் மற்றும் கிளை நடவடிக்கைகளும் வருட இறுதிவரை அவரின் மேற்பார்வையில் இருந்து வந்துள்ளன.

**3. திரு.டி.விதான பத்திரண**

பிரதம நிதி அலுவலர்

திரு.டி.விதான பத்திரண இலங்கை பட்டயக்கக்காளர் நிலையத்தின் இணை அங்கத்தவராக இருப்பதோடு இலங்கை முகாமைத்துவ கணக்காளர் நிலையத்தின் துணை அங்கத்தவராகவும் உள்ளார். ஸ்ரீ ஜயவர்தனபுர பல்கலைக்கழகத்தின் விஞ்ஞான இளமாணி (விசேட பொது நிர்வாகம்) பட்டத்தை பெற்ற இவர் கணக்காய்வு, கணக்கியல் துறை, நிதியுதவி, முகாமைத்துவம், முகாமைத்துவ கணக்கியல், வங்கித்துறை, இலங்கையிலும் வெளிநாட்டிலும் திட்ட மற்றும் முதலீட்டு அபிவிருத்தி துறைகளில் 25 வருடங்களுக்கு மேல் அனுபவத்தை கொண்டுள்ளார்.

**4. திரு.டப்.எம்.ஏ.பண்டார**

பிரதம தகவல் அலுவலர்

திரு. டப். எம். ஏ. பண்டார HDFC வங்கியின் தகவல் தொழில்நுட்பத்துறையின் உதவிப் பொது முகாமையாளர் ஆவார். கொழும்பு பல்கலைக்கழகத்திலிருந்து விஞ்ஞான மாணி பட்டத்தைப் பெற்ற இவர் ஸ்கொட்லாந்து ஸ்டேர்லிங் பல்கலைக்கழகத்தில் தகவல் தொழில்நுட்பத்துறையில் பட்டப் பின்படிப்பு டிப்ளோமைவையும் பெற்றுள்ளார். ஐந்து வருடகால சிரேஷ்ட முகாமைத்துவ அனுபவத்துடன் 20 வருடகால தகவல் தொழினுட்ப அனுபவத்தையும் இவர் கொண்டுள்ளார். UNIX இயந்திரங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் என்பனவற்றில் பெருமளவு அனுபவத்தைக் கொண்டுள்ள இவர் இன்போமெக்ஸ் தரவுத்தளம், வலையமைப்பு நிர்வாக நடவடிக்கைகள் மற்றும் திட்ட முகாமைத்துவம் என்பவற்றில் விசேட அறிவையும் பெற்றுள்ளார்.

ஜப்பானின் CICC மற்றும் மலேசியாவின் IBM போன்ற சர்வதேச நிறுவனங்களில் தகவல் தொழினுட்பத்துறையில் முக்கிய பயிற்சியை பெற்றுள்ள இவர் ஜப்பானின் NEC நிறுவனத்திலும் ஒரு வருட காலம் பணியாற்றியுள்ளார்.

**5. திரு.ஏ.ஜே.அத்துகோறள**

பிரதம உள்ளக கணக்காய்வாளர்

திரு. அத்துகோறள பிரதம உள்ளக கணக்காய்வாளராக 2009 ஜுலை மாதத்தில் வங்கியுடன் இணைந்து கொண்டார். 2010 ஜுலை மாதத்தில் இருந்து நிறைவேற்று உத்தியோகத்தர் என்ற நியமனமும் இவருக்கு கிடைத்தது. அரசாங்க மற்றும் தனியார் துறை நிறுவனங்களில் பொது மற்றும் தகவல் வழிமுறைகள் கணக்காய்வு என்பவற்றில் 23 வருடங்களுக்கு மேற்பட்ட அனுபவம் பெற்றவர். ஐக்கிய இராச்சியம் பட்டய முகாமைத்துவ நிறுவனத்தின் அங்கத்தவருமாவார். இவர் கொழும்பு பல்கலைக்கழகத்தின்
















விஞ்ஞாமானி பட்டதாரியாகவும் உள்ளார். அமெரிக்காவின் தகவல் வழிமுறை, கணக்காய்வு, கட்டுப்பாட்டு சங்கத்தின் சான்றிதழ் பெற்ற தகவல் வழிமுறை கணக்காய்வாளர் என்ற பட்டத்தையும், சான்றிதழ் பெற்ற தகவல் பாதுகாப்பு முகாமையாளர் என்ற பட்டத்தையும் இவர் பெற்றுள்ளார். இலங்கை தேசிய வர்த்தக முகாமைத்துவ நிலையத்தின் கணனி வழிமுறை வடிவமைப்பிலும் டிப்ளோமா பட்டம் பெற்றவர். உற்பத்தி மற்றும் சேவை வழங்கல் நிறுவனங்களிலும் இவர் கடமையாற்றியுள்ளார்.

### 6. திரு.எல்.எதிரிசிங்க

பிரதம முகாமையாளர் - மனித வளமும் நிருவாகமும்

திரு.லெஸ்லி எதிரிசிங்க ஸ்ரீ ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தக நிர்வாகத்துறையில் விஞ்ஞானமானி விஷேட பட்டத்தைப் பெற்றவர். இலங்கை ஆளணி முகாமைத்துவ நிலையத்தின் மனிதவள முகாமைத்துவ பிரிவில் தேசிய டிப்ளோமாவை இவர் பெற்றுள்ளார். இலங்கை ஆளணி முகாமைத்துவ நிலையத்தின் இணை அங்கத்தவராகவுள்ள இவரது முக்கிய துறை மனிதவள முகாமைத்துவம், பயிற்சி அபிவிருத்தி ஆகும்.

மனிதவள முகாமைத்துவத் துறையில் 2 தசாப்த காலத்திற்கும் மேலான அனுபவத்தை கொண்டுள்ள இவர் உள்ளூரிலும், வெளிநாடுகளிலும் அரசாங்க மற்றும் தனியார் துறைகளில் ஆளணியினரின் பயிற்சி மற்றும் அபிவிருத்தியில் அனுபவம் கொண்டவர்.

### 7. திருமதி.டப்.டப்.டி.எஸ்.சி. பெரேரா

பிரதம முகாமையாளர் - சட்டம்

திருமதி சுதிஸ்னா பெரேரா தொழில் ரீதியாக சட்டத்தரணியாவார். அவர் தனது தொழிலை HDFC வங்கியில் சட்ட அலுவலராக 1992 இல் ஆரம்பித்தார். பின்னர் 2001 இல் முகாமையாளர் - சட்டம் பதவிக்கு பதவியுயர்த்தப்பட்டார். விஷேடமாக வீடமைப்பு நிதி, வங்கித்துறை மற்றும் வழக்குத் தொடர்தல் போன்ற சட்டத்துறைகளில் 20 ஆண்டுகள் தொழில்சார் அனுபவத்தை பெற்றுள்ளார். தலைமைத்துவம், வங்கித்துறை, வங்கித்துறை சட்டம் போன்ற துறைகளில் உள்நாட்டு வெளிநாட்டு சட்ட சமவாயங்கள் மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள் பலவற்றில் பங்கேற்றுள்ளார். தற்போது அவர் சட்டப்பிரிவின் தலைவராவதுடன் வங்கியின் சகல சட்ட தொழிற்பாடுகளுக்கும் பொறுப்புடையவராவார்.

### 8. திருமதி.எச்.எஸ். குணதிலக

பிரதம முகாமையாளர் (வியாபார அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும்)

திருமதி ஹிமாலி குணதிலக HDFC வங்கியின் பிரதம முகாமையாளர் (வியாபார அபிவிருத்தியும் சந்தைப்படுத்தலும்) ஆவார். அவர் பேராதனை பல்கலைக்கழகத்திலிருந்து கலைமானி பட்டத்தை பெற்றுள்ளதுடன் வீடமைப்பு கற்கைகள் (தற்போது நெதர்லாந்து எராஸ்மஸ் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பட்டுள்ளது) நிறுவனத்திலிருந்து நகர முகாமைத்துவத்தில் பட்டப் படிப்பின் டிப்ளோமாவை பெற்றுள்ளார். அவர் ஜயவர்த்தனபுர பல்கலைக்கழகத்திலிருந்து வியாபார நிர்வாக முதுமானி பட்டத்தையும் பெற்றுள்ளார். அத்துடன் அரசாங்க மற்றும் தனியார் துறை இரண்டிலும் வீடமைப்புத் துறையில் சுமார் 30 வருட அனுபவத்தினை பெற்றுள்ளதுடன் வீடமைப்புத் துறையில் உள்நாட்டு சர்வதெச பயிற்சித் திட்டங்களில் பல தடவைகள் பங்குபற்றியுள்ளார். இவர் 1991 இல் HDFC வங்கியில் இணைந்து தற்பொது வங்கியின் வியாபார அபிவிருத்தி மற்றும் சந்தைப்படுத்தலுக்கு பொறுப்பாக விளங்குகின்றார்.

### 9. திரு.சி.ஆர்.பி.பாலசூரிய

பிரதம முகாமையாளர் - திறைசேரி

திரு.சி.ஆர்.பி. பாலசூரிய இலங்கை இணைந்த கணக்கீட்டு தொழினுட்பவியளாளர் நிறுவனத்தின் MAAT உறுப்பினராவார். இவர் இலங்கை பட்டயக் கணக்காளர் நிறுவனத்தினால் நடாத்தப்பட்ட இறுதி பகுதி ஐ பரீட்சையினை பூர்த்தி செய்துள்ளார். ஜயவர்த்னபுர பல்கலைக்கழகத்திலிருந்து வர்த்தகமானி(விஷேட) பட்டத்தை பெற்றுள்ளதுடன் வர்த்தக மற்றும் விசேடத்துவ வங்கித்துறையில் 2 தசாப்த்தங்களுக்கு மெற்பட்ட தொழில்சார் பதவி அனுபவத்தினை பெற்றுள்ளார். இவர் தற்போது வங்கியின் திறைசேரி முகாமைத்துவ தொழிற்பாடுகளுக்கு பொறுப்பாகவுள்ளார்.

### 10. திரு.மன்ஜுல கித்ஸ்ரீ திஸாநாயக்க

பிரதம முகாமையாளர் - கடன்

திரு திஸாநாயக்க கடன் மற்றும் நிதித்துறையில் 15 வருடகால தொழிலிலிருந்து உயர்தர அனுபவம் மற்றும் நிபுணத்துவத்தை பெற்றுள்ளார். HDFC வங்கியில் இணைவதற்கு முன்னர் பிரதான தனியார் துறை நிதி நிறுவனங்களில் கடன் அலுவலர், கணக்கு முகாமையாளர், பிரதம கணக்கு முகாமையாளர், கணக்காளர் மற்றும் சிரேஷ்ட முகாமையாளர் கடனும் தொழிற்பாடுகளும் போன்ற பதவிகளில் சேவையாற்றியுள்ளார். இவர் கணக்காய்வு, நிதி முகாமைத்துவம், வரிவிதிப்பு, தொழிற்பாடுகள் மற்றும் கடன் முகாமைத்துவம் போன்ற துறைகளில் அனுபவத்தினை பெற்றுள்ளார்.

திரு. மன்ஜுல திஸாநாயக்க இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனத்தின் இணை அங்கத்தவராவார்.

# தேசிய பொருளாதாரப் பொறுப்புடைமை (National Economic Responsibility)

## எமது அணுகுமுறை

HDFC வங்கியினது பொருளாதார பொறுப்புடைமையானது பிரதான பங்குதாரரான அரசாங்கத்தினால் குறித்துரைக்கப்பட்ட கூட்டுக் குறிக்கோள்களை அடிப்படையாகக் கொண்டு சபையினால் பணிக்கப்பட்டதாகும். வங்கி கூட்டிணைக்கப்பட்டுள்ள பாராளுமன்றச் சட்டத்தின் கீழ் தாபிக்கப்பட்டவாறு HDFC வங்கியின் பிரதான குறிக்கோள் வீடுகளை நிர்மாணித்தல், உடைமை கொள்ளுதல், தரமுயர்த்தல் அல்லது அடிப்படைத் தேவைகளை வழங்குவதற்கு நிதியியல் வசதிகளை வழங்குவதாகும். HDFC வங்கியினூடாக அரசாங்கம் வசதிக்கேற்ற வீடமைப்பு நிதியினை வழங்குவதற்கு அதன் எதிர்பார்க்கைகளை இயலச் செய்யும் நபர் ஒருவருக்கு பௌதீக, உளவியல் சார்ந்த சமூக மற்றும் பொருளாதார நல்வாழ்வுக்கு அவசியமிக்க பாதுகாப்பான மற்றும் ஆரோக்கியமான புகலிடத்தை வழங்குவது அவசியமாகும்.

## மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள்

மிலேனியம் அபிவிருத்தி இலக்குகள் மூலம் அளவிடப்பட்டு தொடர்புபட்டவாறு நாடொன்றின் வாழ்க்கை பௌதீகத் தரம் மற்றும் பொருளாதார வளர்ச்சியினை மேம்படுத்துவதற்கு சிக்கனமான, சூழலியல் சார்ந்த மற்றும் சமூக ரீதியாக வசதியான, ஒழுக்கமான வீடமைப்புத் திட்டம் பல்வேறு கோணங்களில் உதவியளிக்கும். அரசாங்கத்தின் முன்னோடி அபிவிருத்தி பங்காளராக விளங்கும் HDFC வங்கி இவ் இலக்குகளை அடையாளப்படுத்துவதில் உதவி வழங்குவதற்கு அர்ப்பணித்துள்ளது. குறிப்பாக வீட்மைப்பு பொருட்கள் மற்றும் மின்சாரம், பாதுகாப்பான நீர் மற்றும் சுகாதாரத்திற்கான பெறுவழி, வானொலி மற்றும் தொலைக்காட்சி போன்றவற்றை உரிமை கொள்ளுதல் போன்றவற்றில் 1980 களிலிருந்து கணிசமான அதிகரிப்பு ஏற்பட்டுள்ள வீடமைப்பு நிலைமைகள் இவ் இலக்குகளை எய்துவதில் கணிசமாக பங்களிப்புச் செய்கின்றன.

முழுமையான வீடமைப்பு நிதியளிக்கும் நிறுவனம் ஒன்றாக HDFC வங்கி வீடமைப்பு நிதியினை நிதிவழங்குவதனூடாக வீடமைப்பு நிலைமையினை தொடர்ச்சியாக மேம்படுத்துவதற்கு அர்ப்பணித்துள்ளதுடன் அதனூடாக சகல பிராந்தியங்கள் மற்றும் பொருளாதார துறைகளில் சமமான முறையொன்றில் தேசத்தின் மிலேனிய அபிவிருத்தி இலக்குகளை அடையும் நோக்கில் பங்களிக்கின்றது. இக்காலத்தின்போது பொருளாதார செயலாற்றுகை மீதான எமது உபாய அணுகுமுறை பின்வரும் பொருளாதார பணிகளை எடுத்துக்காட்டியுள்ளது.

- நேரடி பொருளாதார பெறுமதியினை தோற்றுவித்தல்.
- வறிய மக்களுக்கு விஷேட கவனஞ் செலுத்தி தேசிய வீடமைப்பு எண்ணிக்கை மற்றும் வீட்டு உடைமைகளை அதிகரிப்பதனூடாக சமமான மானிட புகழிடத்தை ஊக்குவித்தல்.
- சமமான பிராந்திய சேவைப் பகிர்வு மற்றும் வள ஒன்றுதிரட்டலூடாக அபிவிருத்தி பாகுபாடுகளை குறைப்பதற்கு உதவுதல்.
- வங்கி பழக்க வழக்கங்கள் மற்றும் நிதியியல் சேமிப்பு கணக்குகளை ஆரம்பிப்பதனூடாக பொருளாதார வலுவூட்டலுக்கு பங்களித்தல்.
- அரசாங்கத்தின் விஷேட அபிவிருத்தி முயற்சிகளுக்கு பங்களித்தல் - தேசிய மற்றும் பிராந்திய
- மேற்குறிப்பிட்ட கொள்கைகள் மூலம் பணிக்கப்பட்ட எமது பொருளாதார பொறுப்புடைமை மற்றும் நாட்டில் வசதியான வீடமைப்பு நிதிச் சந்தையின் முக்கிய செயற்பாட்டாளர் ஒருவராக கடந்த 26 வருடங்களுக்கு மேல் நாம் தாபித்த சமூக உத்தரவாதமான நியதிச் சட்ட பணிப்புரைகளின் மீது செயலாற்றுதல்.

## கொள்கைகளும் ஆளுகையும்

எமது அடிப்படை பொருளாதார பொறுப்புடைமையானது 1997 இன் 7 ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன சட்டம், 2003 இன் 15 ஆம் இலக்க சட்டத்தின் மூலம் திருத்தப்பட்டவாறு தாபிக்கப்பட்ட கூட்டுக் குறிக்கோள்களின் மூலம் வரையறை செய்யப்பட்டுள்ளது. HDFC வங்கியின் செயற்பாடுகள் அரசாங்கத்தில் வீடமைப்பு கொள்கை மற்றும் தேசிய அத்துடன் பிராந்திய அபிவிருத்தி முயற்சிகளுக்கமைய பொதுத் திறைசேரி மற்றும் மத்திய வங்கியினால் வினியோகிக்கப்பட்ட பொருளாதார பணிப்புரைகள் மூலம் மேலும் பணிக்கப்படுகின்றன. உள்ளக கொள்கை வழிகாட்டல்கள் மேற்குறிப்பிட்ட பரந்த அடிப்படையிலான குறிக்கோள்களை தொழிற்பாட்டு இடர் முகாமைத்துவம் மற்றும் தொழில் தரத்தினை பேணுதல் என்பவற்றிற்கேற்ப அமுலாக்குவதில் பணிப்பாளர் சபையினால் விருத்தியாக்கப்பட்டு அனுமதிக்கப்படுகின்றன. இக் கொள்கைகள் பல முகாமைத்துவ குழுக்களின் மூலம் நிறைவேற்றப்படுகின்றன. HDFC வங்கிச் சட்டமும் கொள்கை பணிப்புரைகளும் www.gosl.lk, www.cbsl.lk மற்றும் வங்கியின் கூட்டு இணையத்தளமான www.hdfc.lk ஆகிய இணையத்தளங்களில் கிடைக்கப் பெறுகின்றன.

**முக்கிய செயலாற்றுகைக் குறிகாட்டிகள் - தேசிய பொருளாதார பொறுப்புடைமை**

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| **தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி** | **இலங்கை ரூபா - மில்** | **%** | **இலங்கை ரூபா - மில்** | **%** |
| வட்டி வருமானம் | 2,635 | 98 | 2,260 | 94 |
| ஏனைய வருமானம் | 57 | 2 | 125 | 6 |
| **தோற்றுவிக்கப்பட்ட மொத்தப் பெறுமதி** | 2,692 | 100 | 2,385 | 100 |
| **பொருளாதார பெறுமதிப் பகிர்வு** | | | | |
| பொருட்கள் மற்றும் சேவை வழங்குனர்களுக்கானது | 2,051 | 76 | 1,564 | 66 |
| ஊழியர்களுக்கானது | 458 | 17 | 345 | 15 |
| அரசாங்கத்திற்கானது | 123 | 5 | 189 | 8 |
| பங்குதாரர்களுக்கானது (பங்கிலாபம்) | 0 | 0 | 0 | 0 |
| பிடித்து வைத்தல் (தேய்மானம், கடன் நட்ட ஏற்பாடு, பிடித்து வைக்கப்பட்ட இலாபம்) | 60 | 2 | 244 | 10 |
| **பகிரப்பட்ட மொத்தப் பெறுமதி** | **2,692** | **100** | **2,374** | **100** |

| | 2012 | | 2011 | |
|---|---|---|---|---|
| **அரசாங்கத்தின் முதலீட்டின் மீதான நிதியியல் வருவாய்** | | | | |
| வரிகள் | 123 | | 189 | |
| பங்கிலாபத்தின் 51% | 0 | | 0 | |
| அரசாங்கத்திற்கான மொத்த நிதியியல் வருவாய் | 123 | | 189 | |
| அரசாங்க முதலீடு (51% பங்குதாரர் நிதி) | 1,219 | | 1,084 | |
| முதலீட்டு % ஆக வருவாய் | 10% | | 19% | |
| **மானிட குடியிருப்புக்களை ஊக்குவித்தல்** | | | | |
| **தேசிய வீடமைப்பு மற்றும் வீட்டு உடைமையினை அதிகரிப்பதற்கான ஒன்று சேர்ந்த சேவை** | | | | |
| 2011.12.31 வரை ஒன்று திரட்டிய கடன்களின் எண்ணிக்கை | 156,563 | | 144,159 | |
| 2011.12.31 வரை ஒன்று திரட்டிய கடன்களின் பெறுமதி - ரூபா மில் | 31.83 | | 28.23 | |
| புதிய வீட்டு நிர்மாணத்திற்காக உதவியளிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 10,024 | | 12,142 | |
| ஏனைய வீடமைப்பு நோக்கங்களுக்காக உதவியளிக்கப்பட்ட குடும்பங்களின் எண்ணிக்கை | 2,380 | | 2,082 | |
| வீடமைப்பு நோக்கங்களுக்காக உதவியளிக்கப்பட்ட குடும்பங்களின் மொத்த எண்ணிக்கை | 12,404 | | 14,224 | |
| ஆண்டின்போது வழங்கப்பட்ட கடன்களின் பெறுமதி - ரூபா மில். | 3,599 | | 4,659 | |
| ஆண்டின்போது வழங்கப்பட்ட கடன்களின் சராசரி அளவு | 0.29 | | 0.33 | |
| **நோக்க அடிப்படையில் சேவைப்பகிர்வு** | **ரூபா - மில்** | **%** | **ரூபா - மில்** | **%** |
| நிர்மாணம் | 2,833 | 79 | 3,594 | 75 |
| கொள்வனவு | 323 | 9 | 573 | 12 |
| மீட்டல் | 112 | 3 | 64 | 1 |
| திருத்தங்களும் மேம்படுத்தல்களும் | 71 | 2 | 290 | 6 |
| வாழ்க்கை முறைத் தேவைகள் | 260 | 7 | 240 | 5 |
| மொத்தம் | 3,599 | 100 | 4,762 | 100 |
| **அபிவிருத்தி பாகுபாடுகளை குறைப்பதற்கான உதவி** | | | | |
| **வறிய மக்களுக்கான சேவை - கடன்களின் எண்ணிக்கை** | **கடன்** | **%** | **கடன்** | **%** |
| குறைந்த வருமானக் குழு | 7,091 | 57 | 4,823 | 34 |
| மத்திம வருமானக் குழு | 2,831 | 23 | 4,894 | 34 |
| பரந்த வருமானக் குழு | 2,482 | 20 | 4,507 | 32 |
| மொத்தம் | 12,404 | 1.00 | 14,224 | 100% |
| | **கடன்** | | **கடன்** | |
| **துறை ரீதியான சேவைப் பகிர்வு** | **ரூபா - மில்** | **%** | **ரூபா - மில்** | **%** |
| சேவைகள் | 2,781 | 77% | 3,560 | 75 |
| கைத்தொழில் | 545 | 15% | 824 | 17 |
| விவசாயம் | 269 | 7% | 371 | 8 |
| ஏனைய | 4 | 0% | 7 | 0 |
| **மொத்தம்** | 3,599 | 100 | 4,762 | 100 |

| மாகாண ரீதியாக சேவைப் பகிர்வு - கடன்களின் எண்ணிக்கை | கடன் | % | கடன் | % |
|---|---|---|---|---|
| மேல் மாகாணம் | 5,058 | 41 | 5,740 | 40 |
| மத்திய மாகாணம் | 2,243 | 18 | 2,775 | 20 |
| தென் மாகாணம் | 1,085 | 9 | 1,188 | 8 |
| கிழக்கு மாகாணம் | 1,199 | 10 | 809 | 6 |
| ஊவா மாகாணம் | 766 | 6 | 819 | 6 |
| வடமத்திய மாகாணம் | 317 | 3 | 475 | 3 |
| சப்ரகமுவ மாகாணம் | 903 | 7 | 1,369 | 10 |
| வடமேல் மாகாணம் | 791 | 6 | 880 | 6 |
| வட மாகாணம் | 42 | 0 | 169 | 1 |
| **வடமத்திய மாகாணம்** | **12,404** | **100** | **14,224** | **100** |
| **சப்ரகமுவ மாகாணம்** | **கடன்** | **%** | **கடன்** | **%** |
| கொழும்பு மாவட்டத்துக்கு வெளியில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 9,989 | 81 | 11,279 | 79 |
| மேல் மாகாணத்துக்கு வெளியில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 7,346 | 59 | 6,239 | 60 |
| கொழும்பு மற்றும் கம்பஹா மாவட்டங்களுக்கு வெளியில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 8,344 | 67 | 9,770 | 69 |
| வடக்கு மற்றும் கிழக்கில் வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை | 2,349 | 19 | 1,850 | 13 |
| தொழில் உருவாக்கலும் வறுமை ஒழித்தலும் | | | | |
| வழங்கப்பட்ட நேரடித் தொழில்கள் | 488 | | 505 | |
| பொருளாதாரத்தினுள் நுழைக்கப்பட்ட நேரடியற்ற தொழில்கள் | 9,969 | | 13,180 | |
| நிதியியல் அறிவு மற்றும் சேமிப்பு ஊக்குவித்தல் | | | | |
| நடமாடும் வங்கிச் சேவை வாடிக்கையாளர் மொத்த எண்ணிக்ககை | 98,971 | | 65,743 | |
| ஆண்டின்போது ஊக்குவிக்கப்பட்ட புதிய நடமாடும் வங்கி வாடிக்கையாளர் எண்ணிக்ககை | 33,228 | | 20,177 | |
| **வரையறுக்கப்பட்ட பங்களிப்பு மற்றும் நலத்திட்டங்களுக்கான பங்களிப்பு** | **LKR M** | | **LKR M** | |
| வரையறுக்கப்பட்ட பங்களிப்புத் திட்டங்களுக்கான பங்களிப்பு | 42.74 | | 32.71 | |
| வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்களுக்கான பங்களிப்பு | 41.18 | | 9.44 | |
| மொத்தம் | 83.92 | | 42.15 | |

### நேரடிப் பொருளாதார தோற்றுவித்தலும் பகிர்வும்

இவ்வாண்டின் போது HDFC வங்கி 2011 இல் ரூபா 2,385 மில்லியனுக்கெதிராக பொருளாதாரத்திற்கு ரூபா 2,691 மில்லியன் பெறுமதியினை தோற்றுவித்துள்ளது. இப்பெறுமதி ரூபா 60 மில்லியன் வங்கியினுள் பிடித்து வைக்கப்பட்டிருக்கும் அதேவேளை வழங்குனர்கள், ஊழியர்கள், அரசாங்கம், பங்குதாரர்கள் மத்தியில் பகிரப்பட்டுள்ளது. நாம் 2012 இன் போது நேரடி மற்றும் நேரடியற்ற வரிகளாக அரசாங்கத்திற்கு ரூபா 123 மில்லியன் தொகையினை பங்களிப்புச் செய்துள்ளோம்.




**தோற்றுவிக்கப்பட்ட பொருளாதார பெறுமதி 2006-2012 ரூபா மில**

### அரசாங்கத்திற்கான நிதியியல் வருவாய்

இலங்கை அரசாங்கம் பங்குடைமையில் 51% இனை பிரதிநிதித்துவம் செய்கின்ற ஒவ்வொன்றும் ரூபா 100 கொண்ட 3,278,000 சாதாரண பங்குகளில் ரூபா 327,800,000 இனை முதலீடு செய்துள்ளது. தற்போது வங்கியின் தொழிற்பாடுகள் சந்தை மற்றும் பங்குதாரர்களின் நிதியத்திலிருந்து திரட்டப்பட்ட வட்டியுடைய நிதியினால் முழுமையாக நிதியளிக்கப்பட்டுள்ளது.

HDFC வங்கியில் அரசாங்கத்தின் ஒன்றுதிரட்டிய நிதி:- ஆரம்ப மூலதனம் ரூபா 490.62 மில்லியன் மற்றும் ஒன்றுதிரட்டிய ஒதுக்கின் 51% மூலதனம் ரூபா 728 மில்லியன் தொகை ரூபா 1,219 மில்லியனாக காணப்படுகின்றது. இவ்வாண்டின்போது HDFC வங்கிவரிகள் மற்றும் பங்கிலாபங்களாக அரசாங்கத்திற்கு ரூபா 123 மில்லியன் தொகையினை கொடுப்பனவு செய்துள்ளதுடன் இது ரூபா 1,219 மில்லியன் முதலீட்டின் மீதான 10% நிதி வருவாயினை காட்டுகின்றது.




**அரசாங்கத்துக்கான வருவாய் 2009-2012**

### மானிடக் குடியிருப்பை ஊக்குவித்தல்

அடிப்படை வியாபார தொழிற்பாடுகளிலிருந்து நேரடி பொருளாதார பெறுமதி தோற்றுவித்தலுக்கு மத்தியில் நாம் நாட்டின் சமூக பொருளாதார அபிவிருத்தியில் இத்துறையில் கடந்த 17 வருடங்களுக்கு மேலாக HDFC வங்கி அடிப்படை தொழிலின் நேரடித் தாக்கம் மிகவும் முக்கியமானது என மதிப்பிடுகின்றோம்.

### நாட்டுக்கான ஒன்றுசேர்ந்த சேவைகள்

HDFC வங்கி வீட்டுரிமையினை பெற்றுக் கொள்ளல் தற்போதுள்ள வாழிடங்களை மேம்படுத்தல் மற்றும் வீட்டு உபகரணங்கள் மற்றும் பொருட்களை பெற்றுக் கொள்வதற்காக 157,000 குடும்பங்களுக்கு மேல் உதவியளித்துள்ளோம். 2000 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்ட வசதிகளின் மொத்தப் பெறுமதி ரூபா 32 பில்லியன் ஆவதுடன் இதில் 75% இற்கும் மேற்பட்டவை குறைந்த மற்றும் மத்திய வருமானக் குழுக்களுக்கு வழங்கப்பட்டது.




**வழங்கப்பட்ட கடன்களின் ஒன்று சேர்ந்த பெறுமதி**

### வீட்டு உடைமையினை அதிகரித்தல்

இவ்வாண்டின்போது HDFC வங்கி மொத்தமாக ரூபா 3,600 மில்லியன் தொகையினை 12,404 குடும்பங்களுக்கு வழங்கியுள்ளது. இவ்வசதிகள் வீட்டு நிர்மாணம், கொள்வனவு, உயர் வட்டி வீதத்தில் பெற்றுக் கொள்ளப்பட்ட வீடமைப்பு கடன்களிலிருந்து மீள்தல், மீள் புதுப்பித்தல், திருத்துதல், தற்போதுள்ள கட்டமைப்புக்களை விரிவாக்குதல் போன்றவற்றுக்காக வழங்கப்பட்டுள்ளன. வீட்டுடைமைப் பொருட்கள், தளபாடங்கள் மற்றும் ஏனைய வாழ்வு முறை அபிவிருத்தி தேவைகளை கொள்வனவு செய்வதற்காக வழங்கப்பட்ட கடன்களின் எண்ணிக்கை 1,536 ஆவதுடன் கடன்தொகை ரூபா 260 மில்லியன் பெறுமதியாகும். 12,000 ஆயிரம் குடும்பங்கள், 55000 மக்கள் அழுத்தமான புகலிடத் தேவைகளை நிறைவு செய்வதற்காக இவ்வசதிகள் உதவியளித்துள்ளன என நாம் கருதுகின்றோம்.




**நிர்மாணக் கடன்கள் வழங்குதல் - 2012**




- நிர்மாணம்
- கொள்வனவு
- மீட்டல்
- திருத்தங்களும் மேம்படுத்தல்களும்
- வாழ்வு முறைத் தேவைகள்

**நோக்கங்கள் வாரியான சேவைப் பகிர்வு - 2012**

### தேசிய வீடமைப்பு எண்ணிக்கைக்கான பங்களிப்பு

2012 இன் போது HDFC வங்கிசுமார் 10,024 புதிய வீடுகள் மூலம் இலங்கையின் தேசிய வீடமைப்பு எண்ணிக்கையினை நோக்கி பங்களிப்பு வழங்கியது. HDFC வங்கி இவ்வீடுகளின் நிர்மாணப் பெறுமதியில் ரூபா 3,599 மில்லியன் தொகையினை நிதியளித்தது. இவ்வாண்டின்போது வழங்கப்பட்ட நிர்மாணக் கடன்களின் எண்ணிக்கை 2011 இலிருந்து 12,142 கடன்களுடன் ஒப்பிடுகையில் 17% இனால் வீழ்ச்சியடைந்தது. வங்கி தற்போதுள்ள வீடுகளின் திருத்தங்கள், மீள் புதுப்பித்தல் மற்றும் மேம்படுத்தல்களுக்காக ரூபா 71 மில்லியன் தொகையினையும் வழங்கியிருந்தது.

### அபிவிருத்தி பாகுபாடுகளை குறைப்பதற்கான உதவி

குறைந்த வருமான மற்றும் மத்திய வருமானம் உழைப்போருக்கான முன்னுரிமைப்படுத்தப்பட்ட சேவைகள். இவ்வாண்டின்போது அனுமதிக்கப்பட்ட வசதிகளின் 80% இற்கும் அதிகமானவை குறைந்த மற்றும் மத்திய வருமானக் குழுக்களுக்கு வழங்கப்பட்டிருந்தது. இது அனுமதிக்கப்பட்ட கடன் பெறுமதியின் 60% இனைப் பிரதிநிதித்துவப்படுத்துகின்றது. அனுமதிக்கப்பட்ட வசதிகளில் 57% ஆன கடன்கள் ரூபா 200,000 இனை விடக் குறைந்தனவாக காணப்பட்டன. ரூபா 200,000 மற்றும் ரூபா 500,000 இடையிலான கடன்கள் 23% ஆக காணப்பட்டன. வங்கியினால் வழங்கப்பட்ட கடன்களின் சராசரி அளவு 2011 இல் ரூபா 327,000 இலிருந்து 2012 இல் ரூபா 290,000ஆக உயர்ந்தது. இது நாட்டின் வறுமைக் குழுக்களுக்கான சேவை வழங்குவதை நோக்கிய எமது சமூக பொறுப்பின் விரிந்த நோக்கினைப் பிரதிபலிக்கின்றது. பெரும்பான்மையான கடன்கள் முறைசார் வீடமைப்பு நிதியினை பெற்றுக்கொள்ள முடியாத குறைந்த வருமானமுடைய குடும்பங்களுக்காக மேற்கொள்ளப்பட்டன. இது வீடொன்றை உரிமையாக்கிக் கொள்வதற்கான கனவொன்றினை நனவாக்கிக் கொள்வதற்கு இக் குடும்பங்களை இயலச் செய்துள்ளதுடன் வீட்டு உடைமையாளர்களின் வாழ்க்கைத் தரத்தினையும், வாழ்வு நியமங்களையும் கணிசமானளவு மேம்படுத்தியுள்ளது.

### துறைசார் சேவைப் பகிர்வு

இவ்வாண்டின் போது ரூபா 2.8 பில்லியன் தொகை கடன் அளிப்பின் மொத்தப் பெறுமதியில் 77% இனை பிரதிநிதித்துவம் செய்கின்ற வேறுபட்ட சேவைத்துறைகளிடமிருந்தான வாடிக்கையாளர்களுக்கு பகிர்ந்தளிக்கப்பட்டது. மற்றுமொரு 15% கைத்தொழில்த் துறை வருமான வாடிக்கையாளர்களுக்கு அனுமதிக்கப்பட்டதுடன் 7% விவசாயத்துறை வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டது.




துறைசார் சேவைப் பகிர்வு - 2012




மாகாண ரீதியாக கடன் பகிர்வு - 2012

## மாகாண ரீதியாக சேவைப் பகிர்வு

அதிகரித்து வரும் நகரமயமாக்கல் வருடாந்தம் 3% வளர்ச்சியுடன் நகர வாழ்விடங்களில் நகரவாசி அதிகரிப்பினை தோற்றுவிக்கின்றது. இப்போக்கு வசதியற்ற பகுதிகளை அதிகரிப்பதற்கு மாகாணத்தினுள் காணி மற்றும் நிர்மாண தொழிலாளர் விலைகள் அதிகரித்துள்ள பாரிய எண்ணிக்கையிலான குடிபெயர் குடும்பங்களின் காரணத்தினால் மேல் மாகாணத்தில் கணிசமானளவு பிரதிபலிக்கின்றது. இவ்வளர்ச்சிப் போக்கிற்கு HDFC வங்கி மேல் மாகாணத்தினுள் 5,058 கடன்களை வழங்கியுள்ளது. இது முறையே 2012 இல் வழங்கப்பட்ட கடன்களின் அளவில் 41% ஐயும் பெறுமதியில் 69% ஐயும் பிரதிபலிக்கின்றது. இதில் 66% ஆன கடன்கள் மத்திய வருமானக் குழுக்களுக்காக வழங்கப்பட்டது. இக்கடன்களில் புதிய நிர்மாணத்திற்காக 73%, வீடு கொள்வனவிற்காக 6%, ஏனைய வீடமைப்பு தொடர்புபட்ட கடன்கள் 11% என்ற ரீதியில் பிரதிநிதித்துவம் செய்கின்றன.

## கொழும்புக்கு வெளியே வழங்கப்பட்ட சேவை

வழங்கப்பட்ட மொத்த கடன் எண்ணிக்கையில் 81% கொழும்பைத் தவிர்ந்த ஏனைய மாவட்டங்களுக்கு வழங்கப்பட்டுள்ளதுடன் 67% கொழும்பு மற்றும் கம்பஹாவைத் தவிர்ந்த மாவட்டங்களுக்கானதாகும். ஏறக்குறைய 51% மேல் மாகாணத்திற்கு வெளியிலுள்ள வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

## பிராந்தியங்களுக்கான வள ஒன்றுதிரட்டல்

மேல் மாகாணம் தவிர்ந்த பிராந்திய சமூகப் பொருளாதார அபிவிருத்திக்கு கணிசமான பங்களிப்பினை செய்துள்ள பிராந்திய வீடமைப்பு நிதித் தேவைகளுக்கு நிதியளிப்பதற்கு நிதியியல் வளங்களின் பாரிய தொகையொன்று மேல் மாகாணம் தவிர்ந்த பிரதேசங்களில் திரட்டியுள்ளது. HDFC வங்கிரூபா 1,602 மில்லியன் தொகையினை தென் மாகாணத்திற்கும், ரூபா 1,121 மில்லியன் தொகையினை வட மத்திய மாகாணத்திற்கும், ரூபா 1,140 மில்லியன் தொகையை ஊவா மாகாணத்திற்கும் பின்வரும் அட்டவணை காண்பிப்பது போன்று பிராந்திய அபிவிருத்திக்கு வங்கியின் அர்ப்பணிப்பாக நிதியியல் வளங்களை ஒன்று திரட்டியுள்ளது. இது மாகாண அபிவிருத்தி பாகுபாடுகளை குறைப்பதற்கான கணிசமான பங்களிப்பொன்றாக மேற்கொள்ளப்பட்டது.

**பிராந்தியங்களுக்கான நிதியியல் வளங்கள் ஒன்றுதிரட்டுதல்**

| | கடன்கள் ரூபா மில். | வைப்புகள் ரூபா மில். | பிராந்தியத்துக்கு ஒன்றுதிரட்டப்பட்ட நிதியியல் வளங்கள் |
|---|---|---|---|
| மேல் மாகாணம் | 7,256 | 3,168 | 4,088 |
| தென் மாகாணம் | 2,369 | 767 | 1,602 |
| மத்திய மாகாணம் | 2,408 | 1,183 | 1,225 |
| வடமத்திய மாகாணம் | 1,786 | 665 | 1,121 |
| ஊவா மாகாணம் | 1,513 | 373 | 1,140 |
| | 15,332 | 6,156 | 9,176 |

தேசிய பொருளாதாரப் பொறுப்புடைமை *தொடர்ச்சி.*

### வீடமைப்பு நிதிக்கான பெறுவழியினை மேம்படுத்தல்

வீடமைப்பு நிதிக்கான இலங்கையின் செயல்திறன்மிக்க கேள்வி தேசிய வீடமைப்பு தேவைகளை விட கணிசமானளவு குறைந்து காணப்படுகின்றது. இதற்கு பிரதான காரணம் வீடமைப்பு நிதிக்கு குறைவான பெறுவழியாகும். உண்மையான வீடமைப்பு தேவையுடன் செயல்திறன்மிக்க கேள்வியினை ஒரே நேரத்தில் நிகழச் செய்வதற்காக குறைந்த வருமானமுள்ள மக்களுக்கு வீடமைப்பு நிதியினை பெற்றுக் கொள்வதற்கான பெறுவழியினை மேம்படுத்துவது அவசியமானதாகும். பெரும்பான்மையான இம்மக்கள் நகர்ப்புறங்களிலுள்ள குறைந்த வருமானமுடைய குடும்பங்களாவதுடன் வசதியான ஈட்டுக் கடன் ஒன்றை பெற்றுக் கொள்வதற்கு தகுதி பெறுகின்றனர். ஆனால் பெறுவழியின்மையினால் இது மட்டுப்படுத்தப்பட்டுள்ளது.

இம்மக்களுக்கான முறைசார் வங்கி வசதிகளை வழங்குவதிலுள்ள பொதுவான தடைகள் நிதியியல்சார் அறிவு போதாமை, குறைந்த வங்கித்துறை பழக்கம், கிளைகளில்லாமை மற்றும் குறைந்த வருமானம் என்பனவாகும். நிதியியல் துறை தாண்டிய இடர்களிலுள்ள இச்சமூகம் மிகவும் பலவீனமிக்க பகுதியினராகும். வீடமைப்பு மற்றும் நாளாந்த நிதியியல் தேவைகளுக்காக பணத்தினை கடனாக பெறும்போது முறைசாரா நிதியளிப்போரிடம் தங்களது சொத்துக்களை இழக்கின்ற, முறைசார் வங்கித்துறை வழியில் கொடுக்கல் வாங்கல்களை செய்யாத இச்சமூகத்தின் அதிகளவான வீதத்தினரை HDFC வங்கி அனுபவ ரீதியாக கண்டறிந்துள்ளது.

HDFC வங்கி சேமிப்பினை ஊக்குவிப்பதினூடாக வீடமைப்பு நிதியளித்தலுக்கான பெறுவழியினை மேம்படுத்துவதற்கு தொடர்ச்சியாக பாடுபடுகின்றது. HDFC வங்கி அதன் வளங்களையும், நிபுணத்துவத்தையும் வங்கித்துறை பழக்க வழக்கங்கள், திறன்கள் மற்றும் நம்பிக்கையினை இச்சமூகத்தில் புகுத்துவதற்கு பயன்படுத்துவதுடன் இதனூடாக அவர்களை முறைசார் வீடமைப்பு நிதி பெறுவழியினை இயலச்செய்கின்றது. பெரும்பான்மையான எமது வாடிக்கையாளர்கள் இவ்வகையைச் சார்ந்தோர் என்பதனை குறிப்பிடுவதில் நாம் மகிழ்ச்சியடைகின்றோம்.

### நடமாடும் வங்கித்துறையின் தொழிற்பாடும் நிதியியல் உள்ளடக்கமும்

உபாய அணுகுமுறை ஒன்றாக HDFC வங்கி அவர்கள் மத்தியில் வங்கித்துறை மற்றும் சேமிப்பு பழக்க வழக்கங்களை ஊக்குவிப்பதற்காக முறைசார் வங்கி நடவடிக்கைகளை பயன்படுத்தாத குறைந்த வருமானம் பெறுவோரை கவருவதற்கு அதன் நடமாடும் வங்கித் தொழிற்பாட்டினை ஆரம்பித்தது. இந்நடவடிக்கை 2007 இல் ஆரம்பிக்கப்பட்டதுடன் 115 நடமாடும் வங்கிச் சேவையுடன் கிளை வலைப்பின்னலூடாக 146 நகர்ப்புறங்களில் நாடு முழுவதும் வெற்றிகரமாக நடைமுறைப்படுத்தப்படுகின்றது. எமது பிரச்சார உதவியாளர்கள் நாடு பூராகவும் நாளாந்தம் சுமார் 15,000 வாடிக்கையாளர்களிடம் வருகை தருவதுடன் பெரும்பான்மையான வாடிக்கையாளர்கள், வீதியோர விற்பனையாளர்கள், சிறு கடை உரிமையாளர்கள், நாளாந்தச் சம்பளம் பெறும் தொழிலாளர்கள், மீனவர்கள் போன்றோர். இவர்களின் வருமானம் நிலையற்றதாகும். இவ்வாடிக்கையாளர்களில் 35% இற்கு மேற்பட்டோரின் நாளாந்த சராசரி வைப்பு நாளொன்றுக்கு ரூபா 250 ஐ விட குறைவானதாகும். எமது நடமாடும் வங்கிச் சேவையூடாக முறைசார் வங்கி நடவடிக்கைகளுக்கு இவ்வாடிக்கையாளர்களில் அறிமுகப்படுத்தப்பட்டது இதுவே முதற் தடவையாக இருந்தது.

### நிதியியல் உள்ளடக்கத்தினையும் அறிவினையும் ஊக்குவித்தல்

2012 இல் நாடுபூராகவும் குறைந்த வருமானம் பெறும் சமூகத்திடமிருந்து வைப்பாளர்களாக 33,228 புதிய நடமாடும் வங்கி வாடிக்கையாளர்கள் HDFC வங்கியிற்கு சேர்க்கப்பட்டிருந்தனர். நடமாடும் வங்கி வலைப்பின்னலூடாக குழு உத்தரவாத முறைமையொன்றின் மீது வாழ்வு முறை அபிவிருத்தி பாதுகாப்பு ஒன்றுக்கான விஷேட கடன் திட்டமொன்றினையும் தங்கள் சேமிப்புக் கெதிரான பாதுகாக்கப்பட்ட நுண்பாக கடன் திட்டமொன்றையும் நாம் ஆரம்பித்தோம். சேமிப்பு மற்றும் வங்கி முறையின் முக்கியத்துவம் பற்றியும் கணக்கு ஆரம்பித்தல், ஆவணங்களை பூர்த்தி செய்வதற்கு உதவுவதற்கும் குறைந்த மற்றும் மத்திய வருமானமுடைய மக்களுக்கு அறிவூட்டுவதற்கும் HDFC வங்கி அர்ப்பணிப்புடைய பதவியினரை பணிக்கமர்த்தியது. நாம் ஓய்வு கால மற்றும் அவர்களது பிள்ளைகளின் சிறந்த எதிர்காலத்திற்காக அவர்களது நாளாந்த சம்பளத்தின் பகுதியொன்றினை சேமிப்பதற்கும் ஊக்குவித்தோம். இந்நோக்கத்திற்காக ஓய்வு காலத்திற்கான சொத்தினை உருவாக்குவதற்கு விஷேடமாக அவர்களுக்கென வடிவமைக்கப்பட்ட கவர்ச்சி மிக்க வாடிக்கையாளர் குழு முதலீட்டுத் திட்ட நிதியமொன்றில் நிகழ்வுமிக்க இடைவெளிகளில் ரூபா 100 இனை விஞ்சிய ஏதேனும் தொகையினை முதலிடுவதற்கு அவர்களை நாம் அறிவூட்டினோம்.




**நடமாடும் வங்கிச்சேவை வாடிக்கையாளர் வளர்ச்சி**

# நிதி அறிக்கை

பணிப்பாளரகள் சபை அறிக்கை **30**
சபை உப குழுக்களின் அறிக்கை **34**
கணக்காய்வாரள் தலைமை அதிபதியின் அறிக்கை **41**
வருமானக் கூற்று **44**
அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று **45**
நிதியியல் நிலைக் கூற்று **46**
காசுப்பாய்ச்சல் கூற்று **47**
ஒப்புரவு மாற்றக் கூற்று **48**
கணக்கீட்டு கொள்கைகள் **49**
நிதியியல் கூற்றுக்கான குறிப்புகள் **53**

# பணிப்பாளரகள் சபை அறிக்கை

## 1. பொது

வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கியின் (HDFC Bank) 2010 ஆம் ஆண்டிற்கான ஆண்டறிக்கை கணக்காய்வு செய்யப்பட்ட நிதி அறிக்கைகள், அவற்றின் மீதான கணக்காய்வு அறிக்கை, குழுமத்தின் திரட்டிய நிதி அறிக்கை என்பவற்றை அங்கத்தவர்களுக்குச் சமர்ப்பிப்பதில் HDFC வங்கியின் பணிப்பாளர் சபை மகிழ்ச்சியடைகின்றது.

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபன வங்கி (இனிமேல் HDFC வங்கி என அழைக்கப்படும்) 1997ஆம் ஆண்டு 07ஆம் இலக்க வீடமைப்பு அபிவிருத்தி நிதிக்கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைய இலங்கையில் ஸ்தாபிக்கப்பட்ட அனுமதி பெற்ற விஷேட தன்மை கொண்ட வங்கியாகும். குறிப்பிட்ட இந்தச் சட்டம் 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க சட்டத்தினால் திருத்தப்பட்டதையடுத்து HDFC வங்கி விஷேட அனுமதி பெற்ற வங்கி என்ற அடிப்படையில் வங்கி நடவடிக்கைகளில் ஈடுபடும் அதிகாரத்தைப் பெற்றுக் கொண்டது. HDFC வங்கி கொழும்பு பங்கு பரிவர்த்தனை நிலையத்திலும் 2005ஆம் ஆண்டில் பதிவுசெய்யப்பட்டுள்ளது.

## 2. முக்கிய நடவடிக்கைகள்

வங்கியினதும் குழுமத்தினதும் (HDFC றியல் எஸ்டேட் நிறுவனம் உட்பட) முக்கிய நடவடிக்கைகள் வீடமைப்பு மற்றும் வீடமைப்பு அபிவிருத்தி திட்டங்களுக்கு தொடர்ந்து நிதியுதவிவழங்குவதாகும். ஆய்வுக்குட்பட்ட நிதி வருடத்தில் HDFC வங்கியினதும், குழுமத்தினதும் முக்கிய நடவடிக்கைகளில் குறிப்பிடத்தக்க மாற்றம் எதுவும் இடம்பெறவில்லை.

## 3. நடவடிக்கைகளின் மீளாய்வு

11இலிருந்து 13ஆம் பக்கம் வரையிலான பொது முகாமையாளர் / பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்வும் 20 ஆம், 21 ஆம் பக்கங்களிலுள்ள நிதி மீளாய்வு அறிக்கை என்பன வங்கியின் நிதி நிலைமை, செயற்பாடு, நடவடிக்கைகளின் தன்மை, நிதி வருடத்தில் இடம்பெற்ற முக்கிய நிகழ்வுகள் என்பன சம்பந்தமாக மொத்த மதிப்பீட்டை வெளியிடுகின்றன. இந்த அறிக்கைகள் பணிப்பாளர்களின் அறிக்கையில் முக்கிய இடத்தை பெறுகின்றன.

## 4. நோக்கு, செயற்பணி, கூட்டிணைப்புச் செயற்பாடு

வங்கியினது தொலைநோக்கும், இலக்கும் கூட்டிணைப்புத் திட்டத்துடன் இணைந்துள்ளன. இந்தத் திட்டம் அறிக்கையின் 2ஆம், 3ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளது. நோக்கு, செயற்பணி, அடைவதற்கு உயர்மட்ட தரத்துடன் வங்கி நடவடிக்கைகள் சீரான வகையில் மேற்கொள்ளப்பட்டன.

## 5. எதிர்கால அபிவிருத்திகள்

இதுவரை வங்கித் தொடர்புகள் அற்றிருந்த சமூகத்தினரை இணைக்கும் வகையில் கடன் வசதி மற்றும் வைப்புப் பணத்துறை என்பவற்றை பன்முகப்படுத்த வங்கி உத்தேசித்துள்ளது. வாடிக்கையாளர்களுக்கென உருவாக்கப்பட்ட குறைந்த செலவிலான சேவைகளை அவர்களுக்கு அறிமுகஞ் செய்வதன் மூலம் வீடமைப்பு கடனை அவர்கள் பெற்றுக் கொள்ள உதவி வழங்கப்படும். எதிரகால அபிவிருத்தி சம்பந்தமான அறிக்கை 11 இலிருந்து 13 ஆம் பக்கம் வரையிலான பொது முகாமையாளர் பிரதம நிறைவேற்று அதிகாரியின் மீளாய்விலும் 16 இலிருந்து17ஆம் பக்கம் வரையிலான முகாமைத்துவ கலந்துரையாடல், பகுப்பாய்வு அறிக்கையிலும் இடம்பெற்றுள்ளன.

## 6. நிதி கூற்றுக்கள்

குழுமத்தினதும், வங்கியினதும் நிதி கூற்றுக்கள் பிரதம நிதித்துறை அதிகாரியினாலும், பொது முகாமையாளர்பிரதம நிறைவேற்று அதிகாரியினாலும் கைச்சாத்திடப்பட்டு, சான்றுரைக்கப்பட்டு, தலைவரினாலும், வங்கியின் ஒரு பணிப்பாளரினாலும் அங்கீகரிக்கப்பட்டுள்ளன. இந்த ஆண்டறிக்கையின் 140 இலிருந்து 144 ஆம் பக்கம் வரையில் இவை தரப்பட்டுள்ளன.

## 7. முக்கியமான கணக்கியல் கொள்கைகள்

நிதி அறிக்கைகளைத் தயாரிப்பதில் ஏற்றுக் கொள்ளப்பட்ட முக்கியமான கணக்கியல் கொள்கைகளும், ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் இலங்கை கணக்கியல் தரங்களில் ஏற்பட்ட மாற்றங்களின் தாக்கங்களும் ஆண்டறிக்கையின் 145 இலிருந்து 146 வரையிலான பக்கங்களில் தரப்பட்டுள்ளன. ஒப்புறவு மாற்றத்தாக்கம் ஆண்டறிக்கையின் 44ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

## 8. கணக்காய்வாளர் அறிக்கை

இலங்கையின் கணக்காய்வாளர் அதிபதி, HDFC வங்கியின் கணக்காய்வாளர் ஆவார். தொடர்புடைய நிதியியல் ஆண்டிற்கான HDFC வங்கியின் திரட்டிய நிதியறிக்கை மீது கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. இது சம்பந்தமான கணக்காய்வாளர் அறிக்கை 138 ஆம் 139 ஆம் பக்கங்களில் இடம்பெற்றுள்ளன.

## 9. தொடர்ந்து செயலாற்றும் நிறுவனம்

HDFC வங்கி எதிர்காலத்திலும் அதன் நடவடிக்கைகளைத் தொடர்ந்து மேற்கொள்வதற்கான போதியளவு வளங்களைக் கொண்டுள்ளது என்பதில் பணிப்பாளர் சபை திருப்தியடைந்துள்ளது. இதற்கமைய தொடர்ந்து நடவடிக்கை மேற்கொள்ளும் நிறுவனம் என்ற நிலைப்பாட்டின் அடிப்படையில் நிதி அறிக்கைகள் தயாரிக்கப்பட்டுள்ளன.

## 10. வருமானம்

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வங்கியின் வருமானம் ரூபா 2691 மில்லியன் ரூபாவாகும். இந்த வருமானத்தின் பகுப்பாய்வு நிதி அறிக்கைகளின் 1ஆம் 2ஆம் குறிப்புகளில் தரப்பட்டுள்ளன.

## 11. இலாபமும் ஒதுக்கீடுகளும்

2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்கு முந்திய இலாபம் ரூபா 73 மில்லியன் ரூபாவாகவும், 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான வரிக்குப் பிந்திய இலாபம் ரூபா 2.5 மில்லியன் ரூபாவாகவும் இருந்தது. HDFC வங்கியினதும், குழுமத்தினதும் இலாபம் சம்பந்தமான விபரங்கள் கீழேயுள்ள அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

HDFC ***வங்கியின் இலாப விபரங்கள் கீழே அட்டவணையில் தரப்பட்டுள்ளது.***

| 2012 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டு | 2012 ரூபா மில்லியன் | 2011 ரூபா மில்லியன் |
|---|---|---|
| பெ.சே.வ.முன்னர் சாதாரண செயற்பாடுகள் மீதான தொழிற்பாட்டு இலாபம் | 123 | 402 |
| நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வ. | 50 | 81.00 |
| வரிவிதிப்புக்கான ஏற்பாடு | 70 | 104.64 |
| வரிக்குப் பிந்திய சாதாரண செயற்பாடுகள் மீதான இலாபம் | 2.5 | 216 |
| பிடித்து வைக்கப்பட்ட இலாபம் (ஒன்றுதிரட்டிய நட்டம்) மு.கொ.வ. | 1,170 | 1,086 |
| ஒதுக்கீட்டுக்காக கிடைக்கப்பெறும் இலாபம் | 1,172 | 1,302 |
| உத்தேசிக்கப்பட்ட ஒதுக்கீட்டு முதல் மற்றும் இறுதி பங்கிலாபம் | - | 32 |
| ஒதுக்கு நிதியத்திற்கான மாற்றம் | 34 | 100 |
| பிடித்து வைக்கப்பட்ட இலாபம் மு.கொ.செ. | 1,138 | 1,170 |

## 12. ஒதுக்குகள்

2012 டிசம்பர் 31 இல் வங்கியின் மொத்த ஒதுக்குகள் தொகை ரூபா 2,391 மில்லியன் . விபரங்கள் நிதி அறிக்கையின் 144 ஆவது பக்கத்தில் ஒப்புரவு மாற்றத்தில் தரப்பட்டுள்ளன.

## 13. அன்பளிப்புக்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் ரூபா 1,225,822 பெறுமதியான அன்பளிப்புக்களை வழங்கியுள்ளது.

## 14. நியதிக் கொடுப்பனவுகள்

அரசாங்கத்திற்கும் ஏனைய ஒழுக்காற்று நிறுவனங்கள் மற்றும் ஊழியர்களுக்கான இறுதி நாள் வரையிலான நியதிக் கொடுப்பனவுகள் அனைத்தும் வழங்கப்பட்டு விட்டன என்பதையிட்டு தங்களது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் உட்பட்ட வகையில் பணிப்பாளர் சபையினர் திருப்தி தெரிவிக்கின்றனர்.

## 15. வரிக்கான ஏற்பாடுகள்

வங்கியின் நடவடிக்கைகள் மூலம் பெறப்பட்ட வருமானத்தில் 28% வருமான வரியாக காண்பிக்கப்பட்டுள்ளது. ஆண்டறிக்கையின் 151 தொடக்கம் 152 ஆவது பக்கத்திலுள்ள நிதி அறிக்கைகளிற்கான 09 ஆவது குறிப்பில் இது இடம்பெற்றுள்ளது.

## 16. பங்கிலாபங்கள்

ரூபா 2.5 பில்லியன் கட்டாய மூலதன தேவைப்பாட்டினை நிறைவு செய்வதற்கு வங்கி கருத்திற் கொள்கையில் சபையானது 2013 ஆம் ஆண்டுக்கான (இறுதி) பங்கிலாபம் எதனையும் பரிந்துரைக்கவில்லை.

## 17. ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உகரணங்கள் சுதந்திர சொத்துக்கள்

ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உகரணங்கள் மீதான மூலதனச் செலவினம் ரூபா 94 மில்லியன். இதன் விபரம் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளது.

சுதந்திரச் சொத்துக்களின் விபரங்கள் 154ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 16 இல் தரப்பட்டுள்ளது.

## 18. சுதந்திரச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி

சுதந்திரச் சொத்துக்களின் சந்தைப் பெறுமதி பற்றிய விபரம் 155ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுக்களின் குறிப்பு 17 இல் தரப்பட்டுள்ளது

## 19. ஐந்தொகைத் திகதிக்குப் பின்னரான நிகழ்வுகள்

நிதியியல் கூற்றுக்களில் சரிப்படுத்தல்கள் அல்லது வெளிப்படுத்தல்களை வேண்டத்தக்க ஐந்தொகைத்திகதிக்கு பின்னர் நிகழ்ந்த முக்கிய நிகழ்வுகள் எதுவும் இருக்கவில்லை.

## 20. பிரகடனம் செய்யப்பட்ட மூலதனம்

2012 டிசம்பர் 31 அன்று உள்ளவாறு வங்கியின் பிரகடனப்படுத்தப்பட்ட மூலதனம் ரூபா 962 மில்லியன். இது 157ஆம் பக்கத்தில் நிதிக் கூற்றுக்களின் குறிப்பு 24 இல் தரப்பட்டுள்ளவாறு 64,710,520 சாதாரன பங்குகளை உள்ளடக்குகின்றது.

## 21. பங்குகள் பற்றிய தகவல்கள்

பங்குகளுடன் தொடர்புடைய தகவல்கள் (பங்கொன்றுக்கான உழைப்பு, தேறிய சொத்து மற்றும் சந்தைப் பெறுமதி) இவ்வாண்டறிக்கையின் 161 தொடக்கம் 164 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது. அனைத்து பங்குதாரர்களும் அவர்களுக்கு அடிப்படையில் வழங்கப்பட்ட நியமங்களுக்கமைவாக சமமாக கருதப்பட்டுள்ளனர்.

## 22. பங்குகள் கடன் பத்திரங்கள் வழங்கள்

ஆய்வுக்குட்பட்ட ஆண்டின்போது பங்குகளோ கடன் பத்திரங்களோ வழங்கப்படவில்லை

## 23. சகல பங்குதாரர்களையும் சமமாக கருதுதல்

எமது அனைத்து பங்குதாரர்களையும் சமமாக கருதுவதை உறுதிப்படுத்துவதற்கு HDFC வங்கி அனைத்து முயற்சிகளையும் எடுத்து வருவதன் முன்னேற்றத்தை நோக்கி சகல பங்குதாரர்களினதும் பங்களிப்பினை பாராட்டும் அதேவேளை 2012 இல் பங்குதாரர் ஈடுபாடு இவ்வறிக்கையின் 47 தொடக்கம் 82ஆம் பக்கங்களில் விபரிக்கப்பட்டுள்ளனர்.

### 24. பணிப்பாளர்கள் சபை

HDFC வங்கியின் பணிப்பாளர் சபை நன்கு தகைமை பெற்ற அனுபவம் வாய்ந்த தொழில்சார் அலுவலர்களை கொண்டுள்ளது. அவர்கள் வங்கிக்கு தலைமை தாங்குவதற்கு இயைபுடைய திறன்கள் மற்றும் அனுபவத்தை கொண்டுள்ளனர். மீளாய்வு ஆண்டின் போதான வங்கியின் பணிப்பாளர் பின்வருமாறு

1. திருமதி S.N. விக்ரமசிங்க (தவிசாளர்) 2010 மே இல் நியமிக்கப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன
2. திரு.டப்.ஜே.எல்.யூ. விஜேவீர, 2010 ஜுன் இல் நியமிக்கப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன
3. திருமதி.சி.விஜயவர்த்தன, 2010 ஜுன் இல் நியமிக்கப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன
4. திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர,2010 ஜுன் இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீனமற்ற
5. திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன, 2010 ஜுன் இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீனமற்ற
6. திரு.ஏ.ஜே.அலோசியஸ்,2011 மே இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீனமற்ற
7. திரு.எல்.ஈ.சுசந்த சில்வா 2011 மே இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன
8. திருமதி.கே.டப்.பி.தயாரத்ன,2010 ஜுன் இல் நியமிக்கப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன
9. திரு.டப்.டி.கே.ஜயவர்த்தன, 2011 மே இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீனமற்ற
10. திரு.ஏ.எம்.சந்திர சாகர, 2010 ஜுன் இல் தெரிவு செய்யப்பட்டார் - நிறைவேற்றல்லாத / சுயாதீன

### மீளாய்வு ஆண்டின் போது HDFC வங்கிச் சபையிலிருந்து பதவி துறந்தோர்

1. திருமதி.கே.டப்.பி.தயாரத்ன 2012 ஒக்டோபர் தொடக்கம்
2. திரு.ஏ.எம்.சந்திர சாகர 2012 ஏப்ரல் தொடக்கம்
3. திரு.டப்.டி.கே.ஜயவர்த்தன 2012 ஜுலை தொடக்கம்

### சபைக்கான நியமனங்கள்

1. திரு.எல்.ஈ.சுசந்த சில்வா 2012.05.31 தொடக்கம்
2. திரு.ஜீ.எல்.எஸ்.சேனாதீர 2013.01.08 தொடக்கம்

### பணிப்பாளர்களின் தகைமைகளும் அனுபவங்களும்

தற்போதைய சபைப் பணிப்பாளர்களின் தகைமைகளும் அனுபவங்களும் இவ்வறிக்கையில் 22 தொடக்கம் 23 ஆம் பக்கங்களில் பணிப்பாளர்கள் பற்றிய முகப்புக் குறிப்புக்களில் தரப்பட்டுள்ளன.

### 25. சபை உப குழுக்கள்

HDFC வங்கியின் மொத்தப் பொறுப்பு, கணக்கியல் தன்மை, நிர்வாகம் மற்றும் முகாமைத்துவம் என்பவற்றை சபை நிச்சயித்துள்ள அதே சமயத்தில் கணக்காய்வுக் குழு, மனிதவள மற்றும் சம்பளக் குழு, நியமனக் குழு, ஒருங்கிணைந்த அனர்த்த முகாமைத்துவக் குழு போன்ற சம்பந்தப்பட்ட உப குழுக்களை நியமிக்கவும் சபை நடவடிக்கைகளை மேற்கொண்டுள்ளது. இத்தகைய சபை உப குழுக்களின் அறிக்கைகள் ஆண்டறிக்கையின் 131 தொடக்கம் 136 ஆம் பக்கத்தில் இடம்பெற்றுள்ளன.

### 26. பணிப்பாளர் கூட்டங்கள்

ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் பணிப்பாளர் சபை 16 கூட்டங்களைநடாத்தியுள்ளது. இந்தக் கூட்டங்களில் பணிப்பாளர்களின் சமூகம் பற்றிய விபரங்கள் 120 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளன. இதற்கு மேலதிகமாக உப குழுக்களின் கூட்டங்கள் பற்றிய விபரங்கள் இவ்வறிக்கையில் 121 தொடக்கம் 123 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளன.

### 27. நிதியியல் அறிக்கை சம்பந்தமாக பணிப்பாளர்களின் பொறுப்பு

HDFC வங்கியின் கடமைக் கருமங்களை உண்மையாகவும் மற்றும் நியாயமான நோக்கொன்றில் பிரதிபலிக்கும் விதத்தில் வங்கியின் நிதியியல் கூற்றுக்களை தயாரித்தலுக்கான பொறுப்பு பணிப்பாளர்களைச் சார்ந்ததாகும். நிதியியல் அறிக்கையிடுதலுக்கான பணிப்பாளர் பொறுப்புடைமைக் கூற்று 137 ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது. இது பணிப்பாளர் சபையின் ஆண்டறிக்கையின் மிக முக்கிய பகுதியொன்றினை தோற்றுவிக்கின்றது.

### 28. பேரேட்டிலுள்ள பதிவுகள்

HDFC வங்கியின் வட்டி பேரேடு கம்பனிச் சட்டத்திற்கிணங்க பேணப்படுகின்றது. தொடர்புடைய பணிப்பாளர்கள் வேண்டப்பட்டவாறு பிரகடனங்களை மேற்கொண்டுள்ளதுடன் தொடர்புடைய பதிவுகள் மீளாய்வுக் காலத்தின்போது வட்டி பேரேட்டில் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

### 29. பங்குரிமையில் பணிப்பாளர்கள் ஆர்வம்

பணிப்பாளர்களின் பங்குரிமைகள் பின்வருமாறு:

| | 31/12/2012 | 01/01/2012 |
|---|---|---|
| திருமதி.எஸ்.என்.விக்ரமசிங்க (தவிசாளர்) | இல்லை | Nil |
| திரு.டப்.ஜே.எல்.யூ.விஜேவீர | 3000 | 300 |
| திருமதி.சி.விஜேவர்த்தன | இல்லை | இல்லை |
| திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர | இல்லை | இல்லை |
| திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன | இல்லை | இல்லை |
| திரு.ஏ.ஜே.அலோசியஸ் | இல்லை | இல்லை |
| திரு.எல்.ஈ.சுசந்த சில்வா | 1000 | இல்லை |
| திரு.ஜீ.எல.எஸ்.சேனாதீர | இல்லை | இல்லை |

### 30. ஒப்பந்தங்கள் மற்றும் உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர் நலன்கள்

2012.12.31 இல் முடிவுற்ற ஆண்டின்போது HDFC வங்கியின் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்கள் அல்லது உத்தேசிக்கப்பட்ட ஒப்பந்தங்களில் பணிப்பாளர்கள் நேரடியான அல்லது நேரடியற்ற நலன்களை கொண்டிருக்கவில்லை. மேலதிக தகவல்கள் இவ்வாண்டறிக்கையில் 159ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

அவர்கள் நலன் கொண்ட விடயங்கள் மீது வாக்களிப்பதிலிருந்து தவிர்ந்து கொள்வதிலிருந்து உறுதி செய்வதற்கு பணிப்பாளர்கள் அவர்களது நலன்களை (ஏதுமிருப்பின்) வெளிப்படுத்தினர்.

### 31. கடன் பத்திரங்களில் பணிப்பாளர் நலன்கள்

ஆண்டின் ஆரம்பத்திலுள்ளவாறு அல்லது முடிவிலுள்ளவாறு எவரேனும் பணிப்பாளரின் பெயரில் கடன் பத்திரங்கள் பதிவு செய்யப்பட்டிருக்கவில்லை.

### 32. தொடர்புடைய திறத்தவர் கொடுக்கல் வாங்கல்

தொடர்புடைய திறத்த கட்சியினரின் கொடுக்கல் வாங்கல்கள் இவ்வறிக்கையின் 159 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்று குறிப்பு 29 இல் தரப்பட்டுள்ளது.

### 33. பணிப்பாளர்களின் ஊதியம்

2012.12.31வுடன் முடிவுற்ற நிதியியல் ஆண்டுக்கான பணிப்பாளர்களின் ஊதியம் 151 ஆம் பக்கத்தில் நிதியியல் கூற்றுக்கான குறிப்பு 7 இல் தரப்பட்டுள்ளது.

### 34. ஊழியர் பங்கு தெரிவுத் திட்டம்

ஊழியர் பங்கு உரிமைத்துவத்திட்டத்தின் கீழ் நம்பிக்கை சபைக்கு ஏற்கனவே வினியோகிக்ககப்பட்ட பங்குகளின் மொத்த எண்ணிக்கை 3,485,520 ஆவதுடன் மிக விரைவில் இது பயன்பெறுனருக்கு மாற்றப்படும். மேற்குறிப்பிடப்பட்ட பங்கு நிதியம் ஆரம்ப பங்கு வினியோகத்தின் போது 5% வாக்கு சாதாரண பங்குகளைப் பெற்று வங்கியினால் தாபிக்கப்பட்டது.

### 35. சுற்றாடல் பாதுகாப்பு

வங்கி ஏதுேனும் மோசமான சுற்றடால் பாதிப்புக்களை ஏற்படுத்துகின்ற செயற்பாடுகளில் ஈடுபட்டிருக்கவில்லையென்றும் தொடர்புடைய சுற்றாடல் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகி உள்ளது என்றும் பணிப்பாளர்கள் தமது அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் திருப்தியடைகின்றனர்.

### 36. இடர் முகாமைத்துவமும் உள்ளக கட்டுப்பாட்டு முறைமையும்.

கிரமமான அடிப்படையொன்றில் வங்கியின் உள்ளக செயல்முறைப்படுத்தலை கணக்காய்வு குழுச் சபை மீளாய்கின்ற அதேவேளை ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு HDFC வங்கியிற்கு தூண்டுகின்ற இடரினை அடையாளங் கண்டு மதிப்பீடு செய்து முகாமை செய்கின்றது. இரண்டு குழுக்களும் வங்கி அதன் சீரான தொழிற்பாட்டுக்காக அனைத்தும் அடங்கிய உள்ளக கட்டுப்பாட்டு மற்றும் இடர் கட்டுப்பாட்டு சட்டகத்தினை கொண்டுள்ளது என்பதனை உறுதி செய்வதற்கு சபைக்கு அவசியமான பரிந்துரைகளை நேரடியாக அனுப்புகின்றன.

மேலதிகத் தகவல்கள் கணக்காய்வு சபைக்குழு அறிக்கையில் 131, 132 ஆம் பக்கங்களிலும் ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ அறிக்கை 136 ஆம் பக்கத்திலும் தரப்பட்டுள்ளன.

### 37. கூட்டு ஆளுகை

இவ்வறிக்கையில் 92 தொடக்கம் 123 ஆம் பக்கங்களில் காணப்படும் கூட்டு ஆளுகை இணக்கக் கூற்றை பார்க்கவும்.

### 38. ஏற்புடைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கு விதிகளுடன் இணங்கியொழுகுதல்

பணிப்பாளர்களின் அறிவுக்கு எட்டிய வகையில் வங்கி வெளிப்படுத்துவதற்கு கட்டுப்பட்டுள்ள அல்லது முக்கிய நிதியியல் தாக்கமொன்றாக இருக்கக் கூடிய முகாமைத்துவ ஊழியர்கள் ஈடுபடும் ஏதேனும் ஒழுங்கீனங்களாக இருக்கின்ற ஏதேனும் நியாயாதிக்கத்திலிருக்கின்ற சட்டங்கள் அல்லது ஒழுங்கு விதிகளை நேரடியாகவோ அல்லது நேரடியற்று மீறியிருக்கவில்லை.

### 39. கணக்காய்வாளர்கள் நியமனம்

1997 இன் 7 ஆம் இலக்க HDFC வங்கி சட்டத்தின் (2003 இன் 15 மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க சட்டங்கள் மூலம் திருத்தப்பட்டது) எடுத்துக்காட்டப்பட்டவாறு வங்கியின் கணக்காய்வாளராக, கணக்காய்வாளர் நாயகம் இருந்து வருகின்றார்.

### 40. கணக்காய்வாளர்கள் ஊதியமும் வங்கியுடனான ஒப்பந்தத்தின் நலமும்

2012.12.31 இல் முடிவடைந்த ஆண்டுக்கான கணக்காய்வு கட்டணமாக வங்கியினால் ரூபா 460,000 கணக்காய்வாளர்களுக்கு கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. கணக்காய்வாளர்கள் வங்கியுடனான ஒப்பந்தத்தில் ஏதேனும் உறவினையோ, நலன்களையோ கொண்டிருக்கவில்லை.

### 41. கணக்காய்வுக் குழு

கணக்காய்வு குழுவின் உள்ளடக்கமும் அவர்களின் அறிக்கையும் இவ் ஆண்டறிக்கையின் 131 மற்றும் 132ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ளது.

### 42. கூட்டங்களுக்கான அறிவித்தல்

வங்கியின் 28 ஆவது வருடாந்த பொதுக் கூட்டம் கொழும்பு 10, ஹெட்ஜெஸ் கோட், இல-10, புக்கர் ரிக்ரேஷன் பிரைவேட் லிமிட்டட் (கார்டினியா ஹோல்) இல் 2013 ஜுன் 28 அன்று மு.ப.10.00 மணிக்கு இடம்பெறும். கூட்டத்திற்கான அறிவித்தல் இவ்வாண்டறிக்கையின் 138ஆம் பக்கத்தில் தரப்பட்டுள்ளது.

பணிப்பாளர் சபையின் தீர்மானத்திற்கமைய கையொப்பமிடப்பட்டது.

**திருமதி. எஸ். என். விக்ரமசிங்க**
*(தவிசாளர்)*

**திருமதி. தர்சனி டி. சில்வா**
*(கம்பனிச் செயலாளர்)*

# சபை உப குழுக்களின் அறிக்கை

## சபை கணக்காய்வு குழு அறிக்கை

***கணக்காய்வு குழு உள்ளடக்கம்***

வங்கியின் கணக்காய்வு குழு 2007 இன் 11 ஆம் இலக்க சிறந்த ஆளுகை மற்றும் வங்கி முறைமைக்கான சட்டப் பணிப்பின் போது தொழில் வழிகாட்டல் முயற்சி ஏற்பாடுகளுக்கேற்ப தாபிக்கப்பட்டதாகும். பின்வரும் நிறைவேற்றல்லாத சுயாதீனமான பணிப்பாளர்கள் 2012 இன் போது சபையில் சேவையாற்றினர்.

1. திரு.எல்.ஈ.சுசந்த சில்வா - தவிசாளர்
2. திருமதி சாந்தனி விஜயவர்த்தன
3. திரு.டப்.டி.ஆர்.டி. குணரத்ன

மீளாய்வு ஆண்டின்போது திரு.ஏ.எம். சந்திர சாகர மற்றும் திரு. டப்.டி.கே. ஜயவர்த்தன என்போர்கள் பதவி துறப்பதற்கு முன்னர் கணக்காய்வுக் குழுத் தவிசாளர்களாகச் சேவையாற்றினர். கணக்காய்வுக் குழுவின் தவிசாளர்களாகக் குழுவினால் வழங்கப்பட்ட சேவைக்கு எனது பாராட்டுக்களைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

## கூட்டங்கள்

2012 டிசம்பர் 31வுடன் முடிவுற்ற நிதியாண்டின்போது 8 குழுக் கூட்டங்கள் நடைபெற்றன. பிரதம உள்ளக கணக்காய்வாளர் குழுவின் செயலாளராக தொழிற்பட்டார். சிரேஷ்ட முகாமைத்துவ உறுப்பினர்களும் அழைக்கப்பட்டிருந்த கிளை முகாமையாளர்களும் குழுக் கூட்டத்தில் பிரசன்னமாகியிருந்தனர். அரசாங்க கணக்காய்வின் கண்காணிப்பாளர் அவதானிப்பாளர் ஒருவராக கூட்டத்தில் கிரமமாக கலந்து கொண்டார்.

## குழுவின் வகிபாகம்

கணக்காய்வு குழுவின் பிரதான குறிக்கோள் பணிப்பாளர்கள் சபைக்கு அது கவனிக்காது விடப்பட்ட பொறுப்புக்களை நிறைவேற்றுவதில் உதவுவதாகும்.

## அதாவது

- நிதியியல் கூற்றுக்களின் ஒருமைப்பாட்டினை கண்கானித்தலும் இலங்கை கணக்கீட்டு நியமங்களுடன் அவை இயைபானது என்ற முக்கிய தீர்மானங்களை மீளாய்தல்
- வங்கியின் இடர் முகாமைத்துவ தொழிற்பாட்டின் செயல் திறனை மீளாய்தல்
- வங்கியின் உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டின் செயலாற்றுகையினை மீளாய்தல்
- இலாபத் தன்மை, வினைத்திறன் மற்றும் உற்பத்தித்திறன் நியதிகளில் வங்கியின் ஒட்டுமொத்த செயலாற்றுகையினை சுயாதீனமாக மதிப்பிடுதல்.

## ஆண்டின்போதான செயற்பாடுகள்

***நிதியியல் கூற்றுக்கள்***

பங்குதாரர்களுக்கு வழங்கப்பட்ட தகவல்கள் நம்பத்தகுந்தது மற்றும் இலங்கை கணக்கீட்டு நியமங்களின் தேவைப்பாடுகளுக்கும் வெளிப்படுத்தல் தேவைப்பாடுகளுக்கும் இணங்குகின்றது என்பதை உறுதி செய்வதற்கான செயற்பாட்டிலுள்ள நிதியியல் அறிக்கையிடல் முறைமையின் செயல்திறனை மீளாய்வு செய்தல். வங்கியின் காலாண்டு மற்றும் வருடாந்த நிதியியல் கூற்றுகள் சபை அங்கீகாரத்திற்கு முன்னர் மீளாயப்பட்டன. குழுவானது கணக்கீட்டு நடைமுறைகள், உள்ளக கணக்காய்வு, உள்ளக நிதியியல் கட்டுப்பாடுகள், வருடாந்த நிதியியல் கூற்றுக்களின் உள்ளடக்கங்கள் மற்றும் தொடர்புடைய கருமங்களை கருத்திற் கொள்கின்ற முக்கிய அறிக்கைகள் அல்லது முறைப்பாடுகள் கிடைக்கப் பெற்றிருக்கவில்லை என்பதனை உறுதிப்படுத்தியது.

## ஒழுங்குபடுத்தல் இணக்கம்

குழு கம்பனிச் சட்டம், வங்கிச் சட்டம், கொழும்பு பங்குச் சந்தை அட்டவணைப்படுத்தல் தேவைப்பாடுகள் அத்துடன் அனைத்து ஏனைய ஏற்புடைய சட்டங்களுடன் வங்கி இணங்கியொழுகுகின்றது என்பதனை உறுதிப்படுத்துவதற்காக உள்ளக மற்றும் வெளிவாரி கணக்காய்வாளர்களிடமிருந்தான வங்கி கொள்கைகள், நடவடிக்கை முறைகள், அறிக்ககைள் என்பவற்றை மீளாய்வு செய்தது.

## இடர் முகாமைத்துவமும் தகவல் தொழில்நுட்பமும்

குழுவானது நிதியியல் அறிக்கையிடுதல் மற்றும் தொடர்ந்து செயலாற்றுதல் மதிப்பிடுதலுடன் தொடர்புடைய மோசடி இடர்கள் மற்றும் தகவல் தொழில்நுட்ப இடர்கள் அடங்கலாக இடர் முகாமைத்துவத்தின் மீதான அறிக்கைகளை கருத்திற் கொண்டு மீளாய்ந்தது.

## வெளிவாரி கணக்காய்வு

நியதிச் சட்டத்தின் படி கணக்காய்வாளர் நாயகம் வங்கியின் வெளி கணக்காய்வாளர் ஆவார். கணக்காய்வு நோக்கத்திற்காகவும் பின்வருவனவற்றுக்காகவும் வெளி கணக்காய்வாளரினால் வேண்டப்பட்ட சகல தகவல்கள் மற்றும் ஆவணங்களை வழங்குவதினை உறுதிப்படுத்தியது.

- போதிய கணக்கீட்டு பதிவுகள் பேணப்படுகின்றன என்றும் நிதியியல் கூற்றுகள் வங்கியின் கடமைக் கருமங்களின் உண்மையான நியாயமான நோக்கொன்றினை பிரதிநிதித்துவப்படுத்துகின்றது என்றும் வெளி கணக்காய்வாளர்களிடமிருந்து உத்தரவாதத்தினை பெற்றுக் கொள்ளல்

- இலங்கை மத்திய வங்கியினால் வெளியிடப்பட்ட கூட்டு ஆளுகைப் பணிப்புரைகளுடனான இணக்கத்தின் மீது உத்தரவாதத்தினை பெற்றுக் கொள்ளல்.

- நிதியியல் அறிக்கையிடல் முறைமையுடன் தொடர்புடைய உள்ளக கட்டுப்பாட்டு பொறிமுறையின் செயல்திறன் மற்றும்தொடர்புடைய கணக்கீட்டு கோட்பாடுகள் அத்துடன் ஒழுங்குபடுத்தல் தேவைகளுக்கமைவாக வெளிவாரி நோக்கங்களுக்கான நிதியியல் கூற்று தயாரிப்பு மேற்கொள்ளப்பட்டுள்ளது என்பதன் மீதான உத்தரவாதத்தினை பெற்றுக் கொள்ளல்.

**உள்ளக கணக்காய்வுகள்**

மீளாய்வு ஆண்டின்போது கணக்காய்வு செய்யத்தக்க பகுதிகளின் இடர் மதிப்பீட்டுக்காக வருடாந்த உள்ளக கணக்காய்வு திட்டமிடல் முறையியல் அடிப்படையில் இடரினை மீளாய்வு செய்து அனுமதித்ததுடன் முகாமைத்துவ பதில்களுடன் உள்ளக கணக்காய்வு பிரிவினால் சமர்ப்பிக்கப்பட்ட கணக்காய்வு அறிக்கைகளை மீளாய்வு செய்தல். குழுவானது உள்ளக கணக்காய்வு தொழிற்பாட்டினையும் உள்ளக கணக்காய்வு பிரிவின் செயலாற்றுகையினையும் கிரமமாக மீளாய்வு செய்து கண்கானித்தது.

இவை அனைத்தையும் கருத்திற் கொண்டு குழு இவ்வறிக்கையின் திகதியன்று உள்ளக கணக்காய்வு கட்டுப்பாடுகள், வங்கிற்கான ஏதேனும் முக்கிய இழப்புகளின் தாக்கங்கள் அடங்கலாக உள்ளக கட்டுப்பாடுகளில் முக்கிய சீர்குலைவுகள் இருக்கவில்லையென்று அபிப்பிராயப்படுகின்றது.

**அறிக்கையிடல்**

குழு கூட்டறிக்கைகள் ஊடாக அதன் செயற்பாடுகளை பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிட்டது.
குழுவின் தொடர்பு நியதிகள் அனைத்து முக்கிய அம்சங்களுடனும் இணங்கியொழுகின என்று அபிப்பிராயப்படுகின்றது.

கணக்காய்வு குழுச் சபை சார்பாக



**எல். ஈ. சுசந்த சில்வா**
*தவிசாளர் கணக்காய்வு குழுச்சபை*
23.01.2013

**மனிதவள மற்றும் ஊதியக்குழு சபை அறிக்கை**

HDFC வங்கி நிறுவனத்தின் மிக முக்கிய உபாயச் சொத்து மனித வளங்களாகும் என நம்புவதுடன் மனிதவள மற்றும் ஊதியக்குழுச் சபை சிறந்த மனிதவள நடைமுறைகளை அமுல்படுத்துவதனூடாக நிறுவனத்தின் வெற்றியினை உறுதிப்படுத்துவதில் இன்றியமையாத பங்கொன்றினை வகிக்கின்றது. HDFC வங்கியின் நிறுவனசார் கொள்கைகள், ஊழியர் நலன்கள், ஊழியர் உறவு கட்டுப்பாட்டுப் பொறிமுறை, பெறுமதி மிக்க ஊழியர்களை பதவியில் வைத்துக் கொள்வதற்கு உதவுகின்றது.

திருமதி.எஸ்.என்.விக்ரமசிங்க (குழுத்தவிசாளர், நிறைவேற்றல்லாத சுயாதீன் பணிப்பாளர்), திரு.டப்.ஜே.எல்.யூ.விஜேவீர (நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்),திருமதி. கே.ஏ.டப்.ஈ.தயாரத்ன (நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்) மற்றும் திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன (நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்) ஆகியோர் மீளாய்வு ஆண்டின்போதான குழு உறுப்பினர்களாக இருந்தனர்.

திருமதி.கே.டப்.பி.தயாரத்ன 2012.10.31 இல் பதவி துறந்ததைத் தொடர்ந்து திரு.ஜீ.எல.எஸ்.சேனாதீர 2013 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்.

குழு நேரடியாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடுவதுடன் குழுவுக்கான நியமனங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வு ஆண்டின்போது குழு 3 கூட்டங்களை நடாத்தியது. பின்வரும் முக்கிய குறிக்கோள்களை நிறைவு செய்யும் ரீதியில் இக்குழு எப்போதும் செயலாற்றுகின்றது.

(அ) வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய முகாமைத்துவ ஆளணியினருடன் தொடர்புடைய நிதியக் கொள்கையொன்றின் அமுலாக்கம்

(ஆ) வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய முகாமைத்துவ ஆளணியினருக்காக இலக்குகள் மற்றும் அடைவுகளை உருவாக்குதல்

(இ) குறிக்கப்பட்ட இலக்குகள் மற்றும் அடைவுகள் மீது செயலாற்றுகையினை பருவகால ரீதியாக வங்கியின் பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் ஏனைய முகாமைத்துவ ஆளணியினருக்காக மதிப்பிடுதல். மற்றும் ஊதிய நலன்கள் ஏனைய செயலாற்றுகைக் கொடுப்பனவு ஊக்குவிப்புக்கள் அடிப்படையில் ஊதியங்களை மீளாய்தல்.

(ஈ) சம்பள மீளாய்வு, முற்கோரிக்கைகள், ஆட்சேர்த்தல், பதவியணி நிர்ணயம்/ பதவியுயர்வுகள்/ பதவி மாற்றம்/ புதிய பதவிகள் அல்லது தரங்களை உருவாக்குதல்/ பணிக்கமர்த்தல்/ பதவியணி மற்றும் பதவியணி வரவு செலவு, பயிற்சி, வங்கியின் பதவியினர் வெளிநாட்டு கருத்தரங்குகளில் கலந்து கொள்ளுதல் என்பவை தொடர்பில் சபைக்கு அவசியமான பரிந்துரைகளை மேற்கொள்ளுதல்.

பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர் அவரின் பதவியுடன் இணைந்த கருமங்கள் தொடர்பில் தவிர அழைப்பிதழ் மூலம் கூட்டங்களில் கலந்து கொண்டார். கூட்டு முகாமைத்துவ அணி உறுப்பினர்கள் குழுவினால் தேவைப்பட்டவாறும் தேவைப்பட்ட போதும் சபைக் கூட்டங்களில் பங்கேற்பதற்கு அழைக்கப்பட்டிருந்தனர்.



**திருமதி. எஸ். என்.விக்கிரமசிங்க**
*தவிசாளர்*



**திருமதி. தர்ஷனி டி சில்வா**
*கம்பனிச் செயலாளர்*

## பெயர் குறித்தல் குழு

பெயர் குறித்தல் குழுபணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ நியமனங்களை மேற்கொள்வதற்கு அல்லது புதுப்பிப்பதற்கான வெளிப்படைத் தன்மையான செயன்முறையொன்றை பின்பற்றுவதனூடாக சபை அதற்கு முறையான சமநிலையொன்றை பேணுவதற்கு சபைக்குதவுகின்றது. இக்குழு திருமதி.எஸ்.என்.விக்கிரமசிங்க (குழுத் தவிசாளர், நிறைவேற்றல்லாத சபை பணிப்பாளர்), திரு. டப்.ஜே.எல்.யூ.விஜேவீர (நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்) மற்றும் திருமதி.கே.டப்.பி.தயாரத்ன(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்) ஆகியோரைக் கொண்டுள்ளன.

திருமதி.கே.டப்.பி.தயாரத்ன 2012.10.31 இல் பதவி துறந்ததன் பின்னர் திருமதி.சி.விஜேவர்த்தன 2013 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்.

குழு நேரடியாக பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவதுடன் குழு நியமனங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது. இக்குழு மீளாய்வு ஆண்டின்போது 3 கூட்டங்களை நடாத்தியது.
குழு வங்கியின் பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றும் விதத்தில் எப்போதும் செயலாற்றுகின்றது.

(அ) HDFC வங்கி சட்டத்திற்கமைய புதிய பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியிரின் தெரிவும் நியமனமும்

(ஆ) ஒட்டுமொத்த சபைப் பொறுப்புக்களை நோக்கி பணிப்பாளர்களின் பங்களிப்பை கருத்திற் கொண்டு பணிப்பாளர்களின் மீள்தெரிவுக்கு அவசியமான பரிந்துரைகளை மேற்கொள்ளல்.

(இ) பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ பதவிகளுக்கான நியமனம் அல்லது பதவியுயர்வுக்கு கருத்திற் கொள்ள வேண்டிய தகுதிக்கான தகைமைகள், அனுபவம் மற்றும் முக்கிய சாட்டுதல்கள் போன்ற தகுதிறன்களை வரையறை செய்தல்.

(ஈ) மத்திய வங்கி பணிப்புரைகளில் வழங்கப்பட்ட தகுதிறன்கள் மற்றும் இயைபுடைய நியதிச் சட்டங்களில் குறித்துரைத்தவாறு பதவி வகிப்பதற்கு பணிப்பாளர்கள், பிரதம நிறைவேற்று அலுவலர் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினர் பொருத்தமான மற்றும் முறையான ஆட்கள் என்பதனை உறுதி செய்தல்.

(உ) மேலதிக புதிய நிபுணத்துவ தேவைப்பாடுகள் மற்றும் ஓய்வு பெறும் பணிப்பாளர்கள் மற்றும் முக்கிய முகாமைத்துவ ஆளணியினருக்காக பின் தொடர் ஒழுங்குகள் என்பவற்றுடன் தொடர்புடைய அவசியமான பரிந்துரைகளை காலத்திற்கு காலம் மேற்கொள்ளுதல்.

**திருமதி. எஸ். என். விக்கிரமசிங்க**
*தவிசாளர்*

**திருமதி. தர்ஷனி டி சில்வா**
*கம்பனிச் செயலாளர்.*

**கடன் மீளப்பெற்றுக் கொள்ளல் உப குழு**

இக்குழு HDFC வங்கி பெற்றுக் கொண்ட ஆதனங்களை விற்பனை செய்வதற்கான பொருத்தமான தீர்மானங்களை எடுப்பதற்குப் பொறுப்புடையதாகும்.

திருமதி.எஸ்.என்.விக்கிரமசிங்க (குழுத் தவிசாளர், நிறைவேற்றல்லாத சுயாதீனப் பணிப்பாளர்),திரு.டப்.ஜே.எல்.யூ. விஜேவீர (நிறைவேற்றல்லாத சுயாதீனப் பணிப்பாளர்),திருமதி. கே.டப்.பி.தயாரத்ன (நிறைவேற்றல்லாத சுயாதீனப் பணிப்பாளர்),திரு.எஸ்.ஏ.ஜே.சமரவீர (நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்),திரு.டப்.டி.ஆர்.டி.குணரத்ன (நிறைவேற்றல்லாத சுயாதீனமற்ற பணிப்பாளர்) ஆகியோர் மீளாய்வு அண்டின்போது குழு உறுப்பினர்களாக இருந்தனர்.
திருமதி.கே.டப்.பி.தயாரத்ன 2012.10.31 இல் பதவிதுறந்தார்.

குழு நேரடியாக பணிப்பாளர்கள் சபைக்கு அறிக்கையிடுவதுடன் குழுவுக்கான நியமனங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

மீளாய்வு ஆண்டின்போது குழு 5 கூட்டங்களை நடாத்தியது. பொது முகாமையாளர்/பிரதம நிறைவேற்று அலுவலர், பிரதிப் பொது முகாமையாளர் (நிதி) மற்றும் உதவிப் பொது முகாமையாளர் (கடன் மீளப் பெறல் அழைப்பினூடாக கூட்டங்களில் பங்கேற்றனர்.



**திருமதி. எஸ். என். விக்கிரமசிங்க**
*தவிசாளர்*



**திருமதி. தர்ஷனி டி சில்வா**
*கம்பனிச் செயலாளர்*

**ஒருங்கிணைக்கப்பட்ட இடர் முகாமைத்துவ குழு**

வங்கியின் இடர் முகாமைத்துவம் சபை மட்டத்தில் கிரமமான அடிப்படையில் இச்சபை உப குழுவின் மூலம் சிறப்பாக கையாளப்படுகின்றது. இது தகுதிமிக்க இடர் அலுவலர் ஓரிவரினால் தலைமை வகிக்கப்பட்ட இடர் திணைக்களம் மற்றும் இடர் பணியாற்றல் குழுவினூடாக வங்கியினால் தாபிக்கப்பட்ட இடர் முகாமைத்துவ சட்டகத்திற்கு மேலதிகமானதாகும்.

திருமதி S.N. விக்ரமசிங்க (குழுத் தவிசாளரும் சுயாதீனப் பணிப்பாளரும்), திருமதி.சி.விஜேவர்த்தன (நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்),திரு.எல்.ஈ.சுசந்த சில்வா(நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்), திருமதி.கே.டப்.பி.தயாரத்ன (நிறைவேற்றல்லாத சுயாதீன பணிப்பாளர்) மற்றும் திரு.ஏ.எம்.சந்திர சாகர (நிறைவேற்றல்லாத சுயாதீனமற்றபணிப்பாளர்),திரு.எஸ். திஸாநாயக்க (பதில் பொது முகாமையாளர்),திரு.டி.வி.பத்திரன (உதவிப் பொது முகாமையாளர்),திரு.ஏ.ஜே.அத்துக்கோரள(பிரதம உள்ளக கணக்காய்வாளர்),திரு.டி.எம்.டி.எம்.கே.திஸாநாயக்க (பிரதம முகாமையாளர் - கடன்),திரு.சீ.ஆர்.பி.பாலசூரிய(பிரதம முகாமையாளர் - திறைசேரி),திரு.கே.ஆர்.எம்.கே.பண்டார (இணக்க அலுவலர்), திரு.ஐ.நிஷாந்த (இடர் அலுவலர்) ஆகியோர் மீளாய்வு ஆண்டின்போதுசபை உறுப்பினர்களாக பணியாற்றினர்.

மேற்குறித்த குழுவிற்கான நியமனங்கள் சபையினால் மேற்கொள்ளப்படுகின்றது.

திருமதி.கே.டப்.பி.தயாரத்ன 2012.10.31 அன்று பதவி துறந்ததுடன் திரு.ஜீ.எல்.எஸ்.சேனாதீர 2013 ஜனவரியில் நியமிக்கப்பட்டார்.

குழு மீளாய்வு ஆண்டின்போது 4 கூட்டங்களை நடாத்தியது.

குழு வங்கியில் பின்வரும் குறிக்கோள்களை நிறைவேற்றும் விதத்தில் எப்போதும் செயலாற்றுகின்றது.

(அ) பருவகால ரீதியாக குழுவுக்கு கிடைக்கப் பெற்ற பொருத்தமான இடர் குறிகாட்டிகள் மற்றும் முகாமைத்துவ தகவல்கள் ஊடாக கடன், சந்தை, திரவத்தன்மை மற்றும் உபாய இடர்களை மதிப்பிடுதல்

ஆ அனைத்து முகாமைத்துவ மட்ட குழுக்களின் போதுமான தன்மை, செயல் திறன் என்பவற்றை மீளாய்தல்

(இ) வங்கி கொள்கைகள் மற்றும் ஒழுங்கு படுத்தல் அத்துடன் மேற்பார்வை வேண்டுதல்களின் அடிப்படையில் குழுவினால் தீர்மானிக்கப்பட்ட மட்டத்திற்கு அப்பால் நிகழக்கூடிய குறித்துரைத்த இடர்களின் தாக்கங்களை குறைப்பதற்கு உடனடி சீர்செய்தல் நடவடிக்கை எடுத்தல்

(ஈ) குறித்துரைத்த இடர்களை அடையாளப்படுத்துவதற்கு தவறியமைக்காக பொறுப்புடைய அலுவலருக்கு எதிரான பொருத்தமான நடவடிக்கை எடுத்தலுடன் குழுவினால் மற்றும்இலங்கை மத்திய வங்கியின் வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் பணிக்கப்பட்டவாறு அல்லது பரிந்துரைக்கப்பட்டவாறு அவசியமான சீர்படுத்தல் நடவடிக்கை எடுத்தல்

(உ) பருவாகல ரீதியாக இணக்க தொழிற்பாடுகளை கொண்டு நடாத்தும் அல்லது குழுவுக்கு அறிக்கையிடும் இணக்க அலுவலர் ஒருவரை நியமிப்பதனூடாக வங்கியின் சகல தொழிற்பாட்டு பிரதேசங்களின் மீதும் வங்கிகளில் இணக்கத்தினை மதிப்பிடுவதற்கு இணக்க தொழிற்பாடொன்றினை தாபித்தல்.

வங்கியின் இடர் முகாமைத்துவத்தில் ஏதேனும் கவனயீனங்கள் மீது கருத்திற்கொள்கின்ற ஒழுங்கு படுத்தல் அல்லது மேற்பார்வை இருக்கவில்லை அல்லது வங்கி மேற்பார்வை பணிப்பாளரினால் குறித்துக் காட்டப்படுகின்ற இலங்கை மத்திய வங்கி பணிப்புரையுடன் இணங்காமையும் அத்துடன் அத்தகைய விடயங்கள் தொடர்பில் வங்கியினால் எடுக்கப்பட்ட நடவடிக்கையுடன் சேர்த்துப் பொது மக்களுக்கு வெளிப்படுத்தப்படுவதற்கு நிதியச் சபை மூலம் அவ்வாறு பணிக்கப்பட்டிருக்கவில்லையென்றும் குழு உறுதியளிக்கின்றது.

**திருமதி. எஸ். என். விக்கிரமசிங்க**
*தவிசாளர்*

**திருமதி. தர்ஷனி டி சில்வா**
*கம்பனிச் செயலாளர்*

**நிதியியல் அறிக்கையிடுவதற்கான பணிப்பாளர்கள் பொறுப்புடைமை**

HDFC வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் தொடர்பில் பணிப்பாளர்களின் பொறுப்புடைமை 2007இன் 7ஆம் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக தயாரிக்கப்பட்டு பின்வரும் கூற்றில் குறித்துரைக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுக்கள் தொடர்பில் வெளிவாரி கணக்காய்வாளர்களது பொறுப்புடைமைகள் இவ்வறிக்கையின் 138 மற்றும் 139 ஆம் பக்கங்களில் தரப்பட்டுள்ள கணக்காய்வாளர்களது அறிக்கையில் குறித்துரைக்கப்பட்டுள்ளது.

2007 இன் 7ஆம் கம்பனிச் சட்டத்தின் ஏற்பாடுகளுக்கமைவாக பணிப்பாளர்கள் ஒவ்வொரு நிதியாண்டுக்குமான நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளதுடன் பொதுக் கூட்டமொன்றின்போது அவற்றை சமரப்பிப்பதற்கும் வேண்டப்படுகின்றனர். நிதியியல் கூற்றுக்கள் 2012.12.31 அன்று உள்ளவாறு ஐந்தொகை, அப்போது முடிவுற்ற ஆண்டுக்கான வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றக் கூற்று மற்றும் காசுப் பாய்ச்சல் மற்றும் அவற்றுக்கான குறிப்புக்களை உள்ளடக்குகின்றன.

வங்கியின் நிதியியல் கூற்றுக்கள் ஐந்தொகைத் திகதியன்று உள்ளவாறு வங்கியின் கடமைக் கருமங்களின் உண்மை மற்றும் நியாயமான நோக்கொன்றினையும் ஐந்தொகைத் திகதியன்று முடிவுற்ற நிதியாண்டிற்கான வங்கியின் இலாப நட்டத்தினையும் தருகின்றது.

இவ் நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில் முரன்பாடற்ற விதத்திலும் முக்கிய மாறுபாடு இன்றி பொருத்தமான கணக்கீட்டு கொள்கைகள் தெரிவு செய்யப்பட்டு பிரயோகிக்கப்பட்டது என்றும், அவ்வாறிருப்பின் அவை வெளிப்படுத்தப்பட்டு விவரிக்கப்பட்டு, தீர்ப்புகளும் மதிப்பீடுகளும் மீண்டும் நிகழாதவாறு நியாயமாக இருக்கத்தக்கவாறு மேற்கொள்ளப்பட்டுள்ளதென்றும் இயைபுடையவாறு அனைத்தும் ஏற்புடைய கணக்கீட்டு நியமங்களும் பின்பற்றப்பட்டுள்ளது என்றும் உறுதிப் படுத்துவதற்கு வேண்டப்படுகின்றனர்.

இந்நிதிக் கூற்றுக்களை தயாரிக்கையில் தொடர்ந்து செயலாற்றுதல் அடிப்படையினை பிரயோகித்து நியாயப்படுத்துவதற்கு தொழிற்பாட்டினை கொண்டு நடாத்துவதற்கு வங்கி போதிய வளங்களை கொண்டுள்ளது என்பதனை உறுதி செய்வதற்கும் பணிப்பாளர்கள் தேவைப்படுத்தப் பட்டுள்ளனர். தயாரிக்கப்பட்டு அறிக்கை எடுத்துரைக்கப்பட்ட நிதியியல் கூற்றுக்கள் கணக்கு அடிப்படை புத்தகங்களுடன் முரன்படாதுள்ளதுடன் இலங்கை கணக்கீட்டு நியமங்கள் / இலங்கை நிதியியல் அறிக்கையிடல் நியமங்கள், 2007 இன் 7 ஆம் கம்பனிச் சட்டம், 1995 இன் 15 ஆம் இலக்க இலங்கை கணக்கீட்டு மற்றும் கணக்காய்வு நியமச் சட்டம், 1988 இன் 30 ஆம் இலக்க வங்கித்துறைச் சட்டம் மற்றும் அதனுடனான திருத்தங்கள் அத்துடன் கொழும்பு பங்குச் சந்தை அட்டவணைப்படுத்தல் விதிகளின் தேவைப்பாடுகளுக்கு இணங்க காணப்படுகின்றன. பணிப்பாளர்கள் செயல்திறன் மிக்க மற்றும் அனைத்தும் அடங்கிய உள்ளக கணக்காய்வு முறைமைகளை நிறுவியுள்ளனர். இது உள்ளக பரிசோதனை, உள்ளக கணக்காய்வு முறையாக வங்கி நடவடிக்கைகளை கொண்டு நடாத்துவதற்கு தேவையான முழுமையான நிதியியல் முறைமை மற்றும் ஏனைய கட்டுப்பாடுகள், அதன் சொத்துக்களை பாதுகாத்தல், மேசடிகள் மற்றும் ஏனைய முறைகேடுகளை தடுத்தல் மற்றும் கண்டுபிடித்தல் அத்துடன் முடிந்தவரையில் நடைமுறைக்கேற்றவாறு பதிவேடுகளின் செம்மை மற்றும் நம்பகத்தன்மையினை பாதுகாத்தல் என்பவற்றை உள்ளடக்குகின்றது.

பணிப்பாளர்கள் நிதியியல் கூற்றுக்களை தயாரித்து நிதியியல் கூற்றுக்கள் மீது தங்களின் சுயாதீன கணக்காய்வு அபிப்பிராயத்தை வெளிப்படுத்துவதற்காக பொருத்தமாக மற்றும் அவசியமாக அவர்கள் கருதத்தக்க உள்ளக கட்டுப்பாடுகள் முறைமை பற்றிய ஏதேனும் மீளாய்வுகள் மற்றும் மாதிரி பரிசோதனைகளை கொண்டு நடாத்துவதற்கான ஒவ்வொரு சந்தர்ப்பத்துடனும் HDFC வங்கியின் வெளிவாரி கணக்காய்வாளர்களுக்கு வழங்குவதற்கு தேவைப்படுத்தப்பட்டுள்ளனர்.

ஐந்தொகைத் திகதியன்று உள்ளவாறு HDFC வங்கியினால் கொடுப்பனவு செய்யப்பட வேண்டிய நிலுவை அனைத்து தொடர்புடைய ஒழுங்கு படுத்தல் மற்றும் நியதிச் சட்ட அதிகார நிறுவனங்கள் தொடர்பிலான அனைத்து நியதிச் சட்ட கொடுப்பனவுகளும் கொடுப்பனவு செய்யப்பட்டுள்ளது. அல்லது அதற்காக தொடர்பு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது என பணிப்பாளர்கள் தங்கள் அறிவுக்கும் நம்பிக்கைக்கும் எட்டிய வகையில் திருப்தியடைகின்றனர்.

இக்கூற்றில் குறித்துரைக்கப்பட்டவாறு தங்களின் பொறுப்புக்களை அவர்கள் நிறைவேற்றியுள்ளார்கள் என பணிப்பாளர்கள் அபிப்பிராயப்படுகின்றனர்.

சபையின் கட்டளைப்படி



**திருமதி** S. N. **விக்ரமசிங்க**
*(தவிசாளர்)*

# கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை



විගණකාධිපති දෙපාර්තමේන්තුව
கணக்காய்வாளர் தலைமை அதிபதி திணைக்களம்
AUDITOR GENERAL'S DEPARTMENT

මගේ අංකය / எனது இல / My No. } எப்பீ/எம்/எச்டிஎப்சீ/எப்ஏ/2012 ; ඔබේ අංකය / உமது இல / Your No. } ; දිනය / திகதி / Date } 2013 மே 09

தலைவர்,
இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி.

**இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுதாபன வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்கள் மீது 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 14(2)(சீ) ஆம் பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் தலைமை அதிபதியின் அறிக்கை**

---

இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் 2012 திசெம்பர் 31 இல் உள்ளவாறான நிதி நிலைமைக்கூற்று மற்றும் அத்திகதியில் முடிவுற்ற ஆண்டிற்கான வருமானக் கூற்று, விபரமான வருமானக் கூற்று, உரிமை மூலதனத்தில் மாற்றங்கள் கூற்று, காசுப்பாய்ச்சல் கூற்று மற்றும் குறிப்பிடத்தக்க கணக்கீட்டுக் கொள்கைகள் மற்றும் ஏனைய விளக்கமளித்தல் தகவல்களின் பொழிப்பை உள்ளடக்கிய 2012 திசெம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிக்கூற்றுக்களின் கணக்காய்வு 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 (1) ஆம் பிரிவு மற்றும் 2003 இன் 15 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் மற்றும் 2011 இன் 45 ஆம் இலக்க அதிகாரச்சட்டம் என்பவற்றால் திருத்தப்பட்ட 1997 இன் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கி அதிகாரச்சட்டத்தின் 26(2) ஆம் பிரிவு என்பவற்றுடன் சேர்த்து வாசிக்கப்படும் இலங்கை சனநாயக சோசலிசக் குடியரசு அரசியலமைப்பின் 154(1) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய எனது பணிப்பின் கீழ் மேற்கொள்ளப்பட்டன.

**1.2 நிதிக்கூற்றுக்களுக்கான முகாமைத்துவத்தின் பொறுப்பு**

---

இந் நிதிக்கூற்றுக்களை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கு இணங்க தயாரித்து நியாயமாகச் சமர்ப்பித்தல் மற்றும் மோசடி அல்லது தவறுகளின் காரணமாக ஏற்படக்கூடிய பொருண்மையான பிறழ் கூற்றுக்களிலிருந்து விடுபட்ட நிதிக்கூற்றுக்களைத் தயாரிப்பதற்கு அவசியமானதென முகாமைத்துவம் நிர்ணயிக்கின்ற அத்தகைய உள்ளகக் கட்டுப்பாடுகள் என்பவற்றிற்கு முகாமைத்துவம் பொறுப்பாக உள்ளது.

අංක 306/72 පොල්දුව පාර, බත්තරමුල්ල , ශ්‍රී ලංකාව
இல. 306/72, பொல்துவ வீதி, புத்தரமுல்லை இலங்கை
No.306/72, Polduwa Road, Battaramulla , Sri Lanka

දුරකථනය / தொலைபேசி / Telephone. } 2887028 /034
ෆැක්ස් අංකය / பக்ஸ் இல / Fax No. } 2887223
ඉලෙක්ට්‍රොනික් තැපැල් / ஈ- மெயில் / E-mail. } oaggov@sltnet.lk

**1.3 கணக்காய்வாளரின் பொறுப்பு**

---

எனது கணக்காய்வின் அடிப்படையில் இந் நிதிக்கூற்றுக்களின் மீது அபிப்பிராயம் தெரிவிப்பது எனது பொறுப்பாகும். இலங்கை கணக்காய்வு நியமங்களுக்கு இணங்க எனது கணக்காய்வினை நான் மேற்கொண்டேன். ஒழுக்க நெறி வேண்டுதல்களுடன் நான் இணங்கி நடப்பதனையும் நிதிக்கூற்றுக்கள் பொருண்மையான பிறழ் கூற்றுக்கள் அற்றவையா என்பதற்கான நியாயமான உறுதிப்பாட்டைப் பெற்றுக்கொள்வதற்கு கணக்காய்வு திட்டமிட்டு மேற்கொள்ளப்படுவதனையும் இந்நியமங்கள் வேண்டுகின்றன.

நிதிக்கூற்றுக்களிலுள்ள தொகைகளினையும் வெளிப்படுத்தல்களையும் பற்றிய கணக்காய்வு சான்றுகளைப் பெற்றுக்கொள்வதற்கான செயற்பாட்டு நடைமுறைகளில் கணக்காய்வு ஈடுபடுகின்றது. மோசடி அல்லது தவறுகளின் காரணமாக நிதிக்கூற்றுக்களின் பொருண்மையான பிறழ் கூற்று ஆபத்தின் மதிப்பீட்டினை உள்ளடக்கும் கணக்காய்வாளரின் தீர்மானம் மீது தெரிவு செய்யப்பட்ட நடைமுறைகள் தங்கியுள்ளது. அந்த ஆபத்தினை மதிப்பீடு செய்கையில் சந்தர்ப்பத்திற்குப் பொருத்தமான கணக்காய்வு நடைமுறைகளை வடிவமைக்கும் வகையில் வங்கியின் நிதிக்கூற்றுக்களைத் தயாரித்தல் மற்றும் நியாயமாகச் சமர்ப்பித்தலுக்குரிய உள்ளகக் கட்டுப்பாடுகளை கணக்காய்வாளர் கருத்தில் கொள்கின்றாரேயன்றி வங்கியின் உள்ளகக் கட்டுப்பாடுகளின் வினைத்திறனின் மீது அபிப்பிராயம் தெரிவிக்கும் நோக்கத்திற்காக கருத்தில்கொள்ளவில்லை. முகாமைத்துவத்தினால் பயன்படுத்திய கணக்கீட்டுக் கொள்கைகளின் பொருத்தமான தன்மையினையும் முகாமைத்துவத்தால் மேற்கொண்ட கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயத் தன்மையினையும் மதிப்பாய்வு செய்தல் அத்துடன் நிதிக்கூற்றுக்களின் ஒட்டுமொத்த சமர்ப்பித்தலினை மதிப்பாய்வு செய்தல் என்பவற்றினையும் கணக்காய்வு உள்ளடக்கியுள்ளது. 1971 இன் 38 ஆம் இலக்க நிதி அதிகாரச்சட்டத்தின் 13 ஆம் பிரிவின் (3) ஆம் மற்றும் (4) ஆம் உபபிரிவுகள் கணக்காய்வின் நோக்கெல்லையையும் பரப்பையும் நிர்ணயிப்பதற்கான தற்றுணிபு அதிகாரத்தினை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குகின்றன.

எனது கணக்காய்வு அபிப்பிராயத்திற்கான அடிப்படை ஒன்றினை வழங்குவதற்கு போதியளவும் பொருத்தமானதுமான கணக்காய்வுச் சான்றுகளை நான் பெற்றுக்கொண்டுள்ளேன் என நான் நம்புகிறேன்.

2. நிதிக் கூற்றுக்கள்

2.1 அபிப்பிராயம்

2011 திசெம்பர் 31 இல் உள்ளவாறான இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன வங்கியின் நிதி நிலைமை மற்றும் அத்திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான அதன் நிதிசார் செயலாற்றல் மற்றும் அதன் காசுப்பாய்ச்சல் என்பவற்றினை இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைய உண்மையாகவும் நியாயமாகவும் நிதிக்கூற்றுக்கள் வெளிப்படுத்துகின்றது என்பது எனது அபிப்பிராயமாகும்.

2.2 ஏனைய சட்டங்கள் மற்றும் ஒழுங்கமைப்பு தேவைப்பாடுகள் மீதான அறிக்கை

1988 இன் 30 ஆம் இலக்க வங்கியியல் அதிகாரச்சட்டம் மற்றும் அதன் பின்னரான திருத்தங்கள் என்பவற்றால் வேண்டப்பட்ட தகவல்களை இந் நிதிக்கூற்றுக்கள் சமர்ப்பிக்கின்றன.

2.3 பாராளுமன்றத்திற்கான அறிக்கை

அரசியலமைப்பின் 154(6) ஆம் உறுப்புரையிலுள்ள ஏற்பாடுகளுக்கமைய பாராளுமன்றத்திற்கான என்னுடைய அறிக்கை காலக்கிரமத்தில் சமர்ப்பிக்கப்படும்.

எச்.ஏ.எஸ்.சமரவீர
கணக்காய்வாளர் தலைமை அதிபதி

# வருமானக் கூற்று

| இலங்கை ரூபாவில்<br>டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | குறிப்புக்கள் | 2012 | 2011 |
|---|---|---|---|
| **வருமானம்** | | 2,691,396,936 | 2,385,602,199 |
| வட்டி வருமானம் | 1 | 2,634,758,527 | 2,260,965,957 |
| வட்டிச் செலவுகள் | 2 | (1,805,319,955) | (1,354,293,472) |
| **தேறிய வட்டி வருமானம்** | | 829,438,573 | 906,672,485 |
| கட்டணம் மற்றும் தரகு வருமானம் | 3 | 58,458,381 | 83,664,242 |
| கட்டணம் மற்றும் தரகு செலவுகள் | | - | - |
| **தேறிய கட்டணம் மற்றும் தரகு வருமானம்** | | 58,458,381 | 83,664,242 |
| தேறிய வர்த்தக வருமானம்/(செலவு) | | - | - |
| நிதியியல் சாதனங்களிலிருந்து தேறிய பெறுகை (இழப்பு) | | - | - |
| இலாபம் அல்லது நட்டத்தினூடாக நியாயப் பெறுமதியில் பெயர் குறிக்கப்பட்டவை | | - | - |
| நிதியியல் முதலீடுகளிலிருந்து தேறிய பெறுகை (இழப்பு) | | - | - |
| ஏனைய தொழிற்படு வருமானம் (தேறிய) | 4 | (1,819,973) | 40,972,000 |
| மொத்த தொழிற்படு வருமானம் | | 886,076,981 | 1,031,308,727 |
| கடன்கள் மற்றும் ஏனைய இழப்புகளுக்கான பெறுமதி குறைப்பு மாற்றங்கள் | 5 | 1,496,477 | 10,063,247 |
| **தேறிய தொழிற்படு வருமானம்** | | 884,580,504 | 1,021,245,480 |
| ஊழியர் செலவுகள் | 6 | 458,115,188 | 360,797,118 |
| நிலையற்ற சொத்துக்களின் விலைக் குறைப்பு மற்றும் பெறுமதிக் குறைப்பு | | - | - |
| ஏனைய செலவுகள் | 7 | 303,799,488 | 258,787,491 |
| **பெ.சே.வ.இற்கு முந்திய தெழிற்படு இலாபம்/(நட்டம்)** | | 122,665,827 | 401,660,871 |
| கழி: நிதியியல் சேவைகள் மீதான பெ.சே.வ. | 8 | 49,892,630 | 81,005,187 |
| **பெ.சே.வ.இற்கு பிந்திய தொழிற்படு இலாபம்/(நட்டம்)** | | 72,773,197 | 320,655,684 |
| இணை நிறுவனங்கள் மற்றும் கூட்டு முயற்சிகளின் இலாபப் பங்கு | | - | - |
| வரிக்கு முந்திய இலாபம் /(நட்டம்) | | 72,773,197 | 320,655,684 |
| வரிச் செலவுகள் | 9 | 70,321,030 | 104,636,709 |
| **ஆண்டுக்கான இலாபம் /(நட்டம்)** | | 2,452,167 | 216,018,975 |
| சாட்டத்தக்க இலாபம்: | | | |
| பங்குதாரர்கள் | | 2,452,167 | 216,018,975 |
| கட்டுப்பாடற்ற வட்டிகள் | | - | - |
| | | 2,452,167 | 216,018,975 |
| **இலாபம் பங்கொன்றிற்கான உழைப்பு** | | 0.04 | 3.34 |
| சாதாரண பங்கொன்றுக்கான கலந்த உழைப்பு | | - | - |

# அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று

| டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | குறிப்புக்கள் | 2012 | 2011 |
|---|---|---|---|
| **ஆண்டுக்கான இலாபம்** | | 2,452,167 | 216,018,975 |
| **ஏனைய அனைத்தும் அடங்கிய வருமானம்/(செலவுகள்)** | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரனங்களின் மீள் மதிப்பீட்டு ஒதுக்கில் | | - | - |
| மாற்றம் (நியாயப் பெறுமதித் தெரிவு பின்பற்றப்பட்டால்) | | - | - |
| வரையறுக்கப்பட்ட நலத்திட்டங்கள் மீதான ஒன்று சேர்ந்த பெறுகைகளும் | | - | - |
| இழப்புகளும் பெறுகைகளும் (வெளிநாட்டுத் தொழிற்பாடொன்றிலிருந்து | | | |
| மாற்றுவதிலிருந்து தோன்றுபவை | | - | - |
| விற்பனைக்கானவற்றை மீள் அளவீட்டு மிதான பெறுகைகளும் இழப்புகளும் | | | |
| நிதியியல் சொத்துக்கள் | | - | - |
| காசுப்பாய்ச்சல்காப்புகள் /ஏனையவை மீதான பெறுகைகளும் இழப்புகளும் | | - | - |
| முதலீட்டு ஆவணங்கள் மீள் மதிப்பீடு மீதான பெறுகைகள் | | 53,081,000 | - |
| கழி:- கூறுகளுடன் தொடர்புடைய வரிச் செலவுகள் / (வருமானம்) | | | |
| ஏயைன அனைத்தும் அடங்கிய வருமானம் | | - | - |
| **தேறிய வரியில் ஏயைன அனைத்தும் அடங்கிய வருமானம்** | | 53,081,000 | - |
| **ஆண்டுக்கான மொத்த ஏனையன அனைத்தும் அடங்கிய வருமானம்** | | 55,533,167 | 216,018,975 |
| **சாட்டத்தக்கது:** | | | |
| பங்குதாரர்கள் | | 55,533,167 | 216,018,975 |
| கட்டுப்பாடற்ற வட்டி | | | |

# நிதியியல் நிலைக் கூற்று

இலங்கை ரூபாவில்

| டிசம்பர் 31 அன்று உள்ளவாறு | குறிப்புக்கள் | 2012 | 2011 |
|---|---|---|---|
| **சொத்துக்கள்** | | | |
| மத்திய வங்கியுடனான காசு மற்றும் மீதிகள் | 11 | 107,856,602 | 91,605,426 |
| இலங்கை அரசாங்கப் பிணைகள் | 12 | 872,144,634 | 84,913,933 |
| வங்கிகளின் மீதிகள் | 13 | 411,219,276 | 436,471,254 |
| ஏனை வாடிக்கையாளர்களிடமிருந்து கடன்களும் கிடைக்க வேண்டியவையும் | 14 | 15,965,668,211 | 14,887,525,122 |
| நிதியியல் முதலீடுகள் - முதிர்வுக்காக வைக்கப்பட்டவை | 15 | 2,287,725,326 | 3,346,862,949 |
| ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணங்கள் | 16 | 288,119,377 | 250,012,336 |
| முதலீட்டு ஆதனங்கள் | 17 | 738,677,165 | 692,547,709 |
| பிற்போடப்பட்ட வரிச் சொத்துக்கள் | 18 | 23,128,512 | 17,569,657 |
| ஏனைய சொத்துக்கள் | 19 | 106,067,546 | 119,665,294 |
| **மொத்தச் சொத்துக்கள்** | | 20,800,606,649 | 19,927,173,679 |
| **பொறுப்புக்கள்** | | | |
| வங்கிகள் மற்றும் ஏனைய நிறுவனங்களுக்கான நிலுவை | 20 | 3,189,297,697 | 3,555,867,320 |
| ஏனைய வாடிக்கையாளருக்கான நிலுவை | 21 | 12,922,906,404 | 12,336,016,318 |
| நடைமுறை வரிப் பொறுப்புக்கள் | 22 | 61,881,876 | 45,573,143 |
| ஏனைய பொறுப்புக்கள் | 23 | 2,235,313,589 | 1,653,167,621 |
| **மொத்த பொறுப்புக்கள்** | | 18,409,399,566 | 17,590,624,400 |
| **ஒப்புரவு** | | | |
| பிரகடனப்படுத்தப்பட்ட மூலதனம்/குறித்தொதுக்கப்பட்ட மூலதனம் | 24 | 962,092,936 | 962,092,936 |
| நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | 25 | 61,994,005 | 61,871,397 |
| **பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள்** | 26 | 1,138,801,032 | 1,169,978,442 |
| ஏனைய ஒதுக்குகள் | 27 | 228,319,110 | 142,606,504 |
| மொத்த பங்குதாரர் ஒப்புரவு | | 2,391,207,083 | 2,336,549,279 |
| **கட்டுப்பாடற்ற வட்டிகள்** | | | |
| மொத்த ஒப்புரவு | | 2,391,207,083 | 2,336,549,279 |
| **மொத்த ஒப்புரவுவும் பொறுப்புக்களும்** | | 20,800,606,649 | 19,927,173,679 |
| எதிர்பாரா பொறுப்புக்களும் கடமைப் பொறுப்புக்களும் | | - | - |
| பங்கொன்றிற்கான புத்தகப் பெறுமதி | | 36.95 | 36.11 |

143 தொடக்கம் 157ஆம் பக்கங்கள் வரையுள்ள முக்கிய கணக்கீட்டு கொள்கைகளும் குறிப்புகளும் இந்நிதியியல் கூற்றுக்களின் முக்கிய பகுதியொன்றினை தோற்றுவிக்கின்றன. இந் நிதியியல் கூற்றுக்கள் இலங்கை கணக்கீட்டு நியமங்களுக்கமைவாக தயாரிக்கப்பட்டுள்ளன.

**டி. வி. பத்திரன**
*பிரதம நிதி அலுவலர்*
முகாமையாளர்

**நிமால் ஜே. பி. மாமதுவ**
*பிரதம நிறைவேற்று அலுவலர்/பொது*

பணிப்பாளர் சபையானது பணிப்பாளர் சபையினால் அங்கீகரிக்கப்பட்டு அவர்கள் சார்பாக கையொப்பமிடப்பட்ட இந்நிதியியல் கூற்றுகளை தயாரித்து எடுத்துரைப்பதற்கு பொறுப்புடையவராவர்.

**திருமதி எ. என் விக்ரமசிங்க**
*(தவிசாளர்)*
2013 ஏப்ரல் 30
கொழும்பு

**திருமதி. சி. விஜயவர்த்தன**
*(பணிப்பாளர்)*

# காசுப்பாய்ச்சல் கூற்று

| இலங்கை ரூபாவில்<br>டிசம்பர் 31இல் முடிவுற்ற ஆண்டுக்கானது | 2012 | 2011 |
|---|---|---|
| **தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து காசுப்பாய்ச்சல்** | | |
| கிடைக்கப்பெற்ற வட்டி | 2,512,109,154 | 2,254,935,569 |
| வட்டிக் கொடுப்பனவுகள் | (1,286,202,145) | (1,054,218,343) |
| ஏனைய தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து பெறுகை | 54,393,085 | 113,011,850 |
| ஊழியர்கள் மற்றும் வழங்குனர்களுக்கான காசுக் கொடுப்பனவுகள் | (513,865,159) | (423,404,161) |
| ஏனைய தொழிற்படுத்தல் செயற்பாடுகள் மீதான கொடுப்பனவுகள் | (213,331,567) | (195,781,542) |
| தொழிற்படுத்தல் சொத்துக்களில் மாற்றங்களுக்கு முன்னதான தொழிற்படுத்தல் இலாபம் | 553,103,368 | 694,543,373 |
| **தொழிற்படுத்தல் சொத்துக்களில் (அதிகரிப்பு)/குறைவு:** | | |
| வாடிக்கையாளர்களிடமிருந்து மீளப் பெறப்பட்ட நிதி | 2,705,212,439 | 2,676,093,783 |
| வாடிக்கையாளர்களுக்கான நிதி முற்பணங்கள் | (3,678,415,278) | (4,672,588,403) |
| ஏனைய சொத்துக்கள் | 20,456,990 | (192,700,027) |
| | (952,745,849) | (2,189,194,647) |
| **தொழிற்படுத்தல் பொறுப்புக்களில் அதிகரிப்பு/(குறைவு)** | | |
| வாடிக்கையாளர் வைப்புக்கள் | 586,890,086 | 3,809,682,607 |
| ஏனையவை | 31,642,908 | (42,941,518) |
| | 618,532,994 | 3,766,741,089 |
| வருமான வரிக்கு முன்னர் தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | 218,890,512 | 2,272,089,816 |
| வருமான வரி மற்றும் கருதப்பட்ட பங்கிலாப வரி கொடுப்பனவு | (42,323,040) | (84,535,283) |
| தொழிற்படுத்தல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | 176,567,472 | 2,187,554,533 |
| **முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| கிடைக்கப்பெற்ற பங்கிலாபங்கள் | 17,857 | 15,000 |
| முதலீட்டு பிணை (கொள்வனவு)/விற்பனை | 1,060,429,214 | (1,060,429,214) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் கொள்வனவு | (94,026,260) | (92,375,555) |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் விற்பனை | 3,102,830 | 50,535,077 |
| முதலீட்டு செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | 969,523,641 | (1,102,254,692) |
| **நிதியியல் செயற்பாடுகளிலிருந்து காசுப் பாய்ச்சல்** | | |
| பங்கு விநியோகம்/மீட்பு | - | - |
| பங்கு மூலதனத்தை நோக்கிய பங்களிப்பு மீட்பு | - | - |
| கடன் மீள் கொடுப்பனவு | (1,973,151,227) | (1,479,553,229) |
| கடன்களிலிருந்து வரும்படிகள் | 1,606,581,604 | 1,406,288,106 |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம் | - | (32,320,460) |
| நிதியியல் செயற்பாடுகளிலிருந்து தேறிய காசு | (366,569,624) | (105,585,583) |
| காசு மற்றும் காசுக்கு சமமானவற்றில் தேறிய அதிகரிப்பு | 779,521,489 | 979,714,258 |
| காலத்தின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 2,899,393,749 | 1,919,679,491 |
| காலத்தின் இறுதியில் காசு மற்றும் காசுக்கு சமமானவை | 3,678,915,238 | 2,899,393,749 |
| **காசு மற்றும் காசுக்கு சமமாமனவற்றின் இணக்கம்** | | |
| காசு மற்றும் குறுகியகால நிதிகள் | 201,373,664 | 199,097,283 |
| இலங்கை அரசாங்க திறைசேரி உண்டியல், முறி வங்கி வைப்புகள் | 3,477,541,573 | 2,700,296,466 |
| | 3,678,915,238 | 2,899,393,749 |

# ஒப்புரவு மாற்றக் கூற்று

| ரூபா. "000" | வாக்குப் பங்குகளின் எண்ணிக்கை | பிரகடனப் படுத்தப்பட்ட மூலதனம் | பொது ஒதுக்கு | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | விசேட ஒதுக்கு | முதலீட்டு நிதியம் | பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள் | மொத்தம் | கட்டுப்படாத வட்டி | பொத்த ணப்புரவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2011-01-01 இல் மீதி | 64,710,520 | 962,093 | 19,179 | 35,890 | 46,389 | 3,451 | | 781,661 | 1,848,663 | | 1,848,663 |
| 2011.01.01 இல் SLFRS பின்பற்றுதல் தாக்கம் | | | | | | | | 305,098 | 305,098 | | 305,098 |
| 2011.01.01 இல் மீள் பிரகடனப்படுத்தப்பட்ட மீதி | | 962,093 | 19,179 | 35,890 | 46,389 | 3,451 | | 1,086,759 | 2,153,761 | | 2,153,761 |
| ஆண்டுக்கான மொத்த அனைத்தும் அடங்கிய வருமானம் | | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம்/நட்டம் | | | | | | | | 216,019 | 216,019 | | 216,019 |
| ஏனைய அனைத்தும் அடங்கிய வருமானம் (தேறிய வரியில்) | | | | | | | | | | | |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தும் அடங்கிய வருமானம்** | | | | | | | | 216,019 | 216,019 | | 216,019 |
| **நேரடியாக ஒப்புரவில் அடையாளப்படுத்தப்பட்ட, ஒப்புரவு உரிமையாளர்களுடானான கொடுக்கல்** | | | | | | | | | | | |
| குறித்தொகுக்கப்பட்ட மூலதனத்தின் பங்கு/ அதிகரிப்பு | | | | | | | | | | | |
| மிகை ஊதியம் | | | | | | | | | | | |
| உரிமை விநியோகம் | | | | | | | | | | | |
| காலத்தின்போது ஒதுக்குளுக்கு மாற்றப்பட்டவை | | | 30,965 | | 15,483 | | 53,997 | -100,445 | | | |
| கொடுப்பனவு செய்யப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | -32,355 | -32,355 | | -32,355 |
| தலைமை அலுலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம | | | | | | | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு மீதான பெறுகை/ (இழப்பு) (செலவு முறை பின்பற்றப்பட்டிருப்பின்) | | | -875 | | | | | -875 | | -875 | |
| ஏனையவை | | | | | | | | | | | |
| ஒப்புரவு உரிமையாளர்களுடானான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | | | 30,965 | -875 | 15,483 | | 53,997 | -132,800 | -33,230 | | -33,230 |
| **காலத்தின்போது ஒதுக்குகளுக்கு மாற்றப்பட்டவை 2012-12-31 இல் நிலுவை** | 64,710,520 | 962,093 | 50,144 | 35,014 | 61,871 | 3,451 | 53,997 | 1,169,978 | 2,336,549 | | 2,336,549 |

| ரூபா. "000" | வாக்குப் பங்குகளின் எண்ணிக்கை | பிரகடனப் படுத்தப்பட்ட மூலதனம் | பொது ஒதுக்கு | மீள் மதிப்பீட்டு ஒதுக்கு | நியதிச்சட்ட ஒதுக்கு நிதியம் | விசேட ஒதுக்கு | முதலீட்டு நிதியம் | பிடித்து வைக்கப்பட்ட உழைப்புகள் | மொத்தம் | கட்டுப்படாத வட்டி | பொத்த ணப்புரவு |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| 2012-01-01 இல் மீதி | 64,710,520 | 962,093 | 50,144 | 35,014 | 61,871 | 3,451 | 53,997 | 1,169,978 | 2,336,549 | | 2,336,549 |
| ஆண்டுக்கான மொத்த அனைத்தும் அடங்கிய வருமானம் | | | | | | | | | | | |
| ஆண்டுக்கான இலாபம்/நட்டம் | | | | | | | | 2,452 | 2,452 | | 2,452 |
| ஏனைய அனைத்தும் அடங்கிய வருமானம் (தேறிய வரியில்) | | | | 53,081 | | | | | 53,081 | | 53,081 |
| **ஆண்டுக்கான மொத்த அனைத்தும் அடங்கிய வருமானம்** | | 962,093 | 50,144 | 88,095 | 61,871 | 3,451 | 53,997 | 1,172,431 | 2,392,082 | | 2,392,082 |
| நேரடியாக ஒப்புரவில் அடையாளப்படுத்தப்பட்ட, ஒப்புரவு உரிமையாளர்களுடானான கொடுக்கல் | | | | | | | | | | | |
| வாங்கல்கள் | | | | | | | | | | | |
| குறித்தொகுக்கப்பட்ட மூலதனத்தின் பங்கு/ அதிகரிப்பு | | | | | | | | | | | |
| மிகை ஊதியம் | | | | | | | | | | | |
| உரிமை விநியோகம் | | | | | | | | | | | |
| காலத்தின்போது ஒதுக்குளுக்கு மாற்றப்பட்டவை | | | 245 | | 123 | | 33,262 | -33,630 | | | |
| கொடுப்பனவுசெய்யப்பட்ட பங்கிலாபம் | | | | | | | | | | | |
| தலைமை அலுலகத்திற்கு மாற்றப்பட்ட இலாபம | | | | | | | | | | | |
| ஆதனம், பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் மீள் மதிப்பீடு மீதான பெறுகை/ | | | | -875 | | | | | -875 | | -875 |
| (இழப்பு) (செலவு முறை பின்பற்றப்பட்டிருப்பின்) | | | | | | | | | | | |
| ஏனையவை | | | | | | | | | | | |
| ஒப்புரவு உரிமையாளர்களுடானான மொத்த கொடுக்கல் வாங்கல்கள் | | 245 | -875 | 123 | | 33,262 | -33,630 | -875 | | -875 | |
| **காலத்தின்போது ஒதுக்குளுக்கு மாற்றப்பட்டவை 2012-12-31 இல் நிலுவை** | 64,710,520 | 962,093 | 50,390 | 87,220 | 61,994 | 3,451 | 87,259 | 1,138,801 | 2,391,207 | | 2,391,207 |

# கணக்கீட்டு கொள்கைகள்

## கணக்கீட்டு கொள்கைகள் கூட்டுத் தாபன தகவல்கள்

### 1. குழும அறிக்கையிடல்

இலங்கை HDFC வங்கி 1956 ஆம் ஆண்டின் தேசிய வீடமைப்புச் சட்டத்தின் 11 ஆம் பிரிவின் கீழ் கட்டட நிர்மாண சங்கமாக 1984 ஆம் ஆண்டில் உருவாக்கப்பட்டது. 1997 ஆம் ஆண்டின் 7 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் கீழ் ஒரு கூட்டுத்தாபனமாக இது மாற்றப்பட்டது. 2003 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க இலங்கை வீடமைப்பு அபிவிருத்தி நிதிக் கூட்டுத்தாபன (திருத்த) சட்டத்தின் பிரகாரம் விசேட வங்கித் தகைமைகளைப் பெற்றுக் கொண்டது. ஆய்வுக்குட்பட்ட வருடத்தில் HDFC வங்கியினதும், குழுமத்தினதும் முக்கிய கடமைகள், வீடமைப்பு காணிக் கொள்வனவு, காணி அபிவிருத்தி சம்பந்தமான நடவடிக்கைகளுக்கு கடன் வசதிகளையும் ஏனைய நிதியுதவிகளையும் வழங்குதலாகும்.

### 2. பிரதான செயற்பாடுகளும் தொழிற்பாடுகளின் தன்மையும்

வீடமைப்பு அபிவிருத்தி நிதியளித்தல் கூட்டுத்தாபன வங்கியின் பிரதான தொழில் செயற்பாடுகள் இவ்வாண்டின் போது வீடமைப்பு நோக்கங்களுடன் தொடர்புடைய கடன்கள் மற்றும் ஏனைய வடிவிலான நிதி உதவிகளை வழங்கியமையாகும்.

### 3. தயாரித்தல் அடிப்படை

#### 3.1 இணங்கி ஒழுகுதல் கூற்று

நிதியியல் நிலமைக் கூற்று, அனைத்தும் அடங்கிய வருமானக் கூற்று, ஒப்புரவு மாற்றக் கூற்று என்பன இலங்கைப் பட்டைய கணக்காளர்கள் நிறுவனத்தினால் எடுத்துரைக்கப்பட்ட பொதுவாக ஏற்றுக் கொள்ளப்பட்ட கணக்கீட்டு கொள்கைகள் மற்றும் கணக்கீட்டு நியமங்களுக்கு அமைவாக தயாரிக்கப்பட்டுள்ளதுடன் அவசியமான இடங்களில் வரலாற்று செலவு அடிப்படை மற்றும் நியாயப் பெறுமதி கணக்கீடு முரண்னற்று பிரயோகிக்கப்பட்டுள்ளது. நிதியியல் கூற்றுகள் இலங்கை ரூபாவில் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

இலங்கை பட்டையக் கணக்காளர் நிறுவனத்தினால் அறிமுகப்படுத்தப்பட்ட 2012 ஜனவரியில் இருந்து ஏற்புடைய இலங்கை கண்கீட்டு நியமங்கள் மற்றும் இலங்கை நிதியியல் ஒழுங்குபடுத்தல் நியமங்கள் இப்புதிய கணக்கீட்டினைப் பின்பற்றுவதற்கு அனைத்து குறித்துறைக்கப்பட்ட வியாபார தொழில் முயற்சிக்கான ஆணையினை இந்நிதியியல் கூற்றுக்களை தயாரிப்பதற்கு பயன்படுத்தப்பட்டன. ஒப்பீட்டு இலக்கங்கள் மேற்குறித்த தரநியமங்களுக்கு அமைவாக மீள்குறிப்பிடப்பட்டன.

#### தொகை முழுமைப்படுத்தல்

நிதியியல் கூற்றுக்களில் உள்ள தொகைகள் "நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைத்தல்" இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 01 இனால் அனுமதிக்கப்பட்டவாறு வேறு வகையில் குறிப்பிட்டது தவிர கிட்டிய ரூபாய்க்கு முழுப்பெறுமானம் அளிக்கப்பட்டுள்ளது.

#### கணக்குகளின் வடிவமும் முன்னைய ஆண்டு இலக்கங்களும்

நிதியியல் கூற்றுகள் இலங்கை மத்திய வங்கியினால் குறித்துரைக்கப்பட்ட கணக்குகள் வடிவம் மற்றும் நிதியியல் கூற்றுக்கள் எடுத்துரைத்தல்" இலங்கை கணக்கீட்டு நியமம் இல. 01 இனால் அனுமதிக்கப்பட்டவாறு முன்னைய ஆண்டின் வங்கியுடன் முரண்படாது பின்பற்றப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளுக்கமைவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளது. எவ்வாறாயினும் நிதியியல் கூற்றுக்களில் உள்ள விடையங்களின் எடுத்துரைத்தல் அல்லது வகைப்படுத்தல் திருத்தப்பட்ட போது ஒப்பீட்டுத் தொகைகள் சிறந்த எடுத்துரைத்தல் ஒன்றினை வழங்கும் பொருட்டு நடைமுறை ஆண்டுடன் இணங்குவதற்கு மீள்வகைப்படுத்தல் செய்யப்பட்டுள்ளது.

### 4. சொத்துக்களின் விலை மதிப்பீடு

#### 4.1. வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும்

வாடிக்கையாளர்களுக்கான கடன்களும் முற்பணங்களும் சாத்தியமான கடன் இழப்புக்களுக்கான தேறிய பாதிப்பு இழப்புகள் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

#### 4.2. பாதிப்பு இழப்புகளுக்கான ஏற்பாடுகள்

பாதிப்பு இழப்புகளுக்கான ஏற்பாடுகள் வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் உள்ள "நிதியியல் சாதனங்கள்: அடையாளப்படுத்தலும் அளவீடும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் இல.39 இதற்கமைவாக வாடிக்கையாளர்களுக்கான அனைத்துக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் தொடர்ச்சியான மீளாய்வு ஒன்றின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டது பின்வரும் நுட்பங்கள் அவசியமிக்கவாறு கடன்களின் நியாயப் பெறுமதியினை கணிப்பிடுவதற்கு பயன்படுத்தப்பட்டன

1. கூட்டான பாதிப்பு முறை
2. தனிப்பட்ட பாதிப்பு முறை

#### 4.2.1 கூட்டான பாதிப்பு ஏற்பாடுகள்

சாத்தியமான கடன் இழப்புகளுக்கான கூட்டான பாதிப்பு ஏற்பாடுகள் வங்கியின் நிதியியல் கூற்றுக்களில் உள்ள "நிதியியல் சாதனங்கள்: அடையாளப்படுத்தலும் அளவீடும்" மீதான இலங்கை கணக்கீட்டு நியமம் இல.39 இற் கமைவாக ஆக்கப்பட்டுள்ளன. தனிப்பட்ட பாதிப்பு சாத்தியமில்லாத போது வங்கி சுழல் விகித முறையினை பயன்படுத்துவதன் மூலம் கூட்டு பாதிப்பு ஏற்பாடு மேற்கொண்டிருந்தது.

#### ஈட்டு மற்றும் உத்தரவாதக் கடன்கள்

பாதிப்பு சரிப்படுத்தலுக்காக நியாயமான காலமொன்றுக்காக தவறுதல் சுழற்சி விகிதம் பயன்படுத்தப்பட்டதுடன் தவறுபவர்கள் இல்லாதவிடத்து ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டிருக்க வில்லை

**காசு இலாபக் கடன்கள்**
எந்த நேரத்திலும் வங்கியின் பணிப்பின் பேரில் தவறிய காசு பிடித்து வைத்திருத்தல் கடன்கள் மீளப் பெறக்கூடியதான காசு வைப்பு நிலுவைக் கெதிராக வழங்கப்பட்ட கடன்களுக்காக விசேட ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை.

**ஊழியர் சேமலாப நிதிக் கடன்கள்**
ஊழியர் சேமலாப நிதி பிடித்துவைத்தல் கடன்களின் மதிப்பிடுதலுக்கான கூட்டு பாதிப்பு முறை பயன்படுத்தப்பட்டதுடன் தவறுபவர்கள் இல்லாமைக்காக ஏற்பாடுகள் செய்யப்படவில்லை அத்துடன் 18 மாத நிலுவைகள் வரை வங்கி 0-3 வீச்சுக்கான ஏற்புடைய சுழல் விகிதத்தினை பயன்படுத்துகின்றது. தவறுதல் வகை 18 மாதங்களைவிட அதிகமாக இருப்பின் வங்கியானது தொடர்புடைய வகைக்கு ஏற்புடைய சுழல் விகிதத்தினை பயன்படுத்தியது.

**விற்பனைக்காக பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனங்கள்**
வீடமைப்பு அபிவிருத்தி நிதி கூட்டுத்தாபன வங்கியிடத்தில் ஈடு வைக்கப்பட்ட ஆதனங்கள் நியாயமான காலமொன்றிற்காக வாடிக்கையாளர் தவறுமிடத்து ஏல விற்பனை செய்யப்பட்டதுடன் அத்தகைய ஏல விற்பனையில் விற்பனை செய்யப்படாத ஆதனங்கள் கடன்கள் மற்றும் முற்பணங்களின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ள பெற்றுக்கொள்ளப்பட்ட ஆதனங்களாக அடையாளப்படுத்தப்பட்டுள்ளன

அத்தகைய ஆதனங்களின் பெறுமதி பின்வருமாறு
- நியாயமான உறுதிப்படுத்தலுடன் காசுப்பாச்சல் எதிர்வு கூறப்பட்டிருந்தால் தனிப்பட்ட பாதிப்பு கணிப்பிடப்பட்டிருந்தது
- காசுப் பாச்சல்களுக்காக நியாயமான உத்தரவாதங்கள் இல்லாதிருப்பின் பெற்றுக் கொள்ளப்பட்ட ஆதனங்களுக் கெதிரான கடன்களுக்காக 100% பாதிப்பு

**எதிர்வு கூறப்பட்ட கடன்கள்**
தவறுவோர்கள் மற்றும் தனிப்பட்டவர்கள் இல்லாதிருப்பின் பாதிப்பு ஏற்பாடுகள் செய்யப்பட்டிருக்கவில்லை காசு வசூலிப்பதற்கான நியாயமான உத்தரவாதத்துடன் கூடிய செலுத்த தவறிய கடன்களுக்காக பாதிப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

***4.2.3 திறைசேரி உண்டியல்களும், முறிகளும்***
திறைசேரி உண்டியல்கள் மற்றும் முறிகளின் முதலீடு செலவு அத்துடன் கிடைக்கத்தக்க வட்டி அடிப்படையில் குறிப்பிடப்பட்டுள்ளன.

### 4.3 ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள்
இவை அவற்றின் பயன்படுத்தத்தக்க நிலைக்கு சொத்துக்களை கொண்டு வருவதற்கு அவசியமான ஏனைய செலவுகளுடன் அல்லது இலங்கை கணக்கீட்டு நியம இல. 16 இற்கமைய 3 வருடங்களுக்கு மேற்படாத புதிய மதிப்பீட்டு அறிக்கையினைப் பயன்படுத்துவதன் மூலம் நியாயப் பெறுமதியில் ஆரம்பத்தில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

***4.3.1 அடையாளப்படுத்தல் அடிப்படை***
ஆதனம் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள் சொத்துக்களுடன் இணைந்த எதிர்கால பொருளாதார நலன்கள் வங்கியினுள் பாயக்கூடிய நிகழ்வுத் தன்மை மற்றும் சொத்துக்களுக்கான செலவு நம்பத்தகுந்ததாக இருக்கக் கூடியதெனின் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

***4.3.2 அளவீட்டுக்கான அடிப்படை***
நிரந்தரச் சொத்து அதன் செயல் நிலைக்கு சொத்துக்களை கொண்டு வருவதற்கு ஏதேனும் நேரடியாக சாட்டத்தக்க செலவுடன் சேர்த்து செலவில் அல்லது பெறுமதியில் பதிவு செய்யப்பட்டுள்ளன. ஆதனங்களும், உபகரணங்களும் கீழே (ஆ) குறித்துரைக்கப்பட்ட அடிப்படை மீது ஏற்பாடு செய்யப்பட்ட ஒன்று திரட்டிய பெறுமானத் தேய்வினைக் கழித்துக் குறிப்பிடப்பட்டுள்ளது. மீளாய்வு ஆண்டின் போது புதிய விலை மதிப்பீடுகள் கோரப்பட்டிருக்கவில்லை

தேய்மானமானது வேறுபட்ட வகையான சொத்துக்களின் மதிப்பிடப்பட்ட ஆயட்காலத்தின் மீது நேர்நிரை அடிப்படையொன்றிலான பின்வரும் விகிதத்தில் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

| சொத்துக்களின் வகுப்பு | ஆண்டொன்றுக்கான வீதம் |
|---|---|
| கட்டடங்கள் | 6 2/3 |
| அலுவலக உாகரணங்கள் | 12.50 |
| தளபாடங்களும் பொருத்துகளும் | 10.00 |
| மோட்டார் வாகனங்களும் துவிச்சக்கர வண்டிகளும் | 20.00 |
| பொறித்தொகுதியும் இயந்திரமும் | 25.00 |
| கருவிகளும் உபகரணங்களும் | 12.50 |
| கணனி உபகரணங்களும் தன்னியக்க இயந்திரம் | 12.50 |
| கனணி மென்பொருள் - வெளிநாடு | 25.00 |
| கனணி மென்பொருள் - உள்நாடு | 25.00 |

மொத்த வருடாந்த தேய்மானம் ஆண்டின் போது கொள்வனவு செய்யப்பட்ட மற்றும் ஆண்டுக்காக பயன்படுத்தப்பட்ட சொத்துக்கள் மீது ஏற்பாடு செய்யப்பட்டுள்ளதுடன் அகற்றும் ஆண்டுக்காக தேய்மானம் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கவில்லை. மேலும் நிரந்தரக் காணிகளுக்காக தேய்மானம் ஏற்பாடு செய்யப்படவில்லை.

### 5. முதலீட்டு ஆதனம்
முதலீட்டு ஆதனங்கள் நடைமுறைச் சந்தைப் பெறுமதியல் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் அவை கொண்டுள்ள பெறுமதிக்கும் சந்தைப் பெறுமதிக்கும் இடையிலான வித்தியாசம் ஏனைய அனைத்தும் அடங்கிய வருமானத்தின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது.

## 6. பொறுப்புகளும், ஏற்பாடுகளும்

### 6.1 ஏனைய வாடிக்கையாளர்களுக்கான நிலுவை

இது வட்டியுடைய வைப்புகள், சேமிப்பு வைப்புகள், தவணை வைப்புகள், அழைத்தவுடன் கொடுப்பனவு செய்யத்தக்க வைப்புகள் மற்றும் வைப்புச் சான்றிதழ்கள் என்பவற்றை உள்ளடக்கின்றது. இவை செலுத்தப்படத்தக்க தொகையில் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளன. இவ் வைப்புக்கள் மீது செலுத்தப்பட்ட/ செலுத்தப்படத்தக்க வட்டி வருமானக்கூற்றில் அறவீடு செய்யப்பட்டு ஏனைய பொறுப்புக்களின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

### 6.2 கடன்கள் பெறுதல்

கடன்கள் மீள் நிதியளித்தல் கடன்கள் அழைப்பு காசுக் கடன்கள் மற்றும் நிதி நிறுவனங்களில் இருந்தன கடன்களை உள்ளடக்குவதன் நிலுவை மீதியின் மொத்த பெறுமதியில் காட்டப்பட்டுள்ளன. இவையும் செலுத்தத்தக்க தொகைகளில் ஐந்தொகையில் குறிப்பிடப்பட்டுள்ளது. இக்கடன்கள் மீது கொடுப்பனவு செய்யப்பட்ட/ கொடுப்பனவு செய்யத்தக்க வட்டி தவணைக் கொடுப்பனவு செலவு முறையினைப் பயன்படுத்தி வருமானக்கூற்றில் அறவீடு செய்யப்பட்டதுடன் ஏனைய கூற்றின் கீழ் எடுத்துரைக்கப்பட்டுள்ளது

### 6.3 பணிக்கொடை

காலத்துக்கு காலம் வங்கியில் இணையும் ஊழியர்களுக்காக 1983 இன் 12 ஆம் இலக்க பணிக்கொடைக் கொடுப்பனவுச் சட்டத்தின் கீழ் கொடுப்பனவு செய்யத்தக்க ஓய்வுப் பணிக்கொடை கணக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது. இவ்வகை நிதியியல் நிலைக்கூற்றில் ஏனைய பொறுப்புகளின் கீழ் வகைப்படுத்தப்பட்டுள்ளது. வீ.அ.நி.கூ வங்கியில் 15 வருடங்களுக்கு மேல் பூர்த்தி செய்த விசேட ஊழியர்களுக்காக இ.வ.ஊ.ஓ உடனான கூட்டு ஒப்பந்தத்தின் படி விசேட பணிக்கொடை ஏற்பாடு உண்மை அடிப்படையில் வழங்கப்பட்டுள்ளது.

### 6.4 ஊழியர் சேமலாப நிதி

வங்கியின் ஊழியர்களும் ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் மீது முறையே 12% மற்றும் 8% இனை மத்திய வங்கியினால் முகாமை செய்யப்படும் சேமலாப நிதியத்திற்கு பங்களிப்பு செய்யப்படுகின்றது.

### 6.5 ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியம்

வங்கி ஊழியர் நம்பிக்கை பொறுப்பு நிதியத்தினால் முகாமை செய்யப்பட்ட நம்பிக்கை நிதியத்திற்கு ஒவ்வொரு ஊழியரின் சம்பளத்தின் 3% இனை பங்களிப்புச் செய்கின்றது.

### 6.6 ஏனைய பொறுப்புக்கள்

ஏனைய பொறுப்புக்கள் வட்டி, கட்டணங்கள், செலவுகள் பணிக்கொடை/ ஓய்வூதியத்திற்கான செலுத்தப்படத்தக்க செலவுகள் மற்றும் ஏனைய ஏற்பாடுகளை உள்ளடக்குகின்றது. இப்பொறுப்புக்கள் கொடுப்பனவு செய்யத்தக்க நிதியியல் நிலை திகதியன்று எதிர்பார்க்கப்பட்ட தொகையில் பதிவு செய்யப்பட்டுள்ளது

## 7. வருமானம் அடையாளப்படுத்தல்

### 7.1 கடன்கள் மற்றும் முற்பணங்கள் மீதான வட்டி வருமானம்

வட்டி வருமானமானது அனைத்துக் கடன்களுக்கும் செயற்படத்தக்க வட்டி விகித முறையினைப் பயன்படுத்தி ஒன்று சேர்ந்த அடிப்படையான்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 7.2 நிலுவை வட்டி வருமானம்

கடன் தவணைக் கொடுப்பனவுகளின் தாமதக் கொடுப்பனவுக்கான நிலுவை வட்டி ஊ.சே.நி கடன்கள் தவிர கடன்களுக்கான காசு அடிப்படையொன்றின் மீது அடையாளப்படுத்தப்பட்டுள்ளது.

### 7.3 அரசாங்க பிணைகள் மற்றும் முதலீடுகளில் இருந்து வருமானம்

திறைசேரி உண்டியல்கள் மற்றும் திறைசேரி முறிகள் மீதான கழிவு/ கட்டுப்பணம் செயற்படத்தக்க வட்டி விகித முறையினைப் பயன்படுத்தி முதலீட்டுக் காலத்தின் தவணைக் கொடுப்பனவாக்கப்பட்டுள்ளன.

### 7.4 ஏனைய வருமானம்

தரகு வருமானம் ஒன்று சேர்ந்த அடிப்படையில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனைய வருமானங்கள் காசு அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 8. செலவுகள்

### 8.1 வைப்புகள், கடன்கள் மிதான வட்டி

“நிதியியல் சாதனங்கள் : அடையாளப்படுத்தல அளவீடு” மீதான இலங்கை கணக்கீட்டு நியம 39 ஆம் இலக்க ஏற்பாடுகளுக்கமைய வைப்புகள் மற்றும் கடன்கள் மீதான வட்டிச் செலவு செயல்திறன் வட்டி விகித முறையின் மீது அடையாளப்படுத்தப்பட்டுள்ளதுடன் வருமானக்கூற்றில் அறவிடப்படடுள்ளது.

### 8.2 ஏனைய செலவுகள்

ஆண்டுக்கான இலாம் அல்லது நட்டத்திற்கு வருகையில் வருமானக் கூற்றில் அறவிடப்பட்டுள்ள தொழிற்பாடுகள் மற்றும் வினைத்திறன்மிக்கவாறு ஆதனங்கள் பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை பேனுவதில் கூறப்பட்ட அனைத்து செலவீனங்களும் ஒன்று சேர்ந்த அடிப்படையில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளன.

## 9. வரிவிதிப்பு

வருமான வரிச் செலவு நடைமுறை ஆண்டில் வரி மற்றும் பிற்போடப்பட்ட வரியின் தேரியவை கொண்டுள்ளது. வருமான வரிச் செலவு ஒப்புரவில் அடையாளப்படுத்தப்பட்டுள்ள விடயத்தில் ஒப்புரவில் நேரடியாக அடையாளப்படுத்தப்பட்டுள்ள வகையுடன் இது தொடர்பு படுகின்றது என்ற ரீதியில் அன்றி வருமானக் கூற்றில் அடையாளப்படுத்தப்பட்டுள்ளது

### 9.1 நடைமுறை வரி விதிப்பு

நடைமுறை வரிச் சொத்துக்களும் பொறுப்புக்களும் நடைமுறை அத்துடன் முன்னைய ஆண்டு தொடர்பில் வரி விதிப்பு அதிகார சபைகளிடம் இருந்து மீளப்பெறக்கூடிய அல்லது கொடுப்பனவு செய்ய எதிர்பார்க்கப்பட்ட தொகைகளை உள்ளடக்குகின்றது. தொகைகளை கணிப்பதற்கு பயன்படுத்தப்பட்ட வரிவிகிதங்களும் வரிச் சட்டங்களும் நிதியியல் நிலைமைக் கூற்றில் திகதி

அளவில் சட்டமாக்கப்பட்ட அல்லது அதனைத் தொடர்ந்து சட்டமாக்கப்பட்டவைகளாகும். அதற்கமைய வரி விதித்தலுக்கான ஏற்பாடு 2006 இன் 10 ஆம் இலக்க உள்நாட்டு இரைவரிச் சட்டம் மற்றும் அதனுடனான திருத்தங்களின் ஏற்பாடுகளுக்கு அமைய வரி விதிப்பு நோக்கங்களுக்காக சரிப்படுத்தப்பட்டவாறு ஆண்டுக்கான இலாபத்தின் அடிப்படையில் மேற்கொள்ளப்பட்டுள்ளது, குறிப்பு ' வருமான வரிகள்' மீதான இலங்கை கணக்கீட்டு நியம இல. 12 இனால் வேண்டப்பட்டவாறு வரி செலவுகளின் பிரதான கூறுகள், வலுவிலுள்ள வரிவகிதங்கள் மற்றும் வரிக்கு முந்திய இலாபம் அத்துடன் வரிச் செலவுக்கிடையிலான இணக்கம் ஒன்றினை உள்ளடக்குகின்றது.

### 9.2 பிற்போடப்பட்ட வரிவிகிதம்

